டி. கே. எஸ். சகோதரர்களின்

# தேசபக்தர் சிதம்பரனார்

ஆசிரியர்

**சேலம் எம். சித்தராசன்**

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை—4.

முதற்பதிப்பு : அக்டோபர், 1961.
உரிமை பதிவு செய்யப் பெற்றது.

விலை ரூபாய் இரண்டு

★

பாடல்கள் :
மகாகவி பாரதியார்
சுப்பிரமணிய சிவா
புத்தனேரி சுப்பிரமணியம்

/322

★

சட்டப்படி நாடக உரிமை பதிவு செய்யப்பட்டிருப்பதால் மேடையில் நடிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுமதி பெற வேண்டுகிறோம்.

டி. கே. எஸ். சகோதரர்கள்
'அவ்வையகம்'
139-பி, லாயிட்ஸ் வீதி
சென்னை–6.

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.


தேசபக்தர்
சிதம்பரனார்
இன்ப நிலையம்

# முன்னுரை

'தேசபக்தர் சிதம்பரனார்' நாடகம் தமிழ் நாடக உலகில் போற்றத்தக்க ஒரு புது முயற்சியாகும். கிட்டத்தட்ட இந்தத் தலைமுறையின் துவக்கத்தில் வாழ்ந்த ஒரு பெரியாரின் வரலாற்றை நாடகமாக்குவது நாடக வரலாற்றில் ஒரு புது முயற்சியென்றே நான் கருதுகிறேன்—"வெற்றி பெறுமா?" என்ற ஐயம் எனக்கிருந்தது. ஆனால், டி.கே.எஸ். சகோதரர்கள் வெற்றிக் கொடி ஏற்றிவிட்டனர்.

தமிழகத்தின் பிரதான நகரங்களை மட்டுமன்றி, பாரதத்தின் , தலைநகரிலேயே பாராளுமன்றத் தலைவரும், உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் பார்த்துக் களித்துப் பாராட்டுமளவுக்குத் 'தேசபக்தர் சிதம்பரனார்' பவனி வந்திருக்கிறார்.

இந்த நாடகத்தைத் தமிழரசு இயக்கத் தோழர்களில் ஒருவரான சேலம் திரு சித்தராசன் தயாரித்திருப்பது சொந்தத்தில் எனக்குப் பெருமை தருவதாகும். பாத்திரங்களைக் கையாண்ட முறை, உரைநடையின் சுவை ஆகியவற்றில் தமது திறமையை நன்கு வெளிப்படுத்தி தேசபக்தர் சிதம்பரனாருக்கு அழியாப் புகழ் தேடியிருக்கிறார். அந்தப் புகழுக்கு ஒளியூட்டும் வகையில் பாடல்கள் அமைத்து தந்திருக்கிறார் எனது அரிய நண்பர் புத்தனேரி சுப்பிரமணியம். தங்கள் நடிப்புத் திறமையால், "ஔவையார், இராஜராஜ சோழன், கட்ட பொம்மன்" போன்ற சரித்திர நாடகங்களுக்குச் சிறப்புத் தேடிய டி.கே.எஸ். சகோதரர்கள் அதனையடுத்துத் தேசபக்தர் சிதம்பரனாருடைய புகழையும் பரப்பி வருகின்றனர். இவர்கள் அனைவரையும் தமிழினத்தாரேயன்றி தேசபக்தியுடைய பாரத மக்கள் அனைவருமே பாராட்ட வேண்டும். என் இதயபூர்வமான பாராட்டுதலை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மற்றும் இந்த நாடகத்தின் வெற்றியில் பங்கு கொள்ள அதில் நடிக்கும் ஒவ்வொரு நடிகருக்கும் உரிமையுண்டு. அந்த அதிர்ஷ்டசாலிகளுக்கும், நாடகத்தின் அமைப்புக்கு உதவி புரிந்துவரும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் என் பாராட்டுதல்கள் உரியனவாகுக.

8-10-'61
சென்னை.

ம. பொ. சிவஞானம்

# இந்த நாடகம்

பொதுவாக வரலாறுகளை நாடகங்களாக அரங்கேற்றுவது அவ்வளவு எளிதல்ல. நாங்கள் புதிதாக அரங்கேற்றியுள்ள "தேசபக்தர் சிதம்பரனார்" நாடகம் மிகமிகச் சமீப காலத்தில் நிகழ்ந்த வரலாறு. நாடக நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடந்தவை. 1936—ஆம் ஆண்டு வரை நம்மிடையே வாழ்ந்து மறைந்த மாவீரர் வ. உ. சி. அவரோடு தேசப் பணிபுரிந்த பலர் முதியவர்களாக இன்னும் நம்மிடையே வாழ்கிறார்கள். அவருடைய குடும்பத்தினரும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, கதைச் சுவை ஏற்படுவதற்காக விருப்பம்போல் கற்பனை நிகழ்ச்சிகளைப் புகுத்த இயலாது.

ஆயினும் வ.உ. சி.-யின் வீரலாற்றில் ஓர் உயிரோட்டம் இருக்கிறது. இந்திய விடுதலைப் போரில் செந்தமிழ் நாடு கிளர்ந்தெழுந்து முன்னணியில் நின்ற சிறப்பினை உணர்த்தும் வீர வரலாறு அது. எனவே, வீர உணர்ச்சி ததும்பும் அந்த வரலாற்றை எப்படியாவது மேடையேற்றி வெற்றி பெற வேண்டும் என்ற துடிப்பு எங்களுக்கு ஏற்பட்டது.

செந்தமிழ்ச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்கள் எழுதியுள்ள 'கப்பலோட்டிய தமிழன்' என்ற வரலாற்று நூலை அடிப்படையாகக் கொண்டு சில ஆண்டுகளுக்கு முன் சேலம் திரு. சித்தராசன் அவர்கள் ஒரு நாடகம் எழுதியனுப்பினார்.

அந்த நாடகச் சுவடியை ஓரளவு குறுக்கி 14—4—58-இல், "கப்பலோட்டிய தமிழன்" என்ற தலைப்பில் வானொலியில் நடிக்கக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு ஏற்பட்டது. வானொலி நாடகத்தைக் கேட்டு ரசித்த அன்பர்கள் பலர் மிகவும் பாராட்டி உற்சாகம் ஊட்டினார்கள். அந்த உற்சாகம் காரணமாகவே வ.உ.சி. வரலாற்றை மேடையில் அரங்கேற்றலாம் என்ற துணிவு ஏற்பட்டது.

எங்கள் விருப்பம்போல் ஆசிரியர் காட்சிகளையெல்லாம் திருத்தி எழுதிக் கொடுத்தார். நாடகக் காட்சிகளைத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்களுக்குப் படித்துக் காட்டினேன். அவர்களும் ஒரு சில அரிய யோசனைகளைக் கூறி நாடகத்திற்கு புது மெருகு கொடுத்தார்கள். நாடகம் கச்சிதமாக அமைந்து விட்டது என்ற அத்தாட்சியும் தந்தார்கள். திரு.வ.உ. சி.-யின் குமாரர் திரு. வ. உ. சி. சுப்பிரமணியமும், நாடக அமைப்பு முறை சரியாக உள்ளதெனச் சான்றுபகன்றார்.

நமக்குக் கிடைத்துள்ள புகைப் படங்கள் பலவற்றிலும் வ. உ. சி. தலைப்பாகையுடனேயே காணப்படுகிறார். ஆனால், நாடகத்தில் அவர் தலைப்பாகை இல்லாமல் காட்சி தர வேண்டிய கட்டங்கள் வருகின்றன. தலைப்பாகை இல்லாத சமயம் அவர் எப்படியிருந்தார் என்று அறிவதற்காக அவரோடு சம்பந்தப்பட்ட அன்பர்கள் பலரிடம் விசாரித்தோம். வ.உ.சி. சைவ வேளாளர் மரபின்படி பின்குடுமி வைத்திருந்தார் என்று மட்டும் அறிந்தோம். எனவே ஓரளவு கற்பனை செய்து 'டோப்' தயாரித்தோம். பின்னர் நாடகமேடையில் தயாரிக்கப் பட்ட 'டோப்' குடுமியுடன் வ. உ. சி.-யைப் பார்த்த முதிய வர்கள் சிலர், "வ.உ.சி. சாட்சாத் இதே போலத்தான் இருந் தார்!" என்று பாராட்டினார்கள். வ. உ. சி.யுடன் நெருங்கிப் பழகிய ராஜாஜி அவர்கள் வாயால், "மேடையில் தோன்றிய சிதம்பரம் பிள்ளை, பாரதி, சிவா முதலிய பாத்திரங் களெல்லாம் தத்ரூபமாகவே யிருந்தார்கள்" என்று சொல்லக் கேட்ட பிறகுதான் எங்களுக்கும் மன ஆறுதல் ஏற்பட்டது.

இந் நாடகத்திற்குப் பொருத்தமாக மகாகவி பாரதியின் பாடல்கள் பலவற்றைப் பயன்படுத்திக் கொண்டோம். தீரர் சுப்பிரமணிய சிவா எழுதிய நல்ல பாடல் ஒன்றும் அவர் தோன்றும் காட்சிக்குப் பயன்படுகின்றது. இவை தவிரக் காட்சி களுக்குத் தேவையான மற்றப் பாடல்களை கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் சொற்சுவை பொருட்சுவையோடு மிகப் பொருத்தமாக இயற்றித் தந்துள்ளார்.

இத்தனை சிறப்புக்களுடன், "தேசபக்தர் சிதம்பரனார்" நாடகம் 'ஜாம் ஜாம்' என்று 1960, ஜூலை 1-ல் திருநெல்வேலிப் பொருட்காட்சியில் அரங்கேறியது.

மற்ற எல்லா நாடகங்களையும்விட இந்த நாடகத்தை உருவாக்குவதில் நாங்கள் அதிகப்படியான சிரமம் எடுத்துக் கொண்டோம். அந்த உழைப்புக்கு ஏற்ற வெற்றி கிடைத்தது குறித்துப் பெருமிதம் அடைகிறோம். இந் நாடகத்தின் வெற்றிக்கு ஒத்துழைத்த நண்பர்கள் அனைவருக்கும், ரசிகப் பெருமக்களுக்கும் எங்கள் குழுவின் சார்பில் நெஞ்சுகந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந் நாடகத்தை நூல் வடிவிலே வெளியிட்டுச் சிறப்புத் தேடிய இன்ப நிலையத்தார்க்கும் என் நன்றி.

சென்னை,<br>8–10–'61,

அன்பு,<br>தி. க. ஷண்முகம்.

# என் எண்ணம்

தமிழகத்து வீரத் தியாகிகளின் வரலாற்றை எல்லாம் உலகறியச் செய்யும் பொருட்டு, 'வீரபாண்டியக் கட்ட பொம்மன், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார் போன்றோரின் வீர வாழ்க்கையை எழுதி, தமிழ் மொழியில் உள்ள வீரச் சுவையை நிலைநாட்டிய பெருமை, தலைவர் ம. பொ. சி. அவர்களுடையது என்பதைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

தலைவர் ம. பொ. சி. அவர்களின் கொள்கையைப் பின்பற்றிவரும் நான், சுதந்திரப் போருக்குத் தமிழகத்தைத் தட்டி எழுப்பிய வீரமரபினரின் வாழ்க்கை நாடகமாக்கி நடிக்கப்பெற்றால், தமிழகம் மிக்க பயனடையும் என்பதையும் தமிழ் நாடக வளர்ச்சிக்கு என்னால் இயன்ற பணி புரிந்தவனாவேன் என்பதையும் உணர்ந்தேன். 1954-ல் 'வீரபாண்டியக் கட்டபொம்மன்' என் முதல் நாடகமாக உருப் பெற்றது.

இரண்டாவதாக, 'தேசபக்தர் சிதம்பரனார்' என் இதயத்தைக் கவர்ந்து விட்டார். இலட்சிய நாடகமாக உருவாக்கி முடித்தேன்.

'தேசபக்தர் சிதம்பரனார்' நாடகத்தை, தேசியப் போராட்டத்தின் அருமை தெரிந்த ஒரு நாடகக் குழுவால்தான் சிறப்புடன் அரங்கேற்ற முடியும்! ஆம்; அந்த நாட்களில், 'கதரின் வெற்றி'—'தேச பக்தி' போன்ற தேசிய நாடகங்களை, ஆங்கில ஆட்சியாளரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது நடித்துக் காட்டி, மக்களைச் சுதந்திரப் போராட்டத்திற்குத் திருப்பிய பெருமை தமிழகத்தில், திருவாளர்கள் டி. கே. எஸ். சகோதரர்களுடையது அல்லவா? இதை எண்ணிப் பெருமிதம் அடைந்தேன்.

தலைவர் ம. பொ. சி. அவர்கள் என்னை ஊக்குவித்து, "நாடகப் பிரதியை அவ்வை சண்முகம் அவர்களுக்கு அனுப்பிவை; நாடகம் சிறப்பாக அமைந்திருக்குமானால் நிச்சயம் நடிப்பார்கள், நானும் அவர்களிடம் சொல்வேன்" என்றார்கள். அதன்படியே நாடகத்தை அனுப்பி வைத்தேன். அவ்வை சண்முகம் அவர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

டி.கே.எஸ். சகோதரர்களின் மேடையை 'இராஜராஜ சோழன்' நிரந்தரமாக்கிக் கொண்டிருந்ததால், "தேசபக்தர் சிதம்பரனார்" சுமார் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க நேர்ந்தது.

இந்த இடைக்காலத்தில்தான் நான், கலைஞர் அவ்வை சண்முகம் அவர்களிடம் நெருங்கிப் பழகும் பேறு பெற்றேன். என்மீது தனி அன்பு கொண்டு, என்னை ஓர் முழு நாடக ஆசிரியனாகவே ஆக்கினார். 'தேசபக்தர் சிதம்பரனார்' நாடகம் நெல்லையில் தலைவர். ம. பொ. சி. அவர்கள் முன்னிலையில் அரங்கேறியது. நாடகத்தைக் கண்ணுறும் அறிஞர் பலரும் தமிழ் நாடக வரலாற்றிலேயே இது புதுமை—புரட்சிகரமான திருப்பம் என்றெல்லாம் புகழ்மாலை அணிவிக்கிறார்கள் என்றால் அந்தப் பெருமை அவ்வை சண்முகம் அவர்களுடையதுதான்.

அவ்வை சண்முகம் அவர்களை 'வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் நாடகக் கல்லூரி' எனலாம். அவரிடம் பட்டம் பெற்றவர்களே இன்றையத் திரை உலகில், நட்சத்திர நடிக நடிகையராகவும், சிறந்த கதாசிரியர்களாகவும், நல்ல இயக்குநர்களாகவும், பொருளும், புகழும் பெற்று விளங்குகிறார்கள். அவ்வை சண்முகம் அவர்கள் ஓர் நடிகர் மட்டுமல்ல! ஆன்ற தமிழ்ப் புலவர்; அரசியல் அறிஞர்; நடிப்பின் இலக்கணம்; நல்ல நாவலர்; பாவலர்; நாடக ஆசிரியர்; நாடகத் தயாரிப்பாளர்; ஒப்பனை—ஒளியமைப்பு—காட்சி ஓவியம், ஆடை—அணி—பணி போன்ற நுட்பமெல்லாம் உணர்ந்தவர். அருமைத் தம்பி திரு. டி. கே. பகவதி அவர்களை எல்லா வகையிலும் துணையாகக் கொண்டவர். இந்த மாபெரும் சக்தியால்தான், 'தமிழ் நாடகக் கல்லூரி'யாக— நாடகத் தலைவராக அவ்வை சண்முகம் அவர்கள் விளங்கி வருகிறார்.

இந் நாடகத்திற்குப் பாடல்களை இயற்றி உதவிய புத்தனேரி திரு. ரா. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்ல; உயர்ந்த ரசிகருமாவார். 'தேசபக்தர் சிதம்பரனார்' நாடகம் சிறப்படைய இவர் எல்லா வகையிலும் எனக்குத் துணை புரிந்தார் என்பதை நன்றியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

'தேசபக்தர் சிதம்பரனார்' வாயிலாக என்னை ஓர் 'நாடக ஆசிரியர்' என்ற நிலைக்கு தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்திய நாடகத் தலைவருக்கு என் நன்றி. இந் நூல் வெளி வருவது ஓர் அரிய முயற்சி. தமிழ் மக்களுக்குப் பயனளிக்கும் முயற்சி. இதனை வெளியிட்ட இன்ப நிலையத்தாருக்கும் என் நன்றி.

சேலம், வணக்கம்,
8—10—'61. எம். சித்தராசன்.

# தேசபக்தர் சிதம்பரனார்

## நாடக உறுப்பினர்

வ. உ. சிதம்பரனார்
சுப்பிரமணிய சிவா
சுப்பிரமணிய பாரதி
மாசிலாமணிப் பிள்ளை
பாண்டித்துரைத் தேவர்
வாஞ்சி நாதன்
உலகநாத பிள்ளை
வள்ளிநாயகம் பிள்ளை
கோமதிநாயகம்
நெல்லையப்பன்
கறையான் பிள்ளை
அரங்கசாமி ஐயங்கார்
கலெக்டர் விஞ்சு துரை
சப் கலெக்டர் ஆஷ் துரை
கிருஷ்ணசாமி
நீலகண்ட பிரம்மசாரி
வக்கீல் சடகோபாச்சாரி
பாரிஸ்டர் ரிச்மண்ட்
நீதிபதி பின்ஹே
உலகநாதன் (குழந்தை)
ஆறுமுகம் (குழந்தை)
முத்து
சீதாராமய்யர்
ஜான்
பிரவுன்
ஏட் சுப்பிரமணிய பிள்ளை
மீனாட்சியம்மை
பொன்னம்மாள்
அம்புஜம்

இன்ஸ்பெக்டர், சார்ஜெண்டு, ஜெயிலர்,
மில் நிர்வாகி, குமாஸ்தா, போலீசார்,
வார்டர்கள், கைதிகள், தொழிலாளிகள்,
பொதுமக்கள் முதலியோர்.

★

# தேசபக்தர் சிதம்பரனார்

## காட்சி : 1

இடம் :—சிதம்பரனார் வீடு.

உறுப்பினர்கள் :—வ. உ. சிதம்பரனார், கோமதிநாயகம், நெல்லையப்பர், மீனாட்சியம்மை.

### தொடக்கப் பாட்டு

சிதம்பரனார்—வ. உ. சிதம்பரனார்
தேச பக்தர் தியாக சீலர்
சிதம்பரனார்—வ. உ. சிதம்பரனார்

சுதந்திரம் நமது பிறப்புரிமை எனத்
துடித் தெழச் செய்தாரே !—தேசத்
தொண்டினுக் குடல் பொருள் ஆவியும் ஈந்த
தூயவர் வரலாறே !—தியாகச்
சுடரொளி வரலாறே ! (சிதம்)

கூனனும் நிமிர்ந்தெழுவான் !—கருத்துக்
குருடனும் விழிபெறுவான் !—சிறு
பூனையும், புலியாய்ச் சீறிடும் வீரம்
பொங்கிடும் வரலாறே !—நமக்குப்
புகழ்தரும் வரலாறே ! (சிதம்)

—புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

## கூட்டப் பாட்டு

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே !—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே !—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே !—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ ?—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ ?

மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே !—அவர்
தங்கமதலைகள் ஈன்றமுதூட்டித்
தழுவிய திந்நாடே ! - மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே !—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ ?

—பாரதி

*[சிதம்பரம் பிள்ளை ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறர். கோமதிநாயகம் பிள்ளையும், நெல்லையப்பரும், உள்ளே வருகிறர்கள்.]*

**கோமதி :** வணக்கம் வக்கீலையா.

**வ. உ. சி. :** ஓ! கோமதிநாயகம் பிள்ளையா ? வாரும் வாரும், உட்காரும்.

*[வ. உ. சியும், வந்தவர்களும் உட்காருகிறர்கள்.]*

நாம் சந்திச்சு நெடுநாட்களாகிறது. இல்லையா? (நெல்லையப்பரைக் காட்டி) இவர்கள் யார்?

**கோமதி :** நம்ம ஊரு—நெல்லையப்ப பிள்ளை. பெரிய விவசாயக் குடும்பம்.

**வ. உ. சி.** : *ஓ! நினைவிருக்கிறது. அப்பா சொல்லியிருக்கிறார்கள். அண்ணன் தம்பிகள் ஒற்றுமைக்குப் பெயர் பெற்ற குடும்பமாச்சே!!......*

*[நெல்லையப்பர் இடைமறித்து.]*

**நெல்லை** : அதெல்லாம் பெரியவங்களோடே மலையேறிப் போச்சு. இப்பக் குத்துப்பழியும் வெட்டுப்பழியுமாக் கெடக்கு எங்க குடும்பத்திலே!

**வ. உ. சி.** : (வியப்போடு) : *அப்படியா?*

**நெல்லை** : *ஆமாங்க. அதுக்காகத்தான் ஐயாவாளைப் பாத்துட்டுப் போகலாண்ணு வந்தோம்.*

**வ. உ. சி.** : *ஓஹோ!......*

**கோமதி**: *ஆனு சாரவாளுக்கு இப்போ எத்தனையோ வேலை. அவகாசம் இருக்குமோ என்னமோன்னுதான் சந்தேகப்பட்டோம். கேட்டேளா ?...... நெலைமை யெல்லாம் எங்களுக்குத் தெரியும். சாரவாள், தொழிலாளர் சங்கத் தலைவராயிருக்கிறதும், கோரல் மில்லுலே இப்போ ஸ்டிரைக் ரொம்ப மும்முரமா நடக்கிறதும் கேள்விப்பட்டோம். கேட்டேளா? இருந்தாலும் இந்தக் கேசை உங்க சொந்த விஷயமாகக் கொஞ்சம் சிரத்தையோட கவனிச்சா நல்லாயிருக்கும்.*

**வ. உ. சி.** : *இவ்வளவு பீடிகை என்னத்துக்கு? சும்மா விஷயத்தைச் சொல்லுங்கள்.*

**நெல்லை** : வக்கீலையா, என் சொத்துப் பூராவும் போனுலும் கவலையில்லை. ஒண்ணு இந்த நெல்லையப்பன் தொலையணும். இல்லை ஏந்தம்பி செல்லையா ஒழியணும். ரெண்டிலே ஒண்ணு தீந்தாகணும். அந்த முடிவோடதான், கோமதிநாயகத்தையும் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன். (கோமதி நாயகத்தைப் பார்த்து) ஏன் வே! சொல்லுமே, பேசாமே இருக்கீரே?

**கோமதி :** அதான் நீரு சொல்லுதீரில்லா- (வ. உ. சி. யிடம்) சாரவாளுக்கில்லா; கேட்டேளா? இவங்க நெலங்களிலே நீர்ப்பாசன பாத்தியதை சம்பந்தமாக் கீழ்க் கோர்ட்டிலே இவங்க தம்பிக்குச் சாதகமாத் தீர்ப்பாயிப் போச்சு. கேட்டேளா? அதை எதிர்த்து ஒரு அப்பீல் தாக்கல் செய்யணும். அதுக்காகத்தான் உங்ககிட்ட வந்திருக்கோம்.

**வ. உ. சி.** (எழுந்து யோசனையுடன் உலவியவாறு) ஒற்றுமை நிலவிய குடும்பத்தில் உட்பகையா?

**நெல்லை :** பின்னே—இந்தப் பொடிப்பய முரண்டுபண்ணிஞ நான் விட்டுருவனு?

**வ. உ. சி. :** அதற்காக அண்ணன் தம்பிகளுக்குள் சண்டைக்குக் கச்சை கட்டிக்கொண்டு நிற்கிறீர்களா?

**கோமதி :** சாரவாளுக்கில்லா, கேட்டேளா? நான் ஒண்ணு சொல்லிப் போடுதேன். கோர்ட்டுலே ஏறிஞத்தான் இவங்க வெவகாரம் தீரும்.

**வ. உ. சி. :** கோமதிநாயகம், கோர்ட்டேறுவது எளிது. வழக்கை ஏற்று நடத்துவது எனக்குச் சுலபந் தான். லாபமுங்கூட. ஆனல் வழக்கு முடிவதற்குள் இவர்கள் குடும்பச் செல்வமெல்லாம் கோர்ட்டுக்காகக் கரைந்து போகுமே யென்றுதான் யோசிக்கிறேன்.

**நெல்லை :** போகட்டுமே; அதுக்காக நீங்க ஏன் கவலைப்படுதீங்க?

**வ. உ. சி. :** நான் வக்கீலாக மட்டும் இல்லை. ஒரு மனிதனுகவும் இருக்கிறேன்; அதனுல்தான். வெறும் வக்கீலாக இருந்தால் உங்கள் வழக்கை எடுத்து நடத்தி விடுவேன்.

**நெல்லை :** பின்னே?......பொறவு......அப்புறம்......

**வ. உ. சி. :** கோமதிநாயகம், அண்ணன் தம்பிகளுக்குள் சமரசமாகப் போக, ஏதும் வழியிருக்கிறதா என்று பார்க்கலாமே.

**நெல்லை** (வெறுப்போடு) : தீயை வையுங்க;...ம்...ரசமில் லாத யோசனை. அந்தப்பய இவ்வளவு தொலைவுக்கு வந்தப்புறம் சமரசமாவது, மண்ணாவது?

**கோமதி :** வக்கீலையா, கேட்டேளா? அப்பீலுக்கு ஏதாவது வழி இருக்கா, இல்லையா அதைப் பாருங்க முதல்லே.

**வ. உ. சி. :** கோமதிநாயகம், அண்ணனும் தம்பியும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஒன்றுபட்டு விட்டால், இந்த வழக்கேயில்லாது போகுமே. இருவரையும் ஒருநாள் என்னிடம் அழைத்து வாரும். நான் சமரசம் செய்து வைக்கிறேன்.

**நெல்லை :** கேட்டீராவே, (எழுந்து) வாரும் வாரும். வக்கீலையா நல்ல மனசோட நமக்குக் கேசை நடத்துவாகண்ணு தோணலை. வேற வக்கீலைப் பார்ப்போம். எந்திரியும் வே!.

**வ. உ. சி. :** அப்படியானால்......

**கோமதி :** ஏதோ நமக்கு வேண்டியவாளாச்சேன்னு வந்தேன். அப்ப நாங்க வரட்டுமா?

**வ. உ. சி. :** எது நல்லது, எது கெட்டது என்றே உங்களுக்குத் தெரியவில்லை. அடிப்படையில் ஒற்றுமை உணர்ச்சி இல்லாததினால்தான் அயலான் நம்மை ஆண்டுகொண்டிருக்கிறான். சரி; உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள், போய் வாருங்கள்.

[இருவரும் போகும்போது]

**நெல்லை :** நாம வேதனை தீருமின்னு இங்கே வந்தா வக்கீலையா வேதாந்தம் பேசுதாரு, வேதாந்தம்...

**கோமதி** (மெதுவாக) : வே, சத்தம் போட்டுப் பேசாதியும். வக்கீலையாவைப்பத்தி ஒமக்குத் தெரியாது. அவாளுக்குக் கோபமே வராது. வந்திச்சின்னா அப்புறம்......

[இருவரும் போகிறார்கள், வ. உ. சி. சிரிக்கிறார்; அவருடைய மனைவி மீனாட்சி வருகிறார்.]

வ. உ. சி. : என்ன மீனுட்சி, காரணமில்லாமல் சிரித்துக் கொண்டிருக்கிறேன் என்றுதானே நினைத்தாய்?

மீனுட்சி : நடந்ததையெல்லாம் நானும் பார்த்துக் கொண்டுதானிருந்தேன். அவர்களைச் சொல்லிக்குற்றமில்லை. நீங்கள் ஒரு லட்சிய வக்கீல் என்பது அவர்களுக்குத் தெரியாது.

வ. உ. சி : என்ன இருந்தாலும் வீடு தேடி வந்த வரும்படியை விட்டு விட்டேன் என்று என்மீது உனக்குக் கொஞ்சம் வருத்தம், இல்லையா மீனுட்சி?

மீனுட்சி : அப்படியொன்றுமில்லை நீங்கள் எது செய்தாலும் பெருமையோடு வரவேற்பேன்…ஆனுல்?

வ. உ. சி. : ஆனுல்…என்ன? சொல்லு.

மீனுட்சி : உங்கள் அப்பாவுக்கு வருத்தம் தரக்கூடியதாக இருக்கக்கூடாது என்பதே என் கவலை.

வ. உ. சி. : சரி மீனுட்சி; கோர்ட்டுக்கு நாழியாகிறது. போய் வருகிறேன். அப்படியே மில் தொழிலாளர் சங்கத்திற்கும் போகவேண்டிய வேலை இருக்கிறது.

மீனுட்சி : ஆமாம்; காலையில்கூடச் சில தொழிவர்ளப் பெண்கள் என்னிடம் வந்து கண்ணீர் வடித்துச் சென்ருர்கள். எப்படியாவது இந்த வேலை நிறுத்தத்தை விரைவில்முடிக்க ஏற்பாடுசெய்யுங்கள். தொழிலாளர்களின் நியாயமான உணர்ச்சி, எங்கே வெறியாக மாறிவிடுமோ என்றுதான் கவலையாயிருக்கிறது.

வ. உ. சி. : சிதம்பரம் தலைவனுக இருக்கிற வரையில் அந்தக் கவலையே வேண்டாம் உனக்கு. வரட்டுமா மீனுட்சி?……

[போகிருர்.]

[காட்சி முடிவு]

## காட்சி : 2

இடம் :—வீதி.

உறுப்பினர்கள் :—இரு தொழிலாளர்கள், கறையான் பிள்ளை.

[இரண்டு தொழிலாளர்கள் வீதியில்பேசிக்கொண்டே வருகிறுர்கள்.]

முதல் தொழிலாளி மாடசாமி : தலைவர்னு இப்படீல்லா இருக்கணும்.

இரண்டாவது, நாகலிங்கம் : மில்லு முதலாளிகளுக்கு இப்பவே கொலை நடுக்கம் எடுத்துடுச்சே. காரைப் போட்டுக்கிட்டுக் கலெக்டர் பங்களாவை வட்டம் போடுதானுகளே......

மாடசாமி : கலெக்டரு பங்களாவை வட்டம் போட்டு என்ன செய்ய? காரியம் நடந்துடுமா? நம்ம தலைவர் சிதம்பரம்பிள்ளை வீட்டு வாசப்படியை எண்ணியாகணும் வெள்ளைக்கார முதலாளிக.

நாகலிங்கம் : மாடசாமி, சங்கதி தெரியுமா உனக்கு?

மாடசாமி : என்ன?

நாகலிங்கம் : அந்த அரங்கசாமி ஐயங்காரு வக்கீலய்யன் நம்ம தலைவரு மேலே இல்லாததையும், பொல்லாததையும் சொல்லிக்கிட்டுத் திரியிரானுமில்லா?

மாடசாமி : ஆமா, நானும் கேள்விப்பட்டேன். நம்ம ஆளுகளே துரோகிகளா இருக்கானுகளே. அதனுலே தானே எவன் எவனே நம்மை ஏறி மிதிக்கிருன்.

[கறையான்பிள்ளை வருவதைப் பார்த்து.]

நாகலிங்கம் : மாடசாமி, அந்தா வாருனே; அவன் அரங்கசாமி வக்கீலய்யன் குமாஸ்தா கறையான்பிள்ளையில்லா?

மாடசாமி : ஆமா, (கறையான்பிள்ளை வந்ததும்) யோவ் கறையான்பிள்ளை, எங்கய்யா போறீரு இந்தப்புறம்?

நாகலிங்கம் : இங்கே என்ன நடக்குதுங்கறதைத் தெரிஞ்சிட்டு வர ஐயங்காரு அனுப்பியிருப்பாரு. யோவ்!... அப்படித்தானேயா கறையான்பிள்ளை?

கறையான் : நோ, நோ. நானாகத்தான் இப்படி வந்தேன். ஸ்டிரைக் எவ்வளவுலே இருக்கு?

மாடசாமி : ஏன்? நாங்கள்ளாம் வேலையில்லாமப் பட்டினி கெடந்து செத்துப் போவோம்னு நெனைச்சீரா? அந்தப் பாச்சால்லாம் பலிக்காது வே! எங்க தலைவர் சிதம்பரம் பிள்ளை ஆயிரம் பேருக்கு வேற வேலை வாங்கிக் குடுத்திருக்காரு தெரியுமா? மாசம் ஒண்ணு ஆனாலும் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்குமையா கறையான் பிள்ளே!

நாகலிங்கம் : பேரைப்பாரு! கறையான் பிள்ளை! வே, யாரையா உமக்கு இந்தப் பேரு வச்சது?

கறையான் : எல்லாம் எங்க ஐயங்காருதான். நம்ம சொந்தப்பேரு சுடலைமாடம் பிள்ளை. ஆபீசுக்கு வர்ற கட்சிக்காரங்களை நான் கறையான் மாதிரி அரிச்சுப் போடுறேனாம். அதனாலே எங்க பாரிஸ்டர் கறையான் பிள்ளை அப்படீன்னு செல்லமாக் கூப்பிடுறாரு.

மாடசாமி : ஏன்பர! ஒங்க அய்யங்காருக்கு நாங் என்னையா செய்தோம்? ஏன்யா இப்படி ஏழைத் தொழிலாளிங்க வயத்துலே அடிக்கிறாரு?

கறையான் : மில்லுக்கு அவர்தானே லீகல் அட்வைசரு; அவரு வயித்துப் பொழைப்பையும் பார்க்க வேண்டாமா?

நாகலிங்கம் : யோவ்! பொல்லாத ஆளுய்யா நீரு!

கறையான் : இல்லேன்னா பாரிஸ்டர் அரங்கசாமி ஐயங்கார் கிட்ட வேலை பாக்க முடியாதுங்களே. நீங்க ஒண்ணும் கவலைப்படாம ஸ்டிரைக்கைத் தொடர்ந்து

நடத்துங்க. சிதம்பரம்பிள்ளை தலைவராயிருக்கிற வரைக்கும் பயமே வேண்டாம், வெற்றி உங்களுக்குத்தான்.

மாடசாமி: ஹு! அதை நீரு சொல்லணுமா? எங்களுக்கு உபதேசம் பண்ணீட்டுப் போகத்தான் வந்தீரா?

கறுப்பரன்: எம்மேலே கோவிச்சிக்கிடுதீளே.

[போகிறார்.]

மாடசாமி: உளவு பாத்துட்டுப் போக வந்திருக்கான் நாக லிங்கம்!—இவனைத் தூக்கிப்போட்டு நல்லா வெள்ளாவி வச்சா என்ன?

நாகலிங்கம்: சேச்சே! கடைசி வரைக்கும் பொறுமையாயிருந்து வேலை நிறுத்தத்தை நடத்தணும்னு தலைவர் சொல்லியிருக்காரு. தப்புத் தவறு ஒண்ணும் நடந்துடப் படாதுப்பா.

[பேசிக்கொண்டே போகிறார்கள்.]

[காட்சி முடிவு]

## காட்சி: 3

இடம் :—தூத்துக்குடிக் கடற்கரை.

உறுப்பினர்கள் :—வள்ளிநாயகம், மாசிலாமணி, வ. உ. சிதம்பரனர்.

[வள்ளிநாயகமும், மாசிலாமணியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

வள்ளி: மாசிலாமணி, என்ன இன்னும் சிதம்பரத்தைக் காணோம்?

மாசிலா: வரும் வழியில்தானே கோரல் மில் தொழிலாளர் சங்கம் இருக்கிறது. அங்கு போயிருந்தாலும் இருக்கலாம்

வள்ளி : ஓ! அப்படித்தானிருக்க வேண்டும். (சலிப்புடன்) என்னவோ நம்ம சிதம்பரம் இப்படிப் பொதுக் காரியங்களில் தலை கொடுக்கிறது எனக்குப் பிடிக்கவில்லை.

மாசிலா. (சிரித்துக்கொண்டு): உங்களுக்குக் கடற்கரைப் பேச்சுத் துணைக்கு அண்ணுச்சி இல்லேங்கிற கவலை!

வள்ளி : நான் அதுக்காகச் சொல்லலேப்பா, சிதம்பரத்தின் இந்தப் போக்கு எங்கே கொண்டுபோய் விடுமோ என்றுதான்......

மாசிலா : (தொலைவில் வ. உ. சி. வருவதைப் பார்த்து) அதோ அண்ணுச்சியே வந்துட்டாங்க. (சிரித்தபடி) அவர்களிடத்திலேயே கேளுங்களேன்.

[வ. உ. சி. வருகிறார்]

வ. உ. சி. : என்ன வள்ளிநாயகம், என்னிடத்தில் என்ன கேட்கப் போகிருய்?

வள்ளி : என்னப்பா கச்சேரி உடைகளைக்கூட மாற்றிக் கொள்ளாமல் கடற்கரைக்கு வந்திருக்கிருயே!

வ. உ. சி. : நீங்கள் காத்துக் கொண்டிருப்பீர்களே என்று தான் வீட்டுக்குக்கூடப் போகாமல் வந்தேன். (சலிப்புடன்) சே, என்ன தொழிலப்பா வக்கீல் தொழில்.

வள்ளி : (சிரித்தபடி): என்னப்பா சலித்துக் கொள்கிருய்? நீ ஒரு வழக்கிலே ஆஜராகிருயென்று தெரிந்தால் போலீஸ்காரர்களே பயப்படுகிருர்களே பயப்படுகிருர்கள்!......கூடியவரை பொய் ஜோடனைகளைக் குறைத்துக் கொள்கிருர்கள்; உனக்கென்னப்பா?

மாசிலா : அண்ணுச்சி, நீதிமன்றங்கள் இருக்கிற வரையில் வக்கீல் தொழிலும் இருந்துதானே தீரணும். வக்கீல் தொழில் இருக்கிற வரைக்கும் தங்களைப்போன்ற நல்லவர்கள் அதில் ஈடுபடா விட்டால் நீதி எப்படி நிலைக்கும்?

வ. உ. சி. : என்ன தம்பி நீதி! பண்டைக் காலத்தில் நம்முடைய வழக்குகள் எல்லாம் நீதி மன்றங்களுக்கா போய்க் கொண்டிருந்தன?

வள்ளி : போகாமல்?......

வ. உ. சி. : பெரும்பாலும் பஞ்சாயத்துகள் மூலமே தீர்க்கப்பட்டு வந்ததப்பா.

வள்ளி : அப்படியா?

வ. உ. சி. : ஆம் இன்றும் நாம் அப்படிச் செய்யமுடியும். இதை நான்மட்டும் சொல்லவில்லை. குஜராத்திய வழக்கறிஞர் ஒருவரும் இதே கருத்துக்களைத்தான் இப்பொழுது வற்புறுத்தி வருகிறார்.

வள்ளி : அவர் யாரப்பா?

வ. உ. சி. : (சிரித்தபடி) : பத்திரிகை படித்துப் பொது விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் பழக்கமிருந்தால் தானே உமக்கு?...

மாசிலா . நன்றாகச் சொன்னீர்கள் அண்ணாச்சி.

வள்ளி : அட, நையாண்டி இருக்கட்டுமப்பா. யார் அந்தக் குஜராத்தி வக்கீல்?

வ. உ. சி. : அவர் பெயர் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி.

வள்ளி : ஓஹோ ! அவரைப்பற்றிச் சொல்லுகிறாயா ?

வ. உ. சி. : ஆம் ; இப்போது தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களைக் கொடுமைப்படுத்தி நிறவெறிப் போராட்டம் நடைபெறுகிறதல்லவா ? அங்கே தான் வெள்ளையர்களை எதிர்த்துப் போராடி வீர முழக்கம் செய்து கொண்டிருக்கிறார் காந்தி. அவர் ஒரு குஜராத்தியராயிருந்தும், நம் தமிழ் நாட்டி லிருந்து தென்னாப்பிரிக்காவில் குடியேறியிருக்கும் தமிழர்களுக்காக, எவ்வளவு பொறுப்போடு பாடு பட்டு வருகிறார். அவரிடத்திலே எனக்கு ஒரு தனி மதிப்புண்டு. அவரல்லவா உண்மையான இந்தியர்.

வள்ளி: (சலிப்புடன்): ஊம், அது எப்படியோ போகட்டும். இந்தப் பொதுநலத் தொல்லையெல்லாம் உனக்கு ஏதற்குச் சிதம்பரம்? முதலில் தேவையான அளவுக்குப்

பொருள்திரட்ட முயற்சி செய். வக்கீல் தொழிலைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பிறகு பேசலாம்.

வ. உ. சி. : பேசுவதென்ன? 'வக்கீலாய் நின்று வழிப் பறியே செய்யும் திக்கிலார்' என்று சொல்வது மிகப் பொருத்தமாக இருக்கும்.

வள்ளி : என்ன! வக்கீல்கள் வழிப்பறி செய்யக் கூடியவர்களா?

வ. உ. சி. : ஆம், அதில் என்ன சந்தேகம்? வள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

"எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு."

கேவலம் பணத்திற்காகப் பொய்யுரைப்பது, போக போக்கியங்களை அடைவது, இதுதானே வக்கீல் தொழில்.

வள்ளி : ஊம், இப்பொழுது திருக்குறளை வேறு உருப் போட ஆரம்பித்திருக்கிறாய்; இல்லையா?

வ. உ. சி. : ஏனப்பா! திருக்குறளைப் படிப்பது கூட உனக்குப் பிடிக்கவில்லையா? ஊம். நீ எந்தக் காலத்தில்தான் உருப்படப் போகிறாயோ?

*[கடற்கரை ஓரமாகச் சென்று கடலையே பார்த்துக் கொண்டு நிற்கிறார் வ. உ. சி.]*

மாசிலா : (வள்ளிநாயகம் பிள்ளையிடம்) : அண்ணாச்சி வக்கீல் தொழிலைப்பற்றி நம்ம அண்ணாச்சி கொண்டிருக்கும் எண்ணம் சரியானதென்று எனக்குத் தோன்றவில்லை. உலக வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பல தேசங்களில் வக்கீல்கள்தான் அரசியல் துறையில் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு நம்ம அண்ணாச்சியையே நான் குறிப்பிடுவேன். அவர்களும் விரைவில் தமிழகத்தில் மிகப் பெரிய அரசியல் பொறுப்பை ஏற்கப் போகிறார்கள்? தென்னாப் பிரிக்காவில், இப்போது நிறவெறிப் போராட்டத்தை

நடத்திவரும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியும் ஒரு வக்கீல் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

*[வள்ளிநாயகம் சிதம்பரம்பிள்ளை, அருகில் சென்று.]*

வள்ளி : சிதம்பரம், என்ன இது ? திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டு யோசனையில் ஆழ்ந்துவிட்டாயே ?

வ. உ. சி. : வேறென்றுமில்லை. பாரறிந்த நம் தமிழ் நாட்டுத் துறைமுகத்தின் பழங்காலச் சிறப்புகளையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன்.

வள்ளி : அப்படியா ? ஊம், உன்னைப்போல இதைப் பற்றி எண்ணிச் சிந்திக்க எங்கேப்பா எனக்கு நேரம் கிடைக்கிறது ?

மாசிலா (சிரித்தபடி) : வள்ளிநாயகம் பிள்ளை அண்ணைச்சிக்கு வக்கீல் தொழிலைத் தவிர வேறு சிந்தனைக்கு நேரமே கிடையாது.

வள்ளி : ஏ, என்ன தம்பி என்னைக் கோட்டி பண்றே ?

வ. உ. சி. : மாசிலாமணி, பண்டை நாளில் தமிழர் துறைமுகத்தில் பாண்டியனுடைய மீனக் கொடி வானளாவிப் பறந்தது. முத்துவளங் கொழித்தது. மரக்கல வாணிபம் மாண்புற்று விளங்கி வந்தது. (பெருமூச்சு விட்டு) அவையெல்லாம் இப்போது பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டன.

வள்ளி : ஏனப்பா அதையெல்லாம் எண்ணிப் பெருமூச்சு விடுகிருய். அது ஒரு காலம்; இது ஒரு காலம். இப்பொழுது பிரிட்டீஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி தூத்துக்குடிக்கும், சிங்களத்துக்கும் கப்பல் ஓட்டுகிறது. நீயும் நானும் அதைப்போலச் செய்ய முடியுமா ?

வ. உ. சி. ஏன் முடியாது ?......

"எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்."

இது வள்ளுவர் வாக்கு. ஆங்கிலக் கப்பலுக்கு எதிர்க் கப்பல் ஓட்டலாம். நம்மால் முடியும். எண்ணத்தில்

உறுதியும் இடைவிடா முயற்சியும்தான் வேண்டும்.

மரகிலா : அண்ணுச்சி, உங்கள் சுவையான பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டே யிருந்தால் பசிகூட எடுக்காது.

வள்ளி : நேரம் போனதே தெரியவில்லை. புறப்படுவோமா சிதம்பரம் ?

வ. உ. சி. : புறப்படுவோம். கோரல் மில் வேலை நிறுத்த விஷயமாகச் சில நண்பர்களைப் பார்க்க வேண்டும்.

வள்ளி : சிதம்பரம் ஒரு விஷயத்தை உன்னிடம் வெளிப் படையாகவே சொல்லி விடுகிறேன். நீ கோரல் மில் தொழிலாளர் சங்கத் தலைவராக இருப்பது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. வேலை நிறுத்தம் வேறே ஆரம்பித்துவிட்டாய். இதனுல் வெள்ளை முதலாளிகளின் வெறுப்புத்தான் உனக்குப் பரிசாகக் கிடைக்கப் போகிறது.

வ. உ. சி. (உணர்ச்சியோடு) : வெள்ளை முதலாளி களின் வெறுப்புக்குப் பயந்தால், ஆலைத் தொழிலாளி களின் அல்லல் தீருவதெப்படி ? வள்ளிநாயகம், உனக்கு இதயமே இல்லையா ? ஆயிரக்கணக்கான ஆலைத் தொழிலாளிகளும் நம்மவர்கள் என்ற உணர்ச்சிகூட இல்லையே உன்னிடம் ?

மரகிலா : நம்ம அண்ணுச்சி வாதாடுவதெல்லாம் தொழி லாளர்களின் உழைப்புக்குத் தக்க கூலி ; கூடுமான வரை விடுமுறை, மருத்துவ வசதிகள் இதற்காகத் தானே ?

வள்ளி : இதையெல்லாம் மில் நிர்வாகிகள் சட்டை செய்ய வேண்டுமே ?

வ. உ. சி. : அதனுல்தான் வேலை நிறுத்தத்தைத் துவக்கி யிருக்கிறேம். ஆம் ; நம் நியாயமான கோரிக் கைகள் நிறைவேறும் வரை வேலை நிறுத்தத்தைத் தவிர வேறு வழியே இல்லை.

[போகிருர்கள்.]

[காட்சி முடிவு]

## காட்சி : 4

இடம் :—வீதி.

உறுப்பினர்கள் :—வ. உ. சி., வள்ளிநாயகம், மாசிலா மணி, குருட்டுச் சிறுவன்.

*[ஒரு குருட்டுச் சிறுவன் பாடிக்கொண்டு வருகிறுன். மூவரும் அவனைப் பார்க்கிறார்கள்.]*

### குருட்டுச் சிறுவன்

மேற்குலம் ஏது ? கீழ்க்குலம் ஏது ?
வேண்டாம் விண்வாது !—இந்த
வெறும்பேச் சுதவாது !—இனிமேல்
வெறும்பேச் சுதவாது !!

நாற்குலம் என்பது சரியானல்—அது
நாலையிரமென விரிவானேன் ?
சாத்திர சம்மதம் அதுவானல்—வீண்
ஜாதிச் சண்டைகள் வருவானேன் ?

• • •

இட்டார் பெரியோர் ஒரு ஜாதி !—ஒன்றும்
ஈயாதவர்கள் மறு ஜாதி !
பட்டாங்கில் உள்ள நீதி இது—அவ்வைப்
பாட்டியவள் சொன்ன சேதி இது !

இனிமேல் ஜாதிப் பிரிவினையால்—வீண்
ஏற்றத் தாழ்வே கருதாதீர் !
மனிதர்கள் அனைவரும் ஒரு குலமே—நாம்
வளர்த்திட வேண்டும் பொதுநலமே ! *(மேற்குலம்)*

—புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

**சிறுவன் :** *ஐயா ! ரெண்டு கண்ணுந் தெரியாதவன் ஐயா. ஒரு காலணுக் குடுங்கையா ?*

**வ. உ. சி. :** *ஏலே, உனக்கு எந்த ஊரு ?*

**சிறுவன் :** *காயல் பட்டணம் சாமீ.*

**வள்ளி :** *பிறவியிலேயே குருட்டுப் பயலாட்டா நீ ?*

சிறுவன் : ஆமாங்க சாமி.

மாசிலா : ஏலே, உனக்குத் தாய் தகப்பனுர் இருக்காங்களா ?

சிறுவன் : யாருமே இல்லே. நான் அனுதைங்க சாமி. வயித்துப்பசி தாங்க முடியலே. ஒரு காலணுக் குடுங்கையா.

வ. உ. சி. : ஏலே, பிச்சை கேட்கிறது ரொம்ப இழிவான செய்கை. இந்தப் பழக்கத்தை நீ விட்டு விடணும் தெரிஞ்சுதா ?

வள்ளி : ஏலே, அவ்வையார்கூட 'ஏற்பது இகழ்ச்சி' இன்னு பாடியிருக்காடா, போ போ இனிமே பிச்சை யெடுக்காதே.

வ. உ. சி. (சிரித்தபடி): அவ்வையாரின் அறிவுரையைச் சொன்னதோடு உன் கடமை தீர்ந்துவிட்டது. இல்லையா ?......

(பையனிடம்.)

டே பயலே, உனக்குச் சாப்பாடு போடச் சொல்கிறேன். என் வீட்டிலேயே இருக்கிறயா ?

சிறுவன் (நன்றியோடு) : இருக்கேன் ஐயா, நீங்க நல்லாயிருக்கணுஞ் சாமி.

வள்ளி : சிதம்பரம் என்னப்பா இது ? விளையாட்டா யிருக்கு. இந்தக் குருட்டுப் பயலே வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறயா ?

வ. உ. சி. : சற்று முன்புதானே சொன்னுய் 'ஏற்பது இகழ்ச்சி' என்று அவ்வையார் பாடியிருப்பதாக.

வள்ளி : ஆமாம். அதுக்காக ?

வ. உ. சி. : அதே அவ்வைப் பாட்டி அடுத்த வரியில் சொல்லி யிருக்கிறுளே 'ஐயம் இட்டுண்' என்று, அதை மறந்துவிட்டாயே !

[வள்ளிநாயகம் அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறுர்.]

ஊம்...தனக்குத் தேவையானபோது பெரியோர் வாக்குகளைப் பயன்படுத்திக் கொள்வது; தேவைப் படவில்லை யென்றுல் தள்ளிவிடுவது. இதுதான் பெரிய மனுஷத்தனம் இல்லையா ?

வள்ளி : அதுக்கில்லே சிதம்பரம், யார் யாரையெல்லாம் வீட்டோட வைக்கணுங்கறதுக்கும் ஒரு வரம்பு இருக் கணும் பாரு. ஏற்கனவே அந்த தீண்டப்படாத ராமையாவை வீட்டிலே வச்சுச் சோறு போட்றேங் கிறது உன் பந்துக்களுக்குப் பிடிக்கலே. அதோட இவனையுமா? உன் மனைவி ஏதாவது சொல்லப் போருங்கப்பா.

வ. உ. சி. : அந்த ஒரு வகையில் நான் பெரும் பாக்கிய சாலியப்பா.

வள்ளி : அப்படியா ?

வ. உ. சி. : ஆம் ; ஒருவனுடைய மனைவி நற்பண்புடைய வளாக இருந்துவிட்டால் அவனுடைய வாழ்க் கையில் இல்லாதது எதுவுமில்லை. ஆனுல், பண்பில் லாத மனைவி அமைந்து விடுவாளானுல், அவன் வாழ்க்கையே சூன்யமாகிவிடும். இந்த உயர்ந்த உண்மையை வள்ளுவர் எவ்வளவு அழகாகச் சொல்லுகிருர் பார்......

" இல்லதென் இல்லவள் மாண்பானுல் ; உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை."

வள்ளி : என்னவோ உனக்கு வாய்த்திருக்கும் மனைவி குணவதியாக இருக்கலாம். எங்கேயோ நூத்திலே ஒண்ணு.

மரகிலா : ஏன் நூத்திலே ஒண்ணு ? ஆயிரத்திலே ஒண்ணூண்ணு சொல்லுங்க அண்ணுச்சி.

வ. உ. சி. : வள்ளிநாயகம், நீ வருத்தப்படுவதைப் பார்த்தால் உன் இல்லாள் அகத்திருந்தும் உனக்கு ஏதும் இல்லாமைதான் போலிருக்கிறது! (சிரிக்கிருர்)

வள்ளி (வெறுப்போடும், கவலையோடும்) : மனம் விட்டுச் சொல்லுகிறேன் சிதம்பரம். ஒண்ணு என் மனைவி திருந்தணும் ; இல்லே நான் துறவியாகணும். இதுதான் என் வாழ்க்கையிலே நடக்கப் போகிறது.

மாசிலா : என்ன அண்ணாச்சி மனம் தளர்ந்து பேசுறீங்க ?

வள்ளி : இருக்கிற நெலைமையை ஒளிக்காம சொல் றேன்பா. மற்றவங்களைப்போல மேலுக்குக் கௌரவ மாகப் பேச எனக்குத் தெரியாது.

[வ. உ. சி. சிரிக்கிறார்.]

வ. உ. சி. : குடும்பம் நடத்துவது ஒரு தனிக் கலையப்பா. வா, வா—மாசிலாமணி இந்தப் பயலே அழைச் சிட்டு வா.

[எல்லோரும் போகிறார்கள்.]

[காட்சி முடிவு]

## காட்சி : 4

இடம் :—சிதம்பரனார் வீடு.

உறுப்பினர்கள் :—மீனாட்சி, உலகநாதன், ஆறுமுகம், குருட்டுச் சிறுவன், வ. உ. சி., உலகநாத பிள்ளை.

[உலகநாதன் மரக்குதிரை ஒன்றில் அமர்ந்து ஆடிக் கொண்டிருக்கிறான். மீனாட்சி அதைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள்.]

ஆறுமுகம் : அம்மா, அண்ணனை எறங்கச் சொல்லும்மா. நான் ஒட்டணும்.

உலகநாதன் (தலையசைத்து): ஊஹம்; மாட்டேன் போ. நீதான் வெளையாடட்டடயே......

ஆறு : பாரம்மா !......

மீனாட்சி : தம்பி வெளையாடட்டும், நீ வந்துடும்மா. நல்ல பிள்ளையில்லா.

உலக : ஊஹு"ம். ரெண்டு பேருக்கும் பொதுவா அப்பா வாங்கிக் கொடுத்த குதிரைதானே ? நானுந் தான் வெளையாடுவேன்.

ஆறு : முடியாது ; அப்பா எனக்கேதான் வாங்கித் தந்தாங்க.

மீனுட்சி : உங்க அப்பா வர்ற நேரம் ; குறும்புத்தனம் செய்யக் கூடாது. தம்பியை அழ வைக்காதே கண்ணு.

[குருட்டுச் சிறுவனே அழைத்துக்கொண்டு வ. உ. சி. உள்ளே வருகிறர். உலகநாதனும், ஆறுமுகமும் ஓடி 'அப்பா'வென்று கட்டிக்கொள்ளுகிறர்கள்.]

உலக : அப்பா அப்பா, இந்தக் குதிரை தம்பி குதிரையாம்பா.

வ. உ. சி. : இல்லம்மா. நீங்க ரெண்டு பேரும் வெளையாடலாம்.

உலக : பாத்தியா...அப்பாவே சொல்லிட்டாங்க. இனி நானுந்தான் குதிரை ஓட்டுவேன்.

ஆறு : ம், முடியாது. இது என் குதிரை......

வ. உ. சி. : சண்டை போட்டுக்கொள்ளக் கூடாது. ரெண்டு பேரும் இப்படி வாருங்கள்.

[இருவரும் வருகிறர்கள். இருவர் கையிலும் இரண்டு பழங்களைக் கொடுத்து]

போய்ச் சாப்பிடுங்கள். போங்கள்.

[இருவரும் பழங்களை வாங்கிக்கொண்டு உள்ளே ஓடுகிறர்கள். வ. உ. சி. யும், மீனுட்சியும் சிரிக்கிறர்கள்.]

வ. உ. சி. : பார்த்தாயா மீனுட்சி, குழந்தைகள் சண்டை எவ்வளவு சீக்கிரம் சமாதானத்தில் முடிந்தது ? ஊம்...பெரியவர்களும் இப்படிக் குழந்தை உள்ளம் படைத்தவர்களாக விளங்கினுல்...

மீனுட்சி : அப்புறம் நீங்கள் வக்கீல் தொழில் நடத்தும் அவசியமே இல்லாமல் போய்விடுமே.

வ. உ. சி. : உண்மையைச் சொன்னுய்......அடடே மறந்தே போய்விட்டேன். முதலில் இந்தப் பயலுக்குச் சாப்பாடு போடு.

மீனுட்சி : யாருங்க இவன் ?

வ. உ. சி. : யாரோ அனுதை. பாவம்! கண் தெரியாத பய. நம்ம பயல்களுக்குத் துணையாக இருப்பான்.

மீனுட்சி (பரிவுடன் குருட்டுச் சிறுவன் கையைப் பிடித்து): பாவம் சின்னஞ் சிறுவனுக இருக்கிருன். பரிதாபமாக இருக்கு. வாப்பா......

[சிறுவனை உள்ளே அழைத்துப் போகிருள்.]

வ. உ. சி. : ஆகா ! மனைவியென்ருல் இப்படியல்லவா இருக்க வேண்டும். மீனுட்சி, இப்போது எனக்கு எவ்வளவு பெருமித உணர்ச்சி ஏற்படுகிறது தெரியுமா ?

மீனுட்சி (திரும்பி) : ஏன் ?

வ. உ. சி. : திருக்குறள் ஒன்று என் நினைவுக்கு வருகிறது.

மீனுட்சி. என்ன குறள் ?

வ. உ. சி. : "புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை."

மீனுட்சி : அப்படியென்ருல் ?

வ. உ. சி. : கணவன் ஆண் சிங்கம்போல் கெம்பீர நடை போட வேண்டுமென்ருல் மனைவி அவன் மனம் போல் அவனுக்குப் பெருமை தரக்கூடியவளாக இருக்க வேண்டும். அந்தப் பாக்கியம் எனக்கு இருக்கிறதல்லவா ?

மீனுட்சி (குறும்பாக) : உங்களிடமா பேச முடியும் ? வள்ளுவர் வகுத்த வழியில் செல்லுபவர்களாயிற்றே நீங்கள் ?

[குருட்டுச் சிறுவனிடம்]

நீ வாப்பா (உள்ளே பார்த்துவிட்டு மெதுவாக) மாமா வர்ருங்க.

[சிறுவனை அழைத்துக்கொண்டு உள்ளே போகிருன். உலகநாதபிள்ளை வருகிருர்.]

உலக-பிள்ளை : சிதம்பரம் !...உங்கிட்ட ஒரு சமாச்சாரம் சொல்லனும்னு காத்திருக்கேன்.

வ. உ. சி. (பணிவோடு) : என்னப்பா சொல்லனும் ?

உலக-பிள்ளை : நம்ம சப்மாஜிஸ்ட்ரேட் லஞ்ச வழக்கிலே, நீதான் ஆஜராகிருயாமே ?

வ. உ. சி. : ஆமா : ஏன் ?

உலக-பிள்ளை : ஏம்பா, இந்தமாதிரி வழக்குகளெல்லாம் வாறபோது எங்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கப் படாதா ? அரசாங்க அதிகாரிகளை நேரடியாய் பகைச்சுக் கொள்றது நல்லதா ? கூடிய வரைக்கும் அவங்களோட நெருங்கிப் பழகனும். அதுதான் வக்கீல் தொழிலுக்கு முக்கியம்.

வ. உ. சி. : அப்பா ! இன்ஸ்பெக்டரும் சப் மாஜிஸ்ட்ரேட்டும் தொடர்ந்து லஞ்சம் வாங்குவதையே வழக்கமாக வைத்துக் கொண்டார்கள். இதனுல் குற்றமற்றவன் குற்றவாளியாகத் தண்டனை பெறுகிருன். நீதியைப் பரிபாலிக்கக்கூடிய சப் மாஜிஸ்ட்ரேட்டின் போக்கு இப்படியே போய்க் கொண்டிருப்பதால் ஏழைகள் பெரிதும் பாதிக்கப்படுகிருர்கள். இதைப் பல முறை அவர்களுக்குப் படும்படி சொல்லியும் கேட்கவில்லை. அதனுல்தான் இந்த வழக்கில் நான் ஆஜராக நேர்ந்தது.

உலக-பிள்ளை : அது சரிப்பா, இந்தக் காலத்திலே நீதி நேர்மையெல்லாம் யார் கவனிக்கிருங்க ? இது பெரிய அதிகாரிக சங்கதி. வழக்கோ லஞ்ச வழக்கு. எதையும் கொஞ்சம் யோசிச்சுச் செய்யனும்பா.

வ. உ. சி. : இந்த வழக்கு சம்பந்தமாக நீங்கள் நிறையத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே ?

**உலக-பிள்ளை :** *அந்த சப் மாஜிஸ்ட்ரேட்டும் இன்ஸ் பெக்டரும் இப்பத்தான் எங்கிட்ட வந்து முறை யிட்டுப் போனுங்க.*

**வ. உ. சி.** *(குறும்புச் சிரிப்புடன்) :* **ஊம்;** *உங்களிடமே வந்துவிட்டார்களா ? அவர்களுக்கு என்னப்பா சொல்லியனுப்பினீர்கள் ?*

**உலக-பிள்ளை :** பாக்கிறேன்னு சொல்லியனுப்பினேன்.

**வ. உ. சி.** *(சிரித்து) :* வேலியே பயிரை மேய் வதுபோல், நீதியைக் காப்பாற்ற வேண்டியவர்கள், பழி பாவங்களுக்கு அஞ்சாமல் காரியம் செய்கி ருர்கள். அந்தப் பாதகர்களுக்கு நீங்கள் பரிவு காட்டுவதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது.

**உலக-பிள்ளை :** ஊம்...இடம், பொருள், ஏவல் கண்டு பிழைக்கணும்பா இந்த நாளிலே. நாங்கூடத்தான் எட்டயாபுரம் சமஸ்தான வக்கீலாப் பல காலம் இருந்தேன். இது மாதிரி சந்தர்ப்பங்களிலே கண்டும், காணுமப் போக வேண்டியதுதான். என்ன செய்யிறது...சரிப்பா, போய் கடமைகளைக் கவனி.

*[போகிருர்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 5

**இடம் :**—கோரல் மில் அலுவலகம்.

**உறுப்பினர்கள் :**—மில் நிர்வாகி, கலெக்டர் விஞ்ச், சப் கலெக்டர் ஆஷ், பாரிஸ்டர் அரங்கசாமி.

[எல்லோரும் மது வகைகளை அருந்திக் கொண்டிருக் கிருர்கள். பட்லர் நின்றுகொண்டிருக்கிருன்.]

**மில் நிர்வாகி :** திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் கனம் விஞ்ச் துரையவர்களை தூத்துக்குடி கோரல் மில் மானேஜிங் கமிட்டி நல்வரவு கூறி வரவேற்கிறது

சென்ற சில தினங்களாக மில் தொழிலாளர் ஸ்டிரைக் செய்து வருவதன் மூலம் பல லட்சக்கணக் கான பொருள் நஷ்டத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், ஜில்லா கலெக்டர் அவர்கள் இன்று நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்டதற்கு எங்கள் வந்தனம். இதற்காகப் பெரு முயற்சி யெடுத்துக் கொண்ட தூத்துக்குடி சப் கலெக்டர் மிஸ்டர் ஆஷ் துரை அவர்களுக்கும், மில்லின் சட்ட ஆலோசகர் மிஸ்டர் பாரிஸ்டர் அரங்கசாமி ஐயங்கார் அவர்களுக்கும் எங்கள் நன்றி. கனம் கலெக்டர் துரை அவர்கள் எங்கள் மகஜரைக் கவனிக்கும்படியாக வேண்டு கிறோம்.

கலெக்டர் விஞ்ச்: உங்கள் மகஜரைக் கவனித்தேன். இதற் காக சர்க்கார் தயவை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லையே !...

[வெளியே பெரும் ஜனத்திரள்; கோஷமிடுகிறார்கள்.]

ஒரு குரல்: வெள்ளை முதலாளிகளே !...

பல குரல்கள்: நியாயம் வழங்குங்கள் !...

ஒ. கு.: தொழிலாளர் கூலியை !...

ப. கு.: உயர்த்த வேண்டும் !...

ஒ. கு.: எட்டு மணி நேரம் !...

ப. கு.: வேலை வேண்டும் !...

ஒ. கு.: நோய் வாய்ப்பட்ட தொழிலாளருக்கு !...

ப. கு.: சம்பளத்தோடு விடுமுறை வேண்டும் !...

ஒ. கு.: தொழிலாளருக்கு வைத்திய வசதி !...

ப. கு.: வேண்டும் !...

ஒ. கு.: கோரல் மில் தொழிலாளர் சங்கம் !...

ப. கு.: வாழ்க !...

ஒ. கு.: தொழிலாளர் தலைவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை !...

ப. கு. : வாழ்க !...

[சப்தம் அமைதியடைந்த பின்]

மில் நிர்வாகி : இதே ஆர்ப்பாட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆஷ் துரை : சட்டத்தையும் நீதியையும் சீர்குலைக்கிருர்கள்.

கலெக்டர் விஞ்ச் : மிஸ்டர் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை யூனியன் பிரசிடெண்ட் ; நல்ல செல்வாக்குள்ளவர். இஸ் இட் ?

மில் நிர்வாகி : பிரசித்தி பெற்ற வக்கீலும்கூட.

கலெக்டர் : எஸ்; அவர்கள் கோரிக்கை சட்டப்படிதானே இருக்கிறது. மானேஜிங் கமிட்டி ஒரு சமரச முடிவுக்கு வரலாமே ?

அரங்கசாமி : கனம் கலெக்டர் துரைவாள் !...

கலெக்டர் : வாட் மிஸ்டர் ஐயங்கார் ?

அரங்க : இந்த ஸ்டிரைக்கை சாமான்யமாகக் கருதக்கூடாது. அவஸ்யம் போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கணும். வக்கீல் சிதம்பரம் பிள்ளை யூனியன் பிரசிடெண்டா இருந்துண்டு கூலிகளையெல்லாம் இப்படி ஏவி விட்டு மானேஜிங் கமிட்டிக்கு தொந்தரவு கொடுக்கிருர்.

மில் நிர்வாகி :. சர்க்கார் மேலே அதிருப்தி கொண்டிருக்கிற சிதம்பரம் பிள்ளை இதில் தலையிடுவதன் காரணமாக மானேஜிங் கமிட்டியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அரங்க : கோரல் மில் மானேஜிங் கமிட்டியார் என்னிக்குமே தர்ம வழியிலேதான் நடந்துண்டு வரு. இந்த ஸ்டிரைக்கிலே கலந்திருக்கிற ஓர்க்கர்ஸ் எல்லாம் படிப்பு வாசனையே இல்லாதவா ! அதனுல்தான்

அவா எல்லாத்தையும் சிதம்பரம் பிள்ளை பொம்மையா ஆட்டி வைக்கிருர்.

கலெக்டர் : மிஸ்டர் அய்யங்கார் ! நீர் லீகல் அட்வைசராயிருக்கிறீர். ஏதாவது ஒரு சமரச ஏற்பாடு செய்யலாமே.

அரங்க : இதை ஆர அமர யோசிச்சிண்டுதான் இருக்கோம். அதுக்குள்ளே கூலிகள் துடியாத் துடிக்கிரு.

மில் நிர்வாகி : மானேஜிங் கமிட்டி இதைப்பற்றி மறுபடியும் யோசித்துக் கொண்டுதான் வருகிறது.

அரங்க: திடீர்னு ஏதாவது பலாத்காரம் நடக்குமோன்னு தான் பயமாயிருக்கு.

கலெக்டர் (அலட்சியமாகச் சிரித்து) : பலாத்காரம் !... அதை அடக்குவது எங்கள் கடமை, என்ன மிஸ்டர் ஆஷ் ?

ஆஷ் துரை : எஸ்.

அரங்க : எதிர் பாராதபடி கலகம் வந்துட்டுதின்னு தூத்துக்குடியிலே இருக்கிற போலீஸ் போதாது. எதுக்கும் ரெண்டு ரிசர்வ் படையைத் தயாரா டவுண்லே வச்சிருந்தா நல்லது. மில்லுக்கும் பந்தோபஸ்து அவசியம். நிர்வாகிகள் வெளியே போய் வரப் பயப்படரு. தலைவர் சிதம்பரம் பிள்ளையைப் புடிச்சு உள்ளே தள்ளிட்டேள்னு இந்த ஓர்க்கஸ் எல்லாம் பெட்டிப் பாம்பா அடங்கிடுவா சார்.

கலெக்டர் : அதைப்பற்றிப் பிறகு யோசிப்போம். வாட் மிஸ்டர் ஆஷ் ! என்ன ; போலீஸ் பாதுகாப்பு தேவையென்று கருதுகிறீரா ?

ஆஷ் துரை : எஸ் சார். ஸ்டிரைக் ரொம்ப வேகமாகத் தான் இருக்கு. எல்லாம் சுத்தக் காட்டுமிராண்டிக் கும்பலாயிருக்கு. திடீர்னு கலகம் வரலாம். எதற்கும் நாம் முன் ஜாக்கிரதையுடன் இருப்பது நல்லது.

கலெக்டர் : தென் ஆல் ரைட். நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்.

மில் நிர்வாகி } : தாங்க் யூ சர்ர் !...
அரங்கசாமி

[வெளியே மீண்டும் முன்போல் தொழிலாளர்கள் கோஷமிடுகிருர்கள்.]

[காட்சி முடிவு]

## காட்சி : 6

இடம் : பொதுக்கூட்டத் திடல்.

உறுப்பினர்கள் : ஆஷ்துரை, சார்ஜெண்ட், மாடசாமி, நாகலிங்கம், முத்து, போலீசார்.

[இரண்டு போலீஸ் ஜவான்கள் நிற்கிருர்கள்.]

போலீஸ் 1 : சேச்சே ! என்ன பொழைப்புடா இந்தப் போலீஸ் பொழைப்பு. நல்லா உறங்கி நாலு நாளாச்சு. நல்ல ஸ்டிரைக்குடா யிது. சோறு தண்ணி குடிக்கக்கூட நேரமில்லே.

போலீஸ் 2 : பெரிய எழவாப் போச்சு. நேத்து என்ன டாண்ணு மில்லு தொரை வீட்டிலே நில்லுண்ணுன். அங்கே நிம்மதியாத்தான் நிக்க முடியுதா ? மில்லு தொரையும் சப் கலெக்டர் ஆஷ் துரையும் பேசிக்கிற தைக் காது கொடுத்துக் கேக்க முடியல்லேண்ணே.

போலீஸ் 1 : என்ன பேசிக்கிட்டானுக ?

போலீஸ் 2 : அதையேங் கேக்கிற போ. என்னை நிக்க வைச்சுக்கிட்டே இந்தியனுங்கள்ளாம் கண்ட்ரி புருட்டு !...காட்டுமிராண்டிப் பசங்கன்னு பேசுரு னுங்க. என்ன செய்யறது ? மனசு துடிச்சுது ! தலையைத் திருப்பிக்கிட்டு பேசாம நிண்ணேன்.

போலீஸ் 1 : தம்பீ !...(அருகில் அழைத்து ரகசியமாக) வெள்ளையன்லேயும் வெள்ளையன் ரொம்ப விளைஞ்ச

பய இந்த ஆஷ் துரை. அவன் இருதயத்தை இங்கிலாந்துலேயே வச்சிட்டு இங்கே வந்திருக்கான்!

[ஆஷ், சார்ஜெண்டுடன் வருகிறார். போலீஸார் இருவரும் வணங்கி நிற்கிறார்கள்.]

ஆஷ் : என்ன மேன் ! கூட்டம் எப்படியிருக்கு ?

போலீஸ் 1 : ஏராளமா இருக்குது சார் !

போலீஸ் 2 : இன்னும் சிதம்பரம் பிள்ளைவாள் பேச ஆரம்பிக்கல்லே சார் !...

ஆஷ் : பிள்ளை வாள் ! என்ன மேன் மரியாதை ரொம்ப ஓவராப் போகுது ?

[மக்கள் கைதட்டும் ஒலி. உள்ளே சிதம்பரனார் பேசும் குரல் கேட்கிறது.]

வ. உ. சி. : 'என் அருமைத் தொழிலாளத் தோழர்களே, நாம் துவக்கியுள்ள இந்தப் போராட்டம் இந்திய வரலாற்றிலேயே முதல் தொழிலாளர் போராட்டமாகும். எனவே, நீங்கள் கடமையுணர்ச்சியுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ள வேண்டும்.

நண்பர்களே, நாம் அறவழியிலே நமது கோரிக்கையை வற்புறுத்துகிறோம். கோரல் மில் நிர்வாகிகள் நம் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து சமாதான முறையிலே பிரச்சினையைத் தீர்க்க முன் வருவார்கள் என்றே நம்புகிறேன். பாட்டாளிகளை வஞ்சிக்கும் பஞ்சாலைப் பரங்கியருக்கு பாரத நாடு விடுக்கும் முதல் எச்சரிக்கை இந்த வேலை நிறுத்தம். தொழிலாளிகளின் துயரம் தீரும்வரை, நாம் இறுதியாக முடிவு செய்யும்வரை வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருமாறு உங்களை வேண்டுகிறேன்.

[தொழிலாளர் மீண்டும் முன்போல் கோஷமிடுகிறார்கள். சப் கலெக்டர் ஆஷ்துரை மிகுந்த கோபத்தோடு.]

ஆஷ் : ரோக் ! அயோக்கியப் பயல். ரொம்ப யோக்கியன்மாதிரிப் பேசுரன். இவனை ஒழித்துக் கட்டினுல்தான் பிரிட்டிஷார் இங்கே நிம்மதியாக வாழ முடியும்.

சார்ஜெண்ட் : எஸ், சார் !...

[போலீஸ்—ஆஷ்துரை முதலியோர் போகிருர்கள் ; இரண்டு தொழிலாளிகள் பேசிக்கொண்டே வருகிருர்கள்.]

நாகலிங்கம் : சிதம்பரம் பிள்ளை நம்ம சங்கத் தலைவரா இல்லேன்னு வருஷம் பத்தானுலும் இந்தக் கோரிக்கைகளைப் பற்றி கலெக்டருகிட்ட பேசுவாங்களா வெள்ளைக்காரங்க ?

மாடசாமி : அந்த மகராசனைக் கையெடுத்துக் கும்பிடணும் நாமெல்லாம்.

[முத்து வருகிருன்.]

நாக : ஏம்பா, இந்த அரங்கசாமி வக்கீல் ஐயன் கலெக்டர் கிட்ட என்னென்னமோ சொன்னதாகக் கேள்விப் பட்டேனே ! மெய்தானு !

[முத்து உற்றுக் கவனிக்கிருன்.]

மாட : ஆமாப்பா, நம்ம தலைவர் சிதம்பரம் பிள்ளையைப் புடிச்சி ஜெயில்லே போட்டுட்டா இந்தக் கலவரம் எல்லாம் அடங்கிப் போயிடும்னு சொன்னுனும். என்ன துணிச்சல் பாத்தியா ?

[முத்து அதிர்ச்சியடைகிருன்.]

நாக : அட பாவி ! அப்படியா சொன்னுன் ?

மாட : ஆமாப்பா, நம்ம ஊருக்கு இன்னும் ரெண்டு போலீஸ் பட்டாளம் வேணும்னும் கேட்டானும்.

முத்து : வக்கீல் ஐயங்காருதானே, கேட்டிருப்பாரு, கேட்டிருப்பாரு !

நாக : யாரு முத்துவா ! வாப்பா. உனக்குத்தானே தெரியும் உங்க அய்யங்காரு குணம்.

மாட் : நாகலிங்கம் ! எனக்கு ஒரு யோசனை தோணுது.

நாக : என்ன திடீர்னு ?

மாட் : நம்ம, 'ஊர்–கட்டுப்பாடு' பண்ணி இந்த அரங்க சாமி ஐயனுக்கு புத்தி வரும்படியா பண்ணனும்.

முத்து : எப்படீங்க ?

நாக : ஏப்பா, கேட்டுக்கிட்டு போயி அய்யங்கார் கிட்டே கோள் மூட்டவா ?

முத்து (சிரித்து) : சாமீ, நானும் இந்த நாட்டுலெ பிறந்தவன்தானுங்க ; எனக்கும் மானம்—சூடு—சொரணை எல்லாம் இருக்குது ! அடப்பம் தூக்குற வனுக்கும் அரசியல் தெரியுமுங்க ! நம்மளை தள்ளி வைக்காதீங்க சாமி !

நாக : சபாஷ் ! அப்படிச் சொல்லு முத்து ! மாடசாமி! ஊர் ஒண்ணு சேர்ந்துட்டா இவன் ஒண்டிக் கட்டை என்னு செய்ய முடியும் ? நாமெல்லாம் முதல்லே இந்த வெள்ளைக்காரனுங்களே வெறுக்கக் கத்துக் கணும்பா. அப்பத்தான் இந்தப் பயக வழிக்கு வருவானுங்க.

மாட் : வா வா. அதைப்பற்றிப் பிறகு யோசிப்போம் !

[தொழிலாளர்கள் போகிருர்கள். முத்து எதிர்ப்புறம் போகிறன். கறையான்பிள்ளை வந்து]

கறையான் : டேய் முத்து ! உன்னை எங்கேயெல்லாம் தேடறேன் தெரியுமா ? எங்க அய்யங்காரு க்ஷவரத் துக்குக் காத்திருக்காரு ! வரச் சொன்ஞரு !

முத்து : வே, கறையான் பிள்ளை, இப்ப என்ன சொல்லிக் கூப்பிட்டீரு ? டே முத்துவா...ஏய்யா கொத்த வரங்கா வத்தலு மாதிரி இருந்துக்கிட்டு என்னையா டேய்ன்னு கூப்பிடுதீரு ?

கறை : கோவிச்சிக்காதே முத்து. வாய் தவறி வந் துடுச்சி !

முத்து : வாய் வந்துடுச்சா, எங்கய்யா வந்துடுச்சி.

கறை : இல்லே முத்து, வாய் கொழறிப்போச் சுண்ணேன்...

முத்து : ஒஹோ ! கொளறிப் போச்சா?

கறை : சரி, சீக்கிரம் போறயாப்பா ? அய்யங்காரு காத்திருக்காரு...எனக்கு வேற ஜோலி இருக்கு. போயிட்டு இதோ வந்துடறேன் !

*[கறையான் பிள்ளை போகிருன். முத்து சற்று நின்று யோசித்துப் பிறகு போகிருன்.]*

[காட்சி முடிவு]

## காட்சி : 7

இடம்: அரங்கசாமி ஐயங்கார் வீடு.

உறுப்பினர்கள்: அரங்கசாமி ஐயங்கார், அம்புஜம்மாள், நாவிதர் முத்து, கறையான் பிள்ளை.

*[அரங்சாமி ஐயங்கார் பனியனுடன் நின்று கொண்டிருக்கிருர். சவரம் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்கிருர்.]*

அரங்கசாமி : அம்பூ! அடி அம்பூ!...

அம்புஜம் (வந்து) : அம்புமாச்சு, வில்லுமாச்சு, காலங் காத்தாலே ஏன் இப்பிடி உயிரைப் பிடிச்சுண்டு கத்தி வெறைக்கிறேள்?

அரங்க : ராம, ராம!...ஏண்டி பொழுது விழுந்தாப் போரும், ராமாயண காலக்ஷேபம் கேட்கக் கிளம் பிடுறே. ஸ்ரீராமச்சந்திர பிரபுவும் சீதா பிராட்டியும் தாம்பத்ய வாழ்க்கையிலே எவ்வளவு அழகா நடந் துண்டான்னு ஸ்லோகத்தைச் சொல்லிச் சொல்லி பாகவதர்வாள் கரடியாக் கத்தருர். அதையுங் காதிலே வாங்கிண்டுதான் ஆத்துக்கு வறே. இங்கே

வந்தவுடனே சூர்ப்பனகை விஸ்வரூபத்தை எடுத்து னூடறே!

அம்புஜம் : போரும், வழ வழான்னு உளறிக் கொட்டின்ன டிருக்க வேண்டாம். உங்க காரியத்தைப் பார்த்துண்டு தேமேன்னு கெடங்கோ...ஆமா, ஏங் கூப்பிட்டேள்? சொல்லுங்கோ. நேக்கு வேலே ஏகமாக் கெடக்கு.

அரங்க : காரியம் இருக்கேன்னுதான் அடி அம்பூன்னு செல்லமாக் கூப்பிட்டேன்.

அம்புஜம்: நீங்க செல்லமாக் கூப்பிட்டா நேக்கு வெல்லமா இனிக்குது போங்கோ...ஏன்னு, எதுக்குக் கூப்பிட்டேள்?

அரங்க: க்ஷவரத்துக்கு அந்தப் பய முத்துவை அழைச்சிண்டு வரச் சொல்லி நம்ம குமாஸ்தா கறையான் பிள்ளையை வெரட்டியிருக்கேன், ஒரு சொம்பிலே ஜலமும், அந்த மொகம் பார்க்கிற கண்ணுடியும் வேணும். சித்த எடுத்துண்டு வாயேன்!

அம்புஜம்: போறது போங்கோ. உங்க க்ஷவரக் கல்யாணம் ஆறதுக்குள்ளே இருக்கறவா வயித்தெரிச்சலேக் கொட்டிக்கிறேள்.

[மிடுக்குடன் உள்ளே போகிருள்; ஐயங்கார் ஒரு பலகையின்மீது உட்காருகிருர்.]

அரங்க: ஊம் ஸ்ரீராமச் சந்திரா!——

[அம்புஜம் தண்ணீர்ச் செம்பும், கண்ணுடியும் கொண்டுவந்து அவர் முன்னுல் வைத்தபடி]

அம்புஜம்: மூச்சுக்கு முன்னூறு தடவை ஸ்ரீராமச்சந்திரனைக் கூப்பிட்றதுலே கொறைச்சலில்லே. ஆனு ஊரிலே ஒத்தரண்டையாவது நல்லவர்னு பேர் வாங்கறேளா?

அரங்க: போடீ அசடு. இந்த ஊர் காலிப்பசங்க சில பேர் என்னைக் கன்னு பின்னுன்னு பேசிண்டு திரியறா.

என்னுடைய அந்தஸ்து அவாளுக்கு என்னடி தெரியும்? இல்லே என்ன தெரியும்னு கேக்கறேன். நான் லண்டனிலே பாரிஸ்டருக்குப் படிச்சிண்டிருந்தப்போ இப்பப் பட்டணத்திலே கவர்னராயிருக்கிற தொரையும் நானும் பிராண சினேகிதாள்டீ! இங்கே மட்டுமென்ன? கலெக்டர் விஞ்ச் தொரை என்னைக் கார்லே அழைச்சிண்டு போயி அடிக்கடி விருந்து நடத்தருன். நம்ம தூத்துக்குடி சப் கலெக்டர் ஆஷ் தொரை இந்த ஐயங்கார் இல்லாமே எதையுமே செய்யமாட்டான். பாரிஸ்டர் அரங்கசாமி ஐயங்கார்னு கவர்மெண்டுலே செல்வாக்குள்ள புள்ளீன்னு பேருடி பேரு. அது நோக்கு எங்கே தெரியப் போறது.

அம்புஜம்: போருமே'ஓங்க பிரதாபம். எங்கயோ கெடக்கற வெள்ளைக்காரானைத் தலைமேலே தூக்கி வச்சுண்டு கூத்தாட்றேளே!......

அரங்க: போடீ அசடு. நோக்கென்னடீ தெரியும்?

அம்புஜம்: ஆமா. நம்ம ஊரு மில் தொழிலாளிகள் ஸ்டிரைக்கிலே அவாளுக்கும் வக்கீல் சிதம்பரம் பிள்ளைக்கும் விரோதமா நடந்துண்டேளாமே! ஊர்லே இதே பேச்சான்னு இருக்கு. நாளைக்கு நம்மாத்திலே ஒரு நல்லது கெட்டதுன்னு வெள்ளைக்காராளா வந்து உட்காண்டிருப்பா?

அரங்க: போருண்டீ! போயி காரியத்தைப் பாரு.

[விறைப்புடன் அம்புஜம் உள்ளே போக, முத்து வருகிருன்)

யாரு முத்துவா?—நன்னுருக்குடா. எத்தினி நாழியா உனக்காகக் காத்துண்டிருக்கேன் தெரியுமோ? இத்தனை லேட்டாவா? வறது...சுருக்கா முடிச்சிடு, கச்சேரிக்கு நாழியாறது.

[முத்து சவரப் பொருட்களை எடுத்து வைத்து, சாவகாசமாகக் கத்தியைத் தீட்டுகிருன்.]

ஏண்டா, சுருக்க முடின்னு சாவகாசமாத் தீட்டிண்டிருக்கியே!......

முத்து : சும்மா ஏஞ்சாமி கூப்பாடு போடுதியோ?......

அரங்க (கோபத்தோடு) : ஏண்டா, கூப்பாடா போட்டுறேன்?...மரியாதையா பேசவே தெரியலேயே நோக்கு.

முத்து : மருவாதை குடுக்கணுமா சாமி? குடுக்கிறேன். மருவாதைதானே...குடுத்தாப் போச்சு.

அரங்க : என்னடா உன்னோட பெரிய எழவாப் போச்சே!......

முத்து : எழவூன்னு சொல்லாதீங்கோ சாமி...

[பாரிஸ்டரின் தலையில், தண்ணீரைத் தடவுகிறான்]

அரங்க : டே, டே! மொள்ள, மொள்ள...

[முத்து சவரம் செய்ய முனைகிறான். தலையில் கத்தி பட்டதும் ஐயங்கார் துள்ளி விழுந்து]

சரக்குன்னு கிழிச்சுடப் போறதுடா, கத்தியை நன்னாத் தீட்டிண்டையா?

முத்து: நீங்கதானே சாமி அவசரப்படுத்தினியோ.

அரங்க : சரி சரி, வேலையைப் பாரு.

[முத்து சவரம் செய்துகொண்டே]

முத்து : என்ன சாமி அவசரம்?

அரங்க : டே, வாயை மூடிண்டு வேலையைப் பாருடா.

முத்து : ஆமா சாமி, நம்ம மில்லுத் தொழிலாளிகளை அடக்கிறதுக்கு திருநெல்வேலிலே யிருந்து போலீஸ் பட்டாளத்தை வரவழச்சியளாமே? அது வாஸ்தவங்களா?

அரங்க : அடடே, இதெல்லாம் உனக்கேண்டா? உன் வேலையைப் பாத்துண்டு போவையா?...

முத்து : என் வேலையைத்தாஞ் சாமி நான் பாக்கறேன். இருந்தாலும் இதெல்லாம் உங்களுக்கு வேண்டாத வேலையில்லா?......

அரங்க (கோபத்தோடு): ஏண்டா, நீ என்ன எனக்கு உபதேசம் பண்ண வந்தியா?

முத்து: நான் என்னு சாமி; ஒங்களுக்கு உபதேசம் பண்ண முடியுங்களா?

அரங்க: சரி சரி; வேலையைப் பாரு.

[முத்து, மீண்டும் சவரம் செய்துகொண்டே]

முத்து: சாமி! சாமியோவ்!......

அரங்க: ஏண்டா, ஏன் பிராணனை வாங்கறே?

முத்து: என்னயிருந்தாலும் சிதம்பரம் பிள்ளை ஐயாவும் வக்கிலு; நீங்களும் வைக்கோலுதான். அவங்களை ஊரெல்லாம் புகழுறாங்க. உங்களை ஊரெல்லாம் தூத்தறாங்க. உங்களுக்கு ஏஞ்சாமி இந்த வம்பெல்லாம்?

அரங்க: டேய்! என்னடாயிது? கத்தியை வச்சிண்டு பேசிண்டிருக்கே! காயம் பட்டுடப் போறதுடா.

முத்து: கோவிச்சிக்கிடாதயோ சாமி! அப்புறம் ஏழைங்க எப்படிப் பொழைக்கிறது? இருந்தாலும் சிதம்பரம் பிள்ளைவாளுக்கு எதிரியா இவ்வளவு தூரம் நீங்க வேலை செய்யிறது நல்லாயில்லே. கடவுளுக்குப் பயப்படணுஞ்சாமி; கடவுளுக்குப் பயப்படணும்.

அரங்க (கோபத்தோடு எழுந்து): டேய், என்னடாயிது ஊர்க்கதையெல்லாம் பேசிண்டு? இப்ப நீ ஒழுங்கா க்ஷவரம் பண்ணப் போறயா இல்லையா?

முத்து: சும்மா உருட்டாதிரும் வே, கேட்டா சொல்லு வீரா...என்னமோ......!

அரங்க: ஏண்டா, அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா? யாருண்ணு நினைச்சே என்னை. சுட்டுப் பொசுக்கிப் போடுவேன்.

முத்து : டுர்ண்ணுணும்......! இது ஒண்ணும் காயிதக் குப்பையில்லே, பொசுக்கறதுக்கு. சும்மா மெரட்டாதீரும் வே! வக்கீலு சிதம்பரம் பிள்ளை ஐயாவைப் புடிச்சு ஜெயில்லே தள்ளணும்னு வேற சொன்னீராமே? நீரும் ஒரு மனுசனா? (சவரப் பொருட்களை மூட்டை கட்டியபடி) உம்மைப்போல தேசத் துரோகிகளுக்குச் சவரம் பண்ணப் படாதுண்ணு ஊர் கட்டுப்பாடு தெரியுமா?...என்னமோ?......

[மூட்டையை எடுத்துக் கொண்டு புறப்பட, அரை குறையாய் விட்டு, முத்து போவதைக் கண்டு]

அரங்க : டேய்...டேய்...பாவி, என்னடா அக்கிரமம் இது? க்ஷவரத்தை அரையுங் குறையுமா விட்டுட்டு நடையைக் கட்டறயேடா! உனக்கு தர்மமா?...

முத்து : ஏஞ்சாமி கத்துநீரு? ஏழை சனங்க வயத்திலே அடிக்கிற மில் மொதலாளிகளுக்குப் பரிஞ்சிக்கிட்டு போலீஸ் படையெ வரவழைச்சீரே; அது ஒமக்கு தருமமா?

[போக முயல்கிறான்.]

அரங்க : டேய்! முத்து...க்ஷவரத்தை முடிச்சுட்டுப் போகலே, போலீசுக்குக் கம்ப்ளேயிண்ட் பண்ணுவேன்.

முத்து (போய்க் கொண்டே) : போலீஸ் என்னவே; நீருதான் கலெக்டரு கிட்டவே போற ஆளாச்சே. போவுமே......!

[முத்து போய்விடுகிறான்]

அரங்க : அட கிரகசாரமே! தொலைஞ்சே போயிட்டானே, அட ராமச்சந்திரா! இந்த ஊர் பசங்க ஒரே கட்டான்னா இருக்கா!......

[கறையான் பிள்ளை வந்துகொண்டே]

கறையான் : வாட்...வாட்!...என்ன. ஒரே யுத்த காண்டமா இருக்கு. சார்! இங்கே என்ன சார் நடந்தது?

அரங்க : அட நீ என்னையா......யுத்த காண்டமும் இல்லே; மயான காண்டமும் இல்லே. அத்தப் பய முத்து......

கறை : முத்துவை அனுப்பிச்சுட்டுத்தான் சார் போனேன்...

அரங்க : அவன் செய்த வேலேதான்யா இது. க்ஷவரத்தை அரையுங் கொறையுமா விட்டுட்டு ஓடிட்டான்யா.

*[கறையான் பிள்ளே ஐயங்காரின் க்ஷவரக் கோலத்தைப் பார்த்து வியப்போடு]*

கறை : பாதி க்ஷவரமா?...இப்பத்தான் சார் நான் கவனிச்சேன். பேஷ், வேலேயை நன்னு காண்பிச்சிருக்கான் சார், என்னயிருந்தாலும் கலேஞன் பாருங்கோ!

அரங்க : ஒய்! என்னேயா தமாஷ் பண்றையா?

கறை : நோ! நோ! தமாஷாவது...சார் எனக்கு ஒரு சந்தேகம்!

அரங்க : என்ன?

கறை : ஒருவேளே ரேட் பிக்ஸ் பண்ணிக்காமே க்ஷவரத்துக்கு உக்காந்துட்டேளோ?

அரங்க : அட சே...நீ ஒரு மனுஷனுட்டம்! சுருக்கா போயி வேறொரு பயலேப் பார்த்து அழைச்சிண்டு வாய்யா ...ஏய்யா நிக்கிறே?

கறை : இதோ சீக்கிரமா வந்துட்றேன் சார்,

*[கறையான் பிள்ளே ஒடுகிருர். அம்புஜம் உள்ளேயிருந்து வருகிருள்]*

அம்புஜம் : என்ன, இங்கே ஒரே கூப்பாடா கெடக்கு?...

*[ஐயங்காரின் கோலத்தைப் பார்த்து]*

அட கர்ம காண்டமே, ஏன் இப்படி அவலட்சணமா நிக்கறேள்?...

அரங்க (எரிந்து விழுந்து): என்னடீ அவலட்சணத்தைக் கண்டுட்டே? சந்தர்ப்பம் கெடச்சிருக்கின்னு வந்து என் பிராணனே வாங்காதே. போடீ உள்ளே.

அம்பு (பரிவாக): என் மேலே ஏன் இப்படிச் சீறி விழறேள்? கண்ணாடி யெடுத்து உங்க முகத்தைக் கொஞ்சம் பாருங்கோ எழவு!..

அரங்க: ஊம்!...சண்டாளன். பாதி க்ஷவரத்தோட விட்டுத் தொலைஞ்சிட்டானே! இவாளை யெல்லாம் சொல்லி என்னடீ பண்றது? அந்தச் சிதம்பரம் பிள்ளை இப்படிக் கூலிப்பசங்களைத் தூண்டி எழவு குடுக்குறன். இருக்கட்டும்; பாத்துனூட்றேன்.

அம்பு: உங்க வாயை வச்சுண்டு சும்மா இருந்தாத் தானே? ஊரோட ஒத்து வாழணும்னு பெரியவா தெரியாமையா சொல்லி வச்சிருக்கா?

*[கறையான் பிள்ளை சோர்வோடு வருகிறர்]*

அரங்க: என்ன கறையான் பிள்ளை! எங்கே? அழைச் சிண்டு வல்லே?...

கறை: சார், இதை மொதல்லேயே சொல்லியிருந்தா நான் போயே இருக்கமாட்டேன் சார். நல்ல வேளே! என்னைக் கட்டிப் போட வந்துட்டாங்க சார். உங்க பேரைச் சொன்னு போரும். முதுகு வீங்கிப் போகும் போல இருக்கு சார்.

அரங்க: என்னையா இது அநியாயம்? கத்திரிக்கா பட்டணம்னு நெனைச்சுண்டாளா! இந்த அக்ர மத்தை நேரே திருநெல்வேலி போயி கலெக்டர் தொரைவாளண்டையே காண்பிச்சூட்டு அங்கேயே க்ஷவரத்தையும் முடிச்சூட்டு வந்தூட்றேன்.

கறை: சார்! அங்கேயே க்ஷவரத்தை முடிச்சூட்டு வந்தூட்றேண்ணு...?

அரங்க: அட சே! மூளையிருக்கா உனக்கு?...அம்புஜம், உள்ளே போயி அந்த அங்கவஸ்திரத்தையும், மணிப்

பர்சையும் எடுத்துண்டு வா. திருநெல்வேலிக்கே போய் வந்தூட்றேன்.

அம்புஜம் : அட ராமச்சந்திரா !...

[தலையில் அடித்துக்கொண்டே உள்ளே போகிருள்.]

அரங்க : கறையாம் பிள்ளே ! ஏய்யா இடிச்ச புளிமாதிரி நிக்கறே ? போய்யா, ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக ஒரு ஜட்கா அழைச்சிண்டு வாய்யா.

கறை : ஜட்காவா ? ட்ரை பண்றேன் சார்...

[கறையான் பிள்ளே ஓடுகிருர். அம்புஜம் அங்க வஸ்திரமும், பர்சும் கொண்டுவந்து எட்டி நின்று தொடாமல் ஐயங்காரிடம் வீசுகிருள் ]

அரங்க : அம்பூ ! ரெண்டாம் பேருக்குத் தெரியாமே, மூக்காட்டைப் போட்டுண்டு திருநெல்வேலி, போய் வந்தூட்றேன். என்னேப் பிள்ளேப் பூச்சீன்னு நெனேச்சிருக்கான் சிதம்பரம். கொட்டும் தேளுன்னு காண்பிச்சுடறேன்.

[கறையான் ஓடி வருகிருர்.]

அரங்க : ஜட்கா வந்துடுத்தா ?

கறை : சார் !...

அரங்க : ஏன்யா ?

கறை : எவன் சார் வருவான் ?

அரங்க : தமாஷ் பண்றையா ?

கறை : சார் ! ஒங்க நேம் ரொம்ப பேமாயிருக்கு சார். வீணு ஆக்ஸிடெண்ட் ஏற்படுத்திக்காதீங்க சார். பொடி நடையா நடந்து ஸ்டேஷன் போய்ச் சேருங்கோ சார்.

அரங்க : ஏய்யா, ஜட்காக்காரனுக்கு என்ன கேடு வந்துடுத்து ?

கறை : வேணும் சார் ; உங்க மேலே இருக்கிற பிரியத்துலே ஜட்காக்காரனுக, தயாராத்தான் இருக்கானுங்க.

அரங்க : எதுக்கையா ?

கறை : உங்களை உக்காரச் சொல்லிக் கடையாணியைக் கழட்டி விட்டுக் கொடை சாய்க்க !...

அரங்க : செய்துடுவாங்கய்யா ; கொலைகாரப் பசங்க. வேண்டாய்யா. நான் நடந்தே போயிட்றேன். நான் வரவரைக்கும் ஆபீசைக் கவனிச்சுக்கோ.

கறை : கவனிச்சுக்கறேன் சார்.

அரங்க (தலையில் முக்காடு போட்டுக்கொண்டு) : நான் வறேன் அம்புஜம்...

கறை : சார் தொணைக்கி போலீஸ்காரா யாராவது ?

அரங்க : ஒத்தரும் வேண்டாய்யா...சந்தி சிரிக்கவா ?

[போகிறுர். கறையான் பிள்ளை பின்னுல் போகிறுர்.]

அம்புஜம் : பாத்துப் போங்கோ...

[காட்சி முடிவு]

## காட்சி : 8

இடம் : பொதுக்கூட்டத் திடல்.

உறுப்பினர்கள்: வ. உ. சி., தொழிலாளர்கள், போலீஸ் காரர்கள்.

[போலீஸ்காரர்கள் பாதுகாப்புக்காக நின்றுகொண்டிருக்கிறுர்கள். தொழிலாளர்கள் கோஷங்கள் முழங்குகின்றன. வ. உ. சி. பேசுகிறுர்.]

ஒரு குரல் : தொழிலாளர் தலைவர் சிதம்பரம் பிள்ளை,

பல குரல்கள் : வாழ்க !

ஒ. கு. : ஆலைத் தொழிலாளர் ஒற்றுமை.

ப. கு. : ஓங்குக !

வ. உ. சி. : அன்பார்ந்த உழைப்பாளர் பெருமக்களே ! உங்கள் அனைவருக்கும் சிதம்பரத்தின் மகிழ்ச்சி கலந்த நல் வாழ்த்துக்கள். புகழ் பெற்ற இந்தத் தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இருந்து வந்த மனக்கசப்பு இன்றோடு தீர்ந்துவிட்டது. நமது கோரிக்கைகளை நிர்வாகிகள் நிபந்தனையின்றி ஏற்றுக்கொண்டனர். கூலியிலே உயர்வும் நோய்வாய்ப்பட்ட நாட்களிலே சம்பளத்தோடு விடுமுறையும் உங்களுக்குக் கிடைத்து விட்டன. இனி நடந்ததையெல்லாம் மறந்து, எப்பொழுதும்போல் வேலைக்குத் திரும்ப வேண்டும். இது எனது வேண்டுகோள் !...வாழ்க தொழிலாளர் ஒற்றுமை !

ப. கு. : வாழ்க !...

வ. உ. சி. : வெல்க உரிமைக் குரல் !...

ப. கு. : வெல்க !...

ஒ. கு. : தொழிலாளர் தலைவர் வ. உ. சி. !...

ப. கு. : வாழ்க !...

ஒ. கு. : ஆலைத் தொழிலாளர் சங்கம் !...

ப. கு. : வாழ்க !...

[காட்சி முடிவு]

## காட்சி : 9

**இடம்:** பாண்டித்துரைத் தேவர் வீடு.

**உறுப்பினர்கள்:** பாண்டித்துரைத் தேவர், வ. உ. சி., மாசிலாமணி.

*[பாண்டித்துரைத் தேவர் சாய்வு நாற்காலியி லமர்ந்து ஏதோ படித்துக்கொண்டிருக்கிறார். வ. உ. சி. யும், மாசிலாமணியும் உள்ளே வருகிறார்கள்.]*

பாண்டித்துரைத் தேவர் (எதிர்கொண்டு அழைத்து): வாருங்கள்! வாருங்கள்!

*[வ. உ. சி. யும், மாசிலாமணியும் வணங்கி]*

வ. உ. சி.: வணக்கம்.

பாண்டி: உட்காருங்கள். உங்கள் வருகைக்காகவே காத்திருக்கிறேன்.

*[மூவரும் உட்காருகிறார்கள்.]*

வ. உ. சி.: மாசிலாமணி, இவர்கள்தான் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராக விளங்கும் பேறு பெற்ற வர்கள். நான்காவது தமிழ்ச் சங்கத்தைத் தோற்று வித்த தமிழ் வள்ளல். பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் அவர்களைத் தெரியாத வர்களே தமிழ்நாட்டில் இல்லை.

பாண்டி: பிள்ளையாண்டான் யாரோ?...

வ. உ. சி.: மாசிலாமணிப் பிள்ளை. பெயருக்கேற்ற குணம் படைத்த இளைஞர். கிறிஸ்தவ மதத் தோன்றல். எப்பொழுதும் எனக்குத் துணையாக இருப்பவர். எங்கள் குடும்ப நண்பர்.

பாண்டி: உங்கள் நண்பர் என்றால் ஒழுக்கத்திற்கும் பண்புக்கும் கேட்கவா வேண்டும்...? வ. உ. சி., சுதேசிக் கப்பல் கம்பெனிக்காக, ஓய்வு ஒழிச்சல்

இல்லாது வேலை செய்து வருகிறீர்கள்! உடல் நலத்தையும் கவனித்துக் கொள்ளுங்கள்.

வ. உ. சி.: ஒரு மகிழ்ச்சியான செய்தி! சேலம் வக்கீல் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி நம்முடைய சுதேசிக் கப்பல் கம்பெனியில் ஆயிரம் ரூபாய்களுக்கு பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறார். இன்னொரு முக்கியமான செய்தி......பம்பாயிலுள்ள ஹாஜி முகம்மது பக்கீர் சேட் என்பவர், நமது சுதேசிக் கப்பல் கம்பெனியில் எண்ணாயிரம் பங்குகள் எடுத்துக் கொண்டிருக்கிறார். இரண்டு லட்ச ரூபாய்களை வாரி வழங்கியிருக்கிறார்.

பாண்டி: மிகவும் பாராட்ட வேண்டிய செய்திதான்! ஒரு முஸ்லீம் சகோதரர், அதுவும் வடநாட்டைச் சேர்ந்தவர். அவருடைய அருங்குணத்தையும், தேசிய உணர்ச்சியையும் என்னவென்று புகழ்வது? இதற்கெல்லாம் உங்கள் விடாமுயற்சிதான் காரணம். தாங்கள் கம்பெனியின் செயலாளராக இருக்கும்போது நம்பிக்கைக்கு என்ன குறை? வ. உ. சி., நம்முடைய கப்பல் கம்பெனிக்குச் சட்ட ஆலோசகர்களாக யார் யாரை நியமனம் செய்யப் போகிறீர்கள்?

வ. உ. சி.: சேலம் வக்கீல் திரு. விஜயராகவாச்சாரி யாரையும், திரு. எம். கிருஷ்ணன் நாயரையும் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

பாண்டி: மிக்க மகிழ்ச்சி. திறமையான வழக்கறிஞர் களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்...கப்பலை வாங்க பம்பாய்க்கு எப்போது பயணப்படப் போகிறீர்கள்?

வ. உ. சி.: நாளையே புறப்படுவதாகத் தீர்மானித்து விட்டேன்.

பாண்டி: ஒப்பந்தத்திலிருந்து நழுவப் பார்க்கும் டாஜ் பாய் ஸ்டீமர்ஸ் கம்பெனியார் உங்களிடமும் கண்டிப்பாக நடந்து கொள்ளுகிறார்கள் என்று

வைத்துக்கொள்வோம். பிறகு குறிப்பிட்டபடி நமக்கு கப்பல்கள் வந்து சேராவிட்டால் என்ன செய்வது ?

**வ. உ. சி.** (சிரித்து) : எடுத்துக்கொண்ட செயலை, வெற்றிகரமாக முடிக்காமல் சிதம்பரம் தூத்துக் குடிக்குத் திரும்பமாட்டான். இது உறுதி ! என் லட்சியம் கைகூடாமல் போகுமானல், என் இன்பக் கனவுகளுக்கு இடர் நேருமானல், ஆழ்கடல் இருக்கவே இருக்கிறது. புறமுதுகு காட்டி, தோல்வி யோடு ஒருபோதும் ஓடிவரமாட்டேன் ! கடலிலேயே குதித்து உயிர் நீப்பேன். இதுவே என் உறுதி மொழி !

**பாண்டி :** வாழ்க வ. உ. சி.! நீர் வெல்க ! பெருமை சான்ற உம் புகழ் தமிழர் நாகரீகத்தின் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கட்டும்!

**மாசிலா :** அண்ணுச்சியின் நெஞ்சுறுதியை நாம் எவ்வளவோ பாராட்ட வேண்டும். இப்போது குழந்தை உலகநாதனுக்குக் கடுமையான ஜுரம்.

**பாண்டி :** அப்படியா ?...

**மாசிலா :** ஆம், குழந்தை படுத்த படுக்கையில் கிடக்கிறுன். தந்தையாரும், அண்ணியாரும் பயணத்தை ஒத்தி வைக்குமாறு எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். பயனில்லை.

**பாண்டி :** அப்படியா ? இவ்வளவு நாழிகையாக என் னிடம் சொல்லவே யில்லையே ! (வ. உ. சி. யிடம்) என்ன இது ! குழந்தை நோயுற்றுக் கிடக்கும் பொழுது உங்களுக்கு ஊர்ப் பயணமா பெரிது ? ஒன்றிரண்டு வாரங்கள் தள்ளிப் புறப்படுவதால் எதுவும் கெட்டுவிடாது.

**வ. உ. சி. :** என்னை மன்னிக்க வேண்டும். பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் காலத்தை வீணுக்க நான் விரும்பவில்லை, என் கண்மணி உலக

நாதனைக் கடவுள் காப்பாற்றுவார். அவர் எல்லாம் அறிந்தவர். அவசரத் தந்தி வந்திருக்கும் இந்த நேரத்தில் என் கடமையை நான் ஒத்திவைக்க முடியாது.

பாண்டி: வ. உ. சி., நீங்கள் மேலோர்; நூலோர். தன்நலங்கருதாத தகைமையாளர்! என் வாழ் நாளில் உங்களைப்போல் ஒரு உண்மைத் தொண்டரை நான் கண்டதே இல்லை. உங்கள் செல்வத் திருமக னுக்கு நீண்ட ஆயுளையளிக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன். வ. உ. சி., நீங்கள் கப்பலுடன் தூத்துக்குடி துறைமுகம் வரும்பொழுது மாபெரும் வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். வெள்ளைக்காரக் கம்பெனியார் இந்த விழாவைப் பார்த்து வியப்படைய வேண்டும்.

வ. உ. சி.: 'செய்வன திருந்தச் செய்'வதில் தங்களுக்கு நிகர் யாரிருக்கிறார்கள்.

[காட்சி முடிவு]

## காட்சி: 10

இடம்: தூத்துக்குடி ரயில் நிலையம்

உறுப்பினர்கள்: அரங்கசாமி ஐயங்கார், கறையான் பிள்ளை, பாரதியார்

[அரங்கசாமி ஐயங்காரும், கறையான் பிள்ளையும் நின்று கொண்டிருக்கிறார்கள் கறையான் பிள்ளை எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறார்.]

அரங்க: கறையாம் பிள்ளை!

[மீண்டும் கறையான் பிள்ளை பார்த்துக் கொண் டிருப்பது கண்டு]

"ஓய்! கறையாம் பிள்ளை!...

கறையான் (திடுக்கிட்டு): ஸார்!...,

அரங்க: என்னய்யா நான் கத்திண்டே இருக்கேன். நீ எங்கயோ பாத்துண்டு நிக்கறயே? சே சே! கொஞ்சங் கூட 'டிஸிப்பிளின்' தெரியலேயே?

கறை: டிஸிப்பிளின் தெரிஞ்சு கொள்ளணும்னுதானே ஸார், உங்களண்டே நான் குமாஸ்தா வேலே பாக்கிறேன்.

அரங்க. நிறுத்தய்யா! அவானே பாலோ பண்ணி ஸீக்ரெட் என்னன்னு தெரிஞ்சுண்டு வந்தயா?

கறை: ஸார்!...

அரங்க: என்னய்யா முழிக்கிறே? சொல்லேய்யா.

கறை: ஒண்ணுமில்லே சார்! அந்த 'ஹாப் ஷேவிங்' விஷயத்தை நீங்க இவ்வளவு சீக்கிரம் மறந்துடப் படாது. இனிமேல் சிதம்பரம் பிள்ளைவாள் ஜோலிக்குப் போறது அவ்வளவு...

அரங்க: ஒய்! நீ என்ன நினேச்சுண்டிருக்கே. ஏய்யா, எனக்கே புத்தி சொல்லவா உனக்குச் சம்பளம் கொடுக்கறேன்.

கறை: அதுக்கில்லே சார், வக்கீல் சிதம்பரம் பிள்ளைவாள் கப்பல் வாங்கி வர இன்னிக்கு பம்பாய் புறப் படப் போகிருர். இன்னும் சித்த நாழியிலே...

அரங்க: வாயை மூடய்யா, கப்பலாம் கப்பல்! கப்பல் கம்பெனி பெயரைச் சொல்லி, பெரிய மனுஷாளண்டே பணத்தைப் பறிக்கறது தெரியுமய்யா எனக்கு. ஊம்! காலம் கெட்டுப் போச்சய்யா, காலம் கெட்டுப் போச்சு.

கறை: காலம் ஒண்ணும் கெட்டுப் போகலே சார்! வெள்ளைக்காரங்களுக்கு காலம் கிட்டிப் போச்சுன்னுதான் எல்லாரும் சொல்ருங்க.

அரங்க: சீ......வாயை மூடய்யா! தத்துப் பித்துன்னு உளருதே—அதோ அங்கே பாரய்யா, அவாளெல்லாம் கூட்டம், கூட்டமா போயிண்டும், வந்துண்டும்

இருக்கிறதை. தூத்துக்குடி ரயில்வே ஸ்டேஷன் இன்னிக்கி ஏக கலகலப்பான்னு இருக்கு.

கறை: சார், நாம இப்படியே கிளம்பீடலாம் சார். இன்னும் சித்த நாழியிலே சிதம்பரம் பிள்ளைவாளை வழியனுப்புற கூட்டம் ஏகமா வந்துடும். நீங்க இங்கே தனியா நிண்ணுண்டிருக்கறது... ·

அரங்க: சும்மா இருமய்யா...ஓய், சிதம்பரம்பிள்ளை அந்தக் கப்பலை வாங்காமெ தடுக்கறதுக்கு ஏதாவது வழி இருக்காய்யா?...ஒம்ம யோசனை...

[பாரதி வருகிருர்]

பாரதி: குடு, குடு, குடு, குடு, நல்லகாலம் வருகுது! நல்ல காலம் வருகுது! தரித்திரம் போகுது! செல்வம் வருகுது! படிப்பு வளருது! பாபம் தொலையுது! படிச்சவன் சூதும், பாபமும் பண்ணினல், போவான் போவான் ஐயோன்னு போவான், ஐயோன்னு போவான்!

[அரங்கசாமி ஐயங்கார் பாரதியைப் பார்த்த வாறு]

அரங்க: யாரோ கிறுக்குப் போலிருக்கு. ஓய்! யாரய்யா நீர்? என்ன நோட்டம் பண்றீர்?

[பாரதி உரக்கச் சிரிக்கிருர். பாரதியை அடையாளம் கண்டுகொண்ட கறையான் பிள்ளை தவிக்கிருர்.]

மெண்டல் வொர்ரி போலிருக்கு, நான்சென்ஸ். கேள்கறதுக்கு பதில் சொல்லாமெ சுத்த 'ப்பூலிஷா' இருக்கான்!

பாரதி: அட சுதம்பத் தமிழா! திட்டத்தான் திட்றீர்; அதைத் தமிழிலே திட்டறதுக்கென்ன? ஹூம்! ஆங்கிலக் கல்வி முறை வந்தாலும் வந்தது. இந்திய மக்களுடைய தன் மதிப்பு இப்படியா குட்டிச்சுவராப் போகணும்? ஒம்ம மாதிரி ஆங்கில மோகம் பிடிச்ச

புத்திசாலிகளாலே தானய்யா நமது அன்னை மொழி யான கன்னித் தமிழ் அடிமைப்பட்டுக் கெடக்குது. இத்தாலி தேசத்துலே இத்தாலி மொழியிலேதான் ஆட்சி நடக்குது. ஜெர்மனியிலே ஜெர்மன் மொழி, ஜப்பானிலே ஜப்பான் மொழி, ருஷியாவிலே ருஷ்ய மொழி; இப்படி ஒவ்வொரு நாட்டிலேயும் அந் தந்தத் தாய் மொழியிலேதான் ஆட்சி நடக்குது. ஆனல் இந்த துரதிருஷ்டம் பிடிச்ச தமிழ் நாட்டிலே மட்டும் ஒம்ம மாதிரி அடிமைப் புத்தி படைச்சவங்க இருக்கிறதினலே ஆங்கிலத்திலே ஆட்சி நடக்குது. நீர் ஒரு தமிழனயிருந்தும், தமிழனகிய என்னண் டையே ஆங்கிலத்திலே அளக்கிறீரே!...வெட்க மில்லே? ஒம்ம மாதிரி புத்திசாலிகளைத் தயாரிக்கிற அந்தப் பல்கலைக் கழகத்தைக் கடவுள்தான் காப்பாத் தணும்...ஒய்! நானுந்தாங்காணும் ஆங்கிலம் படிச் சேன். ஆனல் ஒண்ணும் பிரயோஜன மில்லே!

" செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது
தீங்கெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலமோர் எட்டுணையும் கண்டிலேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்."

—தெரியுமாங்காணும்?......

அரங்க: என்னய்யா உளர்றீர்?

கறை: ஸார், பெரியவங்களை அப்படியெல்லாம் சொல்லா தீங்க சார்.

[பாரதியிடம் சென்று.]

சாமீ, கோபிச்சிக்காதிங்க சாமி. உங்களை யாரோன்னு நெனைச்சி பேசருர். இவருதான் பாரிஸ்டர் அரங்கசாமி ஐயங்கார்.

பாரதி (சிரித்து): பலே! பலே! நீர்தான ஒய்! தூத் துக்குடி கோரல் மில்லுலே வக்கீலா இருக்கிறவர்?

அரங்க (கறையாம் பிள்ளையை தனியாய்க் கூப்பிட்டு): ஏய்யா, இந்த மனுஷனை உனக்கு முன்னடியே தெரியுமா?

கறை : என்ன சார், இப்படிக் கேக்கறீங்க? இவங்க தான் கவி சுப்பிரமணிய பாரதியார் !

[அரங்கசாமி ஐயங்கார் திடுக்கிடல்.]

பாரதி (சிரித்து) : ஏங்காணும் நெருப்பை மிதிச்சமாதிரி துடிக்கிறீர். பயப்படாதீர். அச்சமே மடமை. அச்ச மில்லாமையே அறிவு. விபத்துக்கள் வரும்பொழுது நடுங்குபவன் மூடன். அவன் எத்தனை சாஸ்திரம் படித்திருந்தாலும் மூடன் மூடன்தாங்காணும். பாரத தேசம் விடுதலை பெற, கல்வி வேண்டுமென் கின்றார்கள் சிலர். நாம் துணிவு வேண்டுமென் கிறோம். ஆமாங்காணும்; துணிவே தாய்; துணிவே சகலமும். ஏங்காணும், சிதம்பரம் பிள்ளை வசிக்கிற ஊர்லெதானே நீரும் இருக்கீர்.

[ஐயங்கார் தலையை அசைக்கிறார்.]

பின்னே ஏங்காணும் பயப்பட்டீர். சுதேசிக் கப்பல் ஓட்டப் போறாரே தலை கொடுத்த தாளுபதி வம் சத்துச் சிதம்பரம் பிள்ளைவாள், கேள்விப்பட்டீரோ?

[மறுபடியும் தலையசைக்கிறார்.]

அட, நம்ம ஜில்லாக்கார ராச்சேய்யா.

[உள்ளே சிதம்பரம் பிள்ளை பற்றிய வாழ்த்தொலி கள் முழங்கும் சப்தம் கேட்கிறது.]

ஒருவர் : வ. உ. சிதம்பரம் பிள்ளை !...

பலர் : வாழ்க !...

ஒருவர்: புதிய கப்பல் வாங்க, பம்பாய் செல்லும் வ.உ.சி. அவர்கள் !...

பலர் : நீடுழி வாழ்க !...

[கேட்டவாறு நின்ற பாரதி.]

பாரதி : ஓ! சிதம்பரம் பிள்ளை வந்துட்டாப்பலெ இருக்கு!

[விரைந்து போகிறார் பாரதி.]

அரங்க (கறையான் பிள்ளையிடம்): ஏய்யா, கல்லுப் பிள்ளையார் மாதிரி நிண்ணுண்டிருந்தயே, பார் தீன்னு ஒரு வார்த்தை முன்னுடியே சொல்லப் படாது? நல்ல வேலை பொழைச்சேன். வாய்யா, வாய்யா...

[விரைந்து போகிருர்கள்.]

[காட்சி முடிவு]

## காட்சி: 11

இடம்:—பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி காரியாலயம்.

உறுப்பினர்கள்:—ஜான், பிரவுன், சப் கலெக்டர், ஆஷ் துரை.

[ஜான், பிரவுன் இருவரும் கப்பல் கம்பெனியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.]

ஜான்: வி. ஓ. சிதம்பரம் பிள்ளை ஒரு துணிவான பேர் வழி. பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம் பெனிக்கு எதிராக, நேஷனல் ஸ்டீம் நாவிகேஷனை பிடிவாதமாக ஆரம்பித்துவிட்டானே!

பிரவுன்: இந்திய ஜனங்களுக்கு நேஷனல் பீலிங்கை உண்டாக்கி விட்டான். ரொம்ப தைரியமான முயற்சி மிஸ்டர் ஜான். இனி பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி நடத்துவதே கஷ்டம்.

ஜான்: வி. ஓ. சிதம்பரம் பிள்ளை ஷாலேன் ஸ்டீமர்ஸ் டாஜ் பாயிடம் ஒப்பந்தம் செய்து, காலியா, லாவோ என்ற கப்பல்களுடன் பாம்பேயிலிருந்து, தூத்துக் குடிக்குப் புறப்பட்டு விட்டானும்.

பிரவுன்: இது உமக்கு எப்படித் தெரிந்தது?

ஜான்: பாம்பே ஹார்பரிலிருந்து தந்தி வந்திருக்கிறது.

பிரவுன் (உலவிக்கொண்டே). ஊம்! பிரிட்டிஷ் கப்பலுக்கு இனிமேல், ஏற்றுமதியே கிடைக்காமல் செய்து விடுவார்கள், இந்தியர்கள்.

ஜான்: கேபிடல் இருந்தால் மட்டும் போதாது. கப்பலை அவர்களால் தொடர்ந்து ஓட்ட முடியுமா என்ன?

பிரவுன்: ஏன் முடியாது? தமிழர்களுக்கும் நீண்ட காலமாகக் கடல் வியாபாரத்தில் அனுபவமுண்டல்லவா?

ஜான்: (சிரித்து) அதெல்லாம் அந்தக் காலம். இப்போ இந்தியாவை பிரிட்டிஷ் ஆள்கிறது.

பிரவுன்: அதனுல்?

ஜான்: நமக்குச் செல்வாக்கு அதிகம். நினைத்த மாத்திரத்தில் சுதேசிகளின் கம்பெனியை நசுக்கிவிட நம்மால் முடியாதா?

பிரவுன்: எஸ்!...கவர்மென்ட் ஹெல்ப்புக்கு ட்ரை பண்ணிக் காரியத்தை முடிக்கனும்.

ஜான்: மிஸ்டர் பிரவுன்! நாம் ஏமாந்தவர்களல்ல. கலெக்டர் மிஸ்டர் விஞ்சும், சப் கலெக்டர் மிஸ்டர் ஆஷும் நம்முடைய நண்பர்கள்.

பிரவுன்: எஸ்! மிஸ்டர் ஆஷ் இந்தியர்கள் என்ருலே வெறுக்கக் கூடியவர். அவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனக்கு இன்னெரு யோசனையும் தோன்றுகிறது.

ஜான்: என்ன சொல்லும்?

பிரவுன்: வி. ஓ. சிதம்பரம் பிள்ளைக்கு லஞ்சம் கொடுத்துப் பணத்தால் சரிக் கட்டிவிட்டால்...?

ஜான்: குட் ஐடியா!...அப்படியும் முயற்சிக்கலாம். அதோடு நம்ம கம்பெனி ஆதிக்கத்திலுள்ள எந்த ஹார்பரிலும் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு ஆதரவோ, உதவியோ கிடைக்காமல் கப்பலையே 'பாய்காட்' பண்ணும்படியாகச் செய்துவிடலாம்!

**பிரவுன் :** சபாஷ்! வெரிகுட் ஐடியா.

**ஜான் :** இன்னென்று; இதையே ராஜத் துரோகக் குற்ற மாக்கி கோர்ட் மூலம் நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளலாம். அவர்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொள்ளட்டுமே!...

**பிரவுன் :** பலே! பலே! அற்புதமான பிரித்தாளும் தந்திரம்!

[இருவரும் சிரிக்கிருர்கள், ஆஷ் வருகிருர்]

**ஆஷ் :** (வந்துகொண்டே) குட் ஈவினிங், மிஸ்டர் ஜான்...

**ஜான் :** ஹலலோ! குட் ஈவினிங்! டென் மினிட்ஸ்க்கு முன்னடிதான் உங்க அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றிப் பேசிக்கிட்டு இருந்தோம்.

**ஆஷ் :** ஓ! அப்படியா! வெரிகுட்.

**பிரவுன் :** நம்ம பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷனுக்குப் போட்டியாக, நேஷனல் ஸ்டீம் நேவிகேஷனை வி. ஓ. சிதம்பரம்பிள்ளை ஆரம்பித்திருப்பது...

**ஜான் :** ரொம்ப கவலையடைஞ்சிருக்கோம் ஸார், ஓரியா இருக்கு. நம்ம கப்பல் கம்பெனி என்ன ஆகுமோ என்று குழப்பமா இருந்து கொண்டிருக்கிறோம்.

**ஆஷ் :** டோண்ட் ஓரி, கவலையை விடுங்கள்! வி. ஓ. சிதம் பரம் பிள்ளையின் நேஷனல் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியின் ப்யூச்சர் இந்த ஆஷ் கையில். ஒழித்துக் கட்டி விடுகிறேன். இதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஐ ஆம் ரெடி! வி. ஓ. சிதம்பரம் பிள்ளையின் கப்பல் கம்பெனியை உடைத்துவிட்டுத்தான் மறு வேலை.

**பிரவுன் :** தேங்க்யூ மிஸ்டர் ஆஷ்! தேங்க்யூ.

[கை குலுக்கிக் கொள்கிருர்கள்]

[காட்சி முடிவு]

## காட்சி : 12

இடம் : சுதேசிக் கப்பல் கம்பெனி அலுவலகம்.

உறுப்பினர்கள் : வ. உ. சி., பாரதி, மாசிலாமணி, பாண்டித்துரைத் தேவர்.

[வ. உ. சி. ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். மாசிலாமணி வருகிறார்.]

மாசிலா : வணக்கம் அண்ணாச்சி !

வ. உ. சி. : வா மாசிலாமணி, உட்கார். (மாசிலாமணி உட்காருகிறார்) நாளை கப்பல் ஓடவிடும் விழாவுக் கான ஏற்பாடுகள் எல்லாம் முடிந்தன. கப்பலைப் பார்த்தாயா ?

மாசிலா : பார்த்தேன், மனத்திற்கு ஒரு புதிய ஊக்கத் தையும், உற்சாகத்தையும் உண்டாக்கிவிட்டது அண்ணாச்சி. ஒரு முக்கிய செய்தி !...

வ. உ. சி. : என்ன ?

மாசிலா : பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியார் கட்டணங் களைக் குறைத்திருப்பதாகத் திடீரென்று விளம்பரம் செய்திருக்கிறார்கள். இதோ பாருங்கள்.

[ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுக்கிறார்.]

வ. உ. சி. : முன்பே கேள்விப்பட்டேன். பலத்த போட்டி ஏற்பட்டே தீரும். ம்...இதற்கெல்லாமா நாம் அஞ்சிவிடப் போகிறோம் ?

[பாரதியார் வந்துகொண்டே]

பாரதி : வந்தேமாதரம், சிதம்பரம் பிள்ளைவாள்.

[பாரதியைக் கண்டதும், இருவரும் எழுந்து வணங்கி.]

வ. உ. சி. : வந்தேமாதரம் ! பாரதியாரா, வர வேண்டும்...வரவேண்டும்...உட்காருங்கள்.

**பாரதி** *(பாரதி நடந்துகொண்டே)* : உட்காரலாம் பிள்ளைவாள்! இந்தத் தென்பாண்டி நாட்டு மண்ணை மிதித்துவிட்டாலே கிழவன் கூடக் குமரனாகி விடுவானே !...

*[வ. உ. சி. சிரிக்கிறார். பாரதி கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தவாறு.]*

பலே ! பாண்டியா......பிரம்மாண்ட கட்டிடமா தோணுதே !......ம்...இருக்கட்டும், இருக்கட்டும். வெள்ளைக்காரன் பயந்து போகணும் ; இது சுதேசிக் கப்பல் கம்பெனி காரியாலயமா, சுதந்திரக் கோயிலா என்று ?...

*[எல்லோரும் சிரிக்கிறார்கள்.]*

**வ. உ. சி.** : உண்மைதான், கவிஞரான உங்கள் உள்ளந் தானே காலத்தை நிர்ணயிக்கும் கண்ணாடி.

**பாரதி** : பலே, பலே ! அப்படிச் சொல்லும். வந்தே மாதரம். ம்...என்ன, ஏற்பாடுகள் எல்லாம் பலந்தானா ?

**வ. உ. சி.** : சிறந்த முறையில் செய்யப்பட்டிருக்கிறது. ஓடப்போகும் கப்பலுக்கு, கவிஞரின் ஆசிதான் தேவை.

**பாரதி** : *(உரக்கச் சிரித்து)* ராஜ ராஜ சோழனுக்கு எள்ளுப்பேரன் சிதம்பரச் சோழனல்லவா நீர்? நீர் ஓட்டுகிற கப்பல் அற்பமாகவா இருக்கும்...ம், எங்கே ? ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர்வாள் இல்லையோ ?

**வ. உ. சி.** : வந்துவிடுவார்கள் இப்பொழுது. *(மாசிலா மணியைக் காட்டி)* இவர்தான் நான் சொன்ன மாசிலாமணிப் பிள்ளை. நல்ல ஊக்கமுள்ள நண்பர்.

**பாரதி** : பேஷ் ! சிங்கத்தின் அருகில் சிறு முயலா நிற்கும்? *(மாசிலாமணி முதுகில் தட்டி)* ஏன் தம்பி......?

*[பாண்டித்துரைத் தேவர் வருகிறார். எல்லோரும் வணங்குகிறார்கள்.]*

**பாண்டி :** ஓ ! பாரதியா ! வரவேண்டும்.

**பாரதி :** ஜமீன்தார்வாள்! வாருங்க வாருங்க. நமஸ்காரம். ஏது. சிதம்பரம் பிள்ளை இருக்கறபோது உங்களுக்குப் பொறுப்பு அதிகமா இருக்காது ; இல்லையா ?

**பாண்டி :** சரியாகச் சொன்னீர். எல்லாம் வ. உ. சி.யே கவனித்துக் கொள்கிருர். எனக்கு இதிலே பெரு மகிழ்ச்சி.

**பாரதி :** வரையாது கொடுக்கும் வள்ளல் பாண்டித் துரைத் தேவரும், நம்ம வீரச் சோழர் சிதம்பரம் பிள்ளையும் இருக்கிற தென்பாண்டி நாட்டுக்குக் குறையா இருக்கப் போகிறது ?

**பாண்டி:** பாரதி! நீங்கள் 'இந்தியா' பத்திரிகையை கப்பல் விடுவிழா மலராக, வெளியிடுவதைக் கேட்டு, பரவச மடைந்தேன். மலர் வந்துவிட்டதா ?

**பாரதி :** மலர் நாளைக்குத்தான் மலரும் ! ரயிலில் வந்து சேரும்.

**பாண்டி :** பாரதி ! கப்பலை நீங்கள் இன்னும் பார்வையிட வில்லையே ?

**பாரதி :** பார்க்கத்தானே வந்திருக்கிறேன் ! நம் தூத்துக் குடிச் சோழர் வாங்கி வந்திருக்கும் கப்பலல்லவா ? ஜாம், ஜாம் என்று இருக்குமே, வாருங்கள் போய்ப் பார்க்கலாம்.

*[எல்லோரும் விரைந்து போகிருர்கள்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 13

இடம் : தூத்துக்குடி வீதி.

உறுப்பினர்கள் : வாஞ்சி, நீலகண்டன், கிருஷ்ணசாமி.

[வாஞ்சி, நீலகண்டன், கிருஷ்ணசாமி மூவரும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.]

**வாஞ்சி :** கிருஷ்ணசாமி, தூத்துக்குடி ஊரெங்கும் இன்று விழாக் கோலமாக அல்லவா இருக்கிறது.

**கிருஷ்ண :** எல்லாவற்றிற்கும் தலைவர் வ. உ. சி.யின் செல்வாக்குத்தானப்பா காரணம். சுதேசிக் கப்பலை இன்று ஓடவைக்க அரும்பாடுபட்ட தலைவர் : மக்களின் ஒத்துழைப்புக்குக் கேட்கவா வேண்டும்?

**வாஞ்சி :** இந்தக் கப்பல் விடும் விழாவை ஒரு பெரிய தேசீயத் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்று எண்ணிய வ. உ. சி.யின் ஆசை நிறைவேறிவிட்டது. ஆஹா !......வளைவுகளாலும், தோரணங்களாலும் கடற்கரை அலங்கரிக்கப்பட்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. வீட்டுக்கு வீடு மாவிலைத் தோரணங்கள்! மங்கையரின் கை வண்ணமாம் மாக்கோலங்கள்! நமக்கெல்லாம் ஒரு புத்துணர்ச்சி அல்லவா ஏற்படுகிறது!

**நீலகண்டன் :** கிருஷ்ணசாமி, நம்ம புது மாப்பிள்ளை வாஞ்சிநாதன், உண்மையாகவே ஒரு தியாகிதான்.

**கிருஷ்ண :** (சிரித்து) எப்படி ? கொஞ்சம் விளக்கமா சொல்லப்பா ?

**நீல :** புதுச்சேரியிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். பக்கத்தில் திருநெல்வேலியிலே வாஞ்சியின் மாமனர் வீடு இருக்கிறது. புது மனைவி இருக்கிருள். அதை மறந்து கப்பல் விடும் விழாவைப் பார்க்க ஆர்வத்தோடு நம்முடன் இருக்கிருனே !...இது எவ்வளவு பெரிய தியாகம் !

கிருஷ்ண (சிரித்து): ஒ !...அதைச் சொல்றயா ?

வாஞ்சி: நீலகண்டா! மனேவியை நாளை பார்க்க முடியும். வ. உ. சி., கவி பாரதி, வள்ளல் பாண்டித்துரைத் தேவர் முதலியோர் கலந்துகொள்ளும் இந்தப் பெரு விழாவை, இன்று தவறினல் பார்க்க முடியுமா ? எனக்குக் கடமைதானப்பா முக்கியம் !...

நீல: (சிரித்து) பலே! இல்லையென்றல் புரட்சி உள்ளம் படைத்த எங்களுக்கு நீ தலைவனுய் இருக்க முடியுமா?

கிருஷ்ண: வாஞ்சி, துறைமுகத்திலே கூட்டம் ஏராள மாய்க் கூடிவிடும். சீக்கிரம் போவோம்.

வாஞ்சி: ஆமப்பா ! விழாவைக் காண இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஏராள மான வணிகர்கள் வந்திருக்கிறர்கள். புறப்படு ! புறப்படு !!

[விரைந்து போகிறர்கள்.]

[காட்சி முடிவு]

## காட்சி: 14

இடம்: கடல்.

உறுப்பினர்கள்: வ. உ. சி., பொதுமக்கள், பாரதி முதலியோர்.]

[நாதசுர இசை முழங்குகிறது. ஆலய மணிகள் ஒலிக்கின்றன. சங்கு முழங்குகிறது. வேட்டுக்கள் அடித்து ஆரவாரம் செய்கிறர்கள். பொது மக்களின் கோஷங்கள்.]

ஒரு குரல்: சுதேசிக் கப்பல்...

பலர்: நீடூழி வாழ்க !...

ஒ. கு.: பாரத நாடு...

பலர் : வாழ்க !...

ஒ. கு. : கப்பலோட்டிய தமிழன் சிதம்பரம் பிள்ளை...

பலர் : வாழ்க !...

ஒ. கு. : வள்ளல் பாண்டித்துரைத் தேவர்...

பலர் : வாழ்க !...

ஒ. கு. : வந்தே மாதரம் !...

பலர் ! வந்தே மாதரம் !...

பாரதி : அமைதி ! அமைதி! கப்பலோட்டிய தமிழன் வீரச் சிதம்பரனுர் பேசுகிருர். தமிழர் தளபதி சிதம்பரனுர் பேசுகிருர். கேளுங்கள், கேளுங்கள்!

வ. உ. சி. : என்னருமைத் தமிழ்ப் பெருமக்களே ! இந்திய நாடு முதல், ஈழ நாடு ஈருக வந்து கூடியிருக்கும் ஆசிய நாட்டு வணிகப் பெருமக்களே ! உங்களனைவருக்கும் வ. உ. சிதம்பரத்தின் தாழ்மையான வேண்டுகோள் !

இதோ...தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறக்க, கடலைக் கிழித்துக்கொண்டு நம் சுதேசிக் கப்பல் புறப்பட்டு விட்டது. திரை கடலோடும் சுலையை நம் பாரதநாடு திரும்பப் பெற்றுவிட்டது. எல்லோரும் மனங்குளிர வாழ்த்துங்கள்!

*[பொதுமக்கள் மீண்டும் கோஷமிட, சுதந்திரக் கப்பல் கெம்பீரத்துடன் செல்லுகிறது.]*

## கப்பல் பாட்டு

**போகுதடா !—கப்பல் போகுதடா !**
**பொங்கியெழும் அலைகிழித்துப்**
**போட்டி போட்டுத் தமிழர் கப்பல்** (போகுதடா)

"சிங்களம் புட்பகம் சாவக மாகிய
தீவு பலவினும் சென்றேறி"
எங்கள் மரக்கலம் வென்ற சரித்திரம்
இன்று திரும்பிடும் காட்சியடா!

அலை ஒடுங்குதடா!—வெள்ளையர்
குலை நடுங்குதடா!— (போகுதடா)

சுதேசிக் கப்பல்!—எங்கள்
சுதந்திரக் கப்பல்!!
விதேசி கண்டு வெட்கம் கொள்ளும்
சுதேசிக் கப்பல்—எங்கள் சுதந்திரக் கப்பல்

செந்தமிழ் நாட்டின் சொந்தமாகவே
வந்ததிந்தக் கப்பல்!—எங்கள்
சிதம்பரம் பிள்ளை கனவு பலிக்கச்
செய்வதிந்தக் கப்பல்!
வந்தே மாதரம் என்று முழங்கும்
மகிமை காட்டும் கப்பல்—இந்த
மண்ணுலகெங்கும் தமிழரின் அன்புக்
கொடியை நாட்டுங் கப்பல்! (சுதேசிக்)

—புத்தனேரி சுப்பிரமணியம்

[காட்சி முடிவு]

## காட்சி : 15

*இடம் :—பொன்னம்மாள் வீடு.*

**உறுப்பினர்கள்** :—வாஞ்சி, பொன்னம்மாள், பெரியவர்.

*[பொன்னம்மாள் வீட்டிற்குள் இருக்கிருள். வாஞ்சி வந்து கூப்பிடுகிருன்]*

வாஞ்சி : *பொன்னம்மா, பொன்னம்மா!*

*[பொன்னம்மாள் வந்து வாஞ்சியைக் கண்டு மகிழ்ச்சியுடன்.]*

பொன்னம்மா : வாருங்கள் ; எப்பொழுது வந்தீர்கள் ?...

வாஞ்சி : புதுவையிலிருந்து நேற்றே வந்துவிட்டேன்.

பொன்ன : (கொஞ்சலாக) அதுதானே கேட்டேன். நேற்று வந்தவர்கள் இன்று வருகிறீர்கள்...... இல்லையா ?...

வாஞ்சி : என்ன பொன்னு இது ! திடீரென்று உன் முகம் ஒளியிழந்து விட்டது ?

பொன்ன : அகத்தில் அழகு இருந்தால்தானே முகத்தில் ஒளியிருக்கும் !

வாஞ்சி : ஏன் ?

பொன்ன : எல்லாம் உங்களால் ஏற்பட்டதுதான்.

வாஞ்சி : என்னுலா...! என்ன பொன்னு, என்மீதே பழியைப் போடுகிருயே.

பொன்ன : நீங்கள் புதுச்சேரி போய் மாதம் ஒன்றாகிறது. என்மீது உங்களுக்கு உண்மையான அன்பிருந்தால், ஒரு கடிதமாவது எழுதியிருக்க மாட்டீர்களா ?

வாஞ்சி : அடடா ! இதற்காகவா இத்தனை கோபம் ? சதா உன் நினைவுதான் எனக்கு. இரவில் தூக்கமே வருவதில்லை. என்னைத் தவருக எண்ணிக் கொள்ளாதே ! என் கண்ணல்ல...!

பொன்ன : போங்கள் ; ஹுக்கும். கண்ணே பொன்னே என்று வர்ணித்து என்னைச் சிரிக்கவைத்து விடுகிறீர்கள்.

*[சிரிக்கிருள்.]*

வாஞ்சி : அப்படியானுல் நான் வந்தவுடன் உன் முகத்தைக் கோபமாக வைத்துக் கொள்வதென்று தீர்மானித்திருந்தாயா ? பொல்லாத பெண்.

பொன்ன : போகட்டும். தூத்துக்குடிக்கு நேற்றே வந்தீர்கள் இல்லையா...?

**வாஞ்சி :** ஆமாம்.

**பொன்ன :** ஆனுல், நான் நெல்லையில் தவிப்பது இப்பொழுதுதான் உங்களுக்கு நினைவு வந்ததா ?

**வாஞ்சி :** நான் தூத்துக்குடிக்கு வந்ததின் காரணத்தை தெரிந்தால் நீ கோபிக்கவே மாட்டாய்.

**பொன்ன :** தெரியுமே எனக்கு.

**வாஞ்சி :** தெரியுமா ?

**பொன்ன :** ஊம்!...சுதேசிக் கப்பல் ஓடவிட்டதைப் பார்ப்பதற்குத்தானே வந்தீர்கள் ?

**வாஞ்சி :** ஆம், கப்பலைக் காணவும் வந்தேன். இந்தக் கண்மணியைக் காணவும் வந்தேன்.

**பொன்ன :** நிஜமாகவா !...?

**வாஞ்சி :** ஆம் கண்ணே !

**பொன்ன :** கப்பலைப் பார்த்தீர்களா ?

**வாஞ்சி :** பார்த்தேன். கண்ணுரக் கண்டு களித்தேன் என் நெஞ்சத்திலே ஒளி வீசும் சுதந்திரக் கனல், வெள்ளையரை விரட்ட உயிரையும் அர்ப்பணிக்கத் துணிந்து நிற்கும் என் ஆர்வம், என் குருநாதர் வ. வெ. சு. ஐயரின் இயக்கத்திலே நான் வைத்திருக்கும் பற்று, இவைகளுக்கு மென்மேலும் ஊக்கம் தருவதற்காகவே வ. உ. சிதம்பரனுர் சுதந்திரக் கப்பல் ஓட்டுகிருர் என்று கற்பனை செய்து கொண்டேன் ! வந்தேமாதரமென்ற மந்திரம் முழங்க, கடலைக் கிழித்து பவனிசென்ற நம் கப்பலைக் கண்டு களித்தேன் பொன்னு, கண்டு களித்தேன்.

**பொன்ன :** (சலிப்போடு) நல்ல வந்தேமாதர மோகங் கொண்டு அலைகிறீர்கள்.

**வாஞ்சி :** ஏன் பொன்னு, அப்படிச் சொல்கிருய் ? வந்தேமாதரம் என்று நம் மாநிலத் தாயை வணங்குவதில் யாருக்கு—என்ன நஷ்டம் ?

பொன்னா : எனக்கும் உங்களுக்கும்தான் நஷ்டம்.

வாஞ்சி : (திடுக்கிட்டு) என்ன ! என்ன சொல்லு கிறாய் ?

பொன்னா : நீங்கள் கல்யாணமாகியும் பிரம்மச்சாரியாகத் திரிகிறீர்களாம். உங்கள் போக்கு மாறவே மாறாதாம். நான் கூண்டுக்கிளி போல இங்கேயே தவிக்க வேண்டியதுதானும். அப்பா சொல்லுகிறார்.

வாஞ்சி : பொன்னம்மா ; நான் சொல்வதைக் கேள். சுதந்திரம் என்ற எனது புதிய சங்கற்பம் ஏற்படு முன்பே, என் உயிரை உனக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். இன்று நாம் திருமணமென்னும் ஒரு மனப்பட்டவர்களல்லவா ?

[அவளை நெருங்குகிறான்.]

பொன்னா : (விலகியவாறு) : ஊஹூம்...

வாஞ்சி : அதற்குள் வெட்கம் வந்துவிட்டதா ?

பொன்னா : ஒரு நல்ல சேதி சொல்லட்டுமா ?

வாஞ்சி : என்ன சொல், கண்ணே!

பொன்னா : அப்பா...(நாணத்துடன்) போங்கள், எனக்கு வெட்கமாக இருக்கிறது.

வாஞ்சி : பார்த்தாயா ! என்னிடம் சொல்ல வெட்கமா ? அப்பா...

பொன்னா : வந்து...(மீண்டும் வெட்கப்படுகிறாள்.)

வாஞ்சி : வந்து...?

பொன்னா : போங்கள். நான் சொல்லமாட்டேன்.

வாஞ்சி : மறுபடியும் பார்த்தாயா ? என் செல்லமல்ல ; சொல்லு, அப்பா வந்து...

[அவளை நெருங்கி கையைப் பிடிக்கிறான். பின்னே அப்பா வருவதைப் பார்த்து அவள் கையை உதறுகிறாள், வாஞ்சி கையை விடாமல்.]

**வாஞ்சி :** சொல்லு பொன்னு !...

[அப்பா வருகையை, கண்ணால் ஜாடை காட்டுகிறாள்.]

**பொன்ன :** அப்பா...

[சட்டென்று கையை விட்டு, அசட்டுச் சிரிப்புடன் நிற்கிறான்.]

**பெரியவர் :** பொன்னு ! யாரோட பேசிண்டிருக்கே ?

**வாஞ்சி :** நமஸ்காரம் மாமா !

**பெரியவர் :** ஓஹோ ! மாப்பிள்ளையா ? வாடா. ஊர்லெ கல்யாணம், மார்லெ சந்தனம்னு சொல்லு ; சிதம்பரம்பிள்ளை பிரமாதப் படுத்திண்டு விட்டாரே, அந்த ஒட்டைக் கப்பலைப் பார்க்க வந்திருப்பான். ஏண்டா வாஞ்சி ! அப்படித்தானே ? (பொன்னம்மாளிடம்) இவன்தானே நாளைக்கி ஆட்சி பண்ணப் போறான், இந்த தேசத்தை. ஏண்டா!

**வாஞ்சி :** போங்க மாமா ; உங்களுக்கு எப்பொழுதும் கேலிதான்.

[பொன்னம்மாள் சிரிக்கிறாள்.]

**பெரியவர் :** அது சரி···உங்க சுயராஜ்ய ஓர்க்கெல்லாம் எப்படியிருக்கு ?

**வாஞ்சி :** அதெல்லாம் தீவிரமா நடந்து வருகிறது மாமா !...

**பெரியவர் :** தீயை வை !...உங்க வந்தேமாதரக் கூட்டத்திலெ ஒரு வெள்ளைக்காரியே சேர்ந்திருக்காளாமே ?

**வாஞ்சி :** ஆமா !...அன்னிபெசண்ட் அம்மையார் என்று பெயர். கோபால கிருஷ்ண கோகலே போன்ற மிதவாதிகள் கொள்கையை ஆதரித்து வருகிறார்.

**பெரியவர் :** ஓஹோ ! அது மிதவாதமோ ? இதிலே தீவிரவாதம் வேறே இருக்கா ?

**வாஞ்சி :** ஆமா. வடக்கே பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய், இங்கே கவி சுப்பிரமணிய பாரதி, தீரர் சுப்பிரமணிய சிவா, வ. உ. சி. இவர்களெல்லாம் தீவிரவாதிகள் மாமா !

**பெரியவர் :** அப்படிச் சொல்லு. இதுலெ நீ எந்த வாதம் ?

**வாஞ்சி :** இந்த மிதவாதம், தீவிரவாதம் முதலிய வாய் வாதங்களிலெல்லாம் என் போன்றவர்களுக்கு நம்பிக்கையில்லே மாமா. பழிக்குப் பழி. ரத்தத்திற்கு ரத்தம்.

**பெரியவர் :** அதுக்கு என்ன பேரு ?

**வாஞ்சி :** பலாத்காரவாதம் ! பயங்கரவாதம் ! இப்படி எந்தப் பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்.

**பெரியவர் :** டேய், டேய், டே மொள்ளமா பேசுடா ! எவனாவது போலீஸ்காரன் வந்து பிடிச்சுண்டு போயுடப் போறான். நன்னா அலையறுன் பய, உருப்படற புத்தியைக் காணோம். பயித்தியம் முத்திப் போச்சு. டேய் ! மாப்பிள்ளே! துப்பாக்கியும், பெரிய பீரங்கியும் வைச்சிருக்காண்டா வெள்ளைக்காரன்...நீங்க வில்லுலெ அம்பு வைச்சி குறி பார்க்கறதுக்குள்ள உங்களே டுமீல்ன்னு சுட்டுத் தள்ளிடுவாண்டா.

**வாஞ்சி :** சுடட்டும் ! ஜனத்தொகை பாதிதான் குறையட்டுமே ! தேசம் சுதந்திரமடையப் பலபேர்கள் செத்தார்கள் என்று சரித்திரம் உருவாகட்டுமே, என்ன கெட்டுவிடும் ?

**பெரியவர் :** வாயரட்டை அடிக்க நன்னா கத்துண்டிருக்கான். ஏலெ மாப்பிள்ளே! வெள்ளேக்காரன் மிஷின் கன்னே வைச்சி ஒரு முடுக்கு, முடுக்கனான்னா டுப்பு டுப்பு டுப்பூன்னு ஜனங்கள்ளாம் பொல, பொலன்னு பொறிஞ்சு போயிடுவா தெரியுமா?

**வாஞ்சி :** ஆமா ! பொன்னு, கேட்டியா ? உங்கப்பா தான் 'மிஷின் கன்' பக்கத்துலே, நின்னு வேடிக்கை பார்த்தார்.

[பொன்னம்மாள் சிரிக்கிருள்.]

**பெரியவர் :** ஏண்டா பயலே...என்னே கேலியா பண்றே ? ...அப்போ...வெள்ளேக்காரானே இந்த தேசத்தை விட்டு ஒழிச்சிட்டுத்தான் மறு வேலே பார்க்கப் போறே ; ஒத்துக்கறேன். ஆனு ஆட்சி பண்ண உங்களாலே முடியுமா? இல்லே முடியுமான்னு கேக்கறேன் ?

**வாஞ்சி :** ஏன் முடியாது ? நாம் ஆயிரமாயிரம் ஆண்டு களாக ஆட்சி புரிந்துவந்த பரம்பரைதானே ?

**பெரியவர் :** அதெல்லாம் ஐதரலி காலத்திலேடா. புராண காலத்தைப் பத்திப் பேசருன் பய!

[வெளியேயிருந்து யாரோ கூப்பிடும் குரல் கேட் கிறது.]

இதோ வந்துட்டேன்......

[போகிருர், பொன்னம்மாள் சிரித்தபடி.]

**பொன்ன :** நீங்க சரியான பேர்வழி ! எப்படியோ அப்பா வோட பேசிச் சமாளித்து விட்டீர்களே ?

**வாஞ்சி :** (ரகசியமாக) உங்கப்பா ஜாம்பவான் காலத்து ஆசாமி.

[பெரியவர் பேசியவாறு வருகிருர்.]

**பெரியவர் :** வாஞ்சி, யாரோ ரெண்டு பேரு உன்னேத் தேடி வாசல்லே காத்திருக்காங்க.

**வாஞ்சி :** இதோ பாக்கறேன் மாமா. (பொன்னம்மா ளிடம்) வரட்டுமா பொன்னு ?

**பொன்ன :** அப்புறம்...?

**வாஞ்சி :** மறுபடியும் வருகிறேன். வர்றேன் மாமா !

பெரியவர் : வாஞ்சி, வர்ற பௌர்ணமி அன்னிக்கி உனக்கு சாந்தி முகூர்த்தம் வச்சிருக்கு.

*[பொன்னம்மாள் நாணத்தோடு தலை குனிகிருள். வாஞ்சி அவளைப் பார்க்கிருன்]*

பெரியவர் : இத்தனை நாள் அலைஞ்சு திரிஞ்சது சரி! இனிமே அப்படி நடந்துக்கறது நன்னுயிருக்காது. வீட்டோட இருக்கணும். என்ன, தெரியறதோ?

வாஞ்சி : ஆகட்டும் மாமா!

*[பொன்னம்மாள் வெட்கத்தோடு வீட்டிற்குள் போகிருள்.]*

பெரியவர் : ஆமப்பா, உன்னை நான் தேடும்படியா வச்சுக்காதே! சீக்கிரமா வந்து சேரு!

வாஞ்சி : சரி மாமா!

*[வாஞ்சி போகிருன்.]*

பெரியவர் : (தனிமையில்) ஊம், பொழைக்கத் தெரியாத பயலா இருக்கான். சாந்தி முகூர்த்தத்தை முடிச்சுட்டா சரியா போயிடும்னு நினைக்கறேன். என்ன பொன்னு?

*[திரும்பிப் பார்க்கிருர், பொன்னம்மாள் முன்பே உள்ளே போய்விட்டதைக் கண்டு திகைத்து உள்ளே போகிருர்.]*

[காட்சி முடிவு]

## காட்சி: 16

இடம் :—வீதி

உறுப்பினர்கள் :—வாஞ்சி, கிருஷ்ணசாமி, நீலகண்டன்.

*[வாஞ்சி, கிருஷ்ணசாமி, நீலகண்டன், மூவரும் வருகிருர்கள்.]*

வாஞ்சி : நீலகண்டா, கிருஷ்ணசாமியோட புதுச்சேரி போவதாகச் சொன்னுயே? புறப்படவில்லையா?

நீல : ஏன் வாஞ்சி? உன் இன்ப வாழ்வுக்கு இடையூருக இருக்கிறதா? (சிரிக்கிருன்.)

வாஞ்சி : அதற்காகச் சொல்லவில்லை. பிரயாணம் தடைப் பட்ட காரணத்தைத் தெரிந்து கொள்ளவே கேட்டேன்.

[கிருஷ்ணசாமி ஒரு பிரசுரத் தாளை வாஞ்சியிடம் கொடுத்து]

கிருஷ்ண : இதைப் படி ! பிறகு தெரிந்து கொள்வாய், நாங்கள் ஊருக்குப் போகாத காரணத்தை!

[வாஞ்சி படிக்கிருன்]

---

தேசாபிமான சங்கப் பொதுக் கூட்டம்

அன்புடையீர் ! இன்று மாலை திருநெல்வேலி—தாம்பிரபரணி ஆற்றங்கரையில் கப்பலோட்டிய தமிழர் தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தலைமையில் தீரர் சுப்பிரமணிய சிவா அவர்கள் சுதேசி இயக்கத்தை ஆதரித்துச் சொற்பொழிவு நிகழ்த்துவார் ! அனைவரும் வருக ! வருக !

இங்ஙனம்,
தேசாபிமான சங்கத்தார்.

---

வாஞ்சி: (மகிழ்ச்சியுடன்) அப்படியா! அரிய சந்தர்ப்பம். இரு பெரும் வீரர்களும் ஒரே மேடையில் தோன்றப் போகும் காட்சியைக் காண்போம் வாருங்கள்.

நீல : இன்னும் ஒருமணி நேரம் இருக்கப்பா!

வாஞ்சி : எதற்கும் முன்னதாகவே போய்விடுவோமே.

கிருஷ்ண : வாஞ்சி, சமாச்சாரம் கேள்விப்பட்டாயா?

வாஞ்சி : என்ன?

கிருஷ்ண : ('இந்தியா' பத்திரிகையை எடுத்துக் கொடுத்து) 'இந்தியா' பத்திரிகையிலே வந்துள்ள ஓர் அறிவிப்பைப் பார்.

**வாஞ்சி :** *(படிக்கிருன்) எச்சரிக்கிறேம்! சுதேசிக் கப்பல் விடும் விழாவிலே கலந்துகொண்ட பொதுமக்கள் சிலரை, தூத்துக்குடியில் சப் கலெக்டராக இருந்து வரும் ஆஷ் என்னும் வெள்ளைத்துரை வாயில் வந்தபடி வைதும், அடக்குமுறை தர்பாரில் இறங்கியும் பய முறுத்தியதாக அறிகிறேம். இத்தகைய இழி செயலில் ஈடுபடுவது இந்தியாவிலுள்ள வெள்ளைக்காரர்களின் நலனுக்கு உகந்ததல்ல என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணரட்டும்.*

*[படித்தபின்]*

**கிருஷ்ண :** *எப்படியப்பா?*

**நீல :** *அக்கிரமம்! அநியாயம்! ஆணவம் பிடித்த வெள்ளைக்காரன்!*

**வாஞ்சி :** (கோபமாக) சப்கலெக்டர் ஆஷ்! துள்ளட்டும் வெள்ளையன். குமுறிக்கொண்டிருக்கும் என் நெஞ் சத்திற்குப் புதிய வேகத்தைக் கொடுக்கிருன். இருக் கட்டும். காலம் வரும், சரி புறப்படுவோம்.

*[மூவரும் போகிருர்கள்]*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 17

**இடம் :** *தாமிரபரணி மணல் திடல்.*

**உறுப்பினர்கள் :** *செயலாளர், உள்ளூர்த் தலைவர், வ. உ. சி., சுப்பிரமணிய சிவா, மாசிலாமணி மற்றும் சிலர்.*

*[செயலாளரும், மற்றும் சிலரும் நிற்கின்றனர். போலீஸ் படை நின்று கொண்டிருக்கின்றது. பொதுமக்களின் குரல் ஒலிக்கிறது]*

**ஒருவர் :** *கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனுர்...*

**பலர் :** *வாழ்க!...*

ஒருவர் : *தீரர் சுப்பிரமணிய சிவா...*

பலர் : *வாழ்க!...*

ஒருவர் : *தேசபக்தர் வ. உ. சி!...*

பலர் : *வாழ்க!...*

ஒருவர் : *தியாக சீலர் சுப்பிரமணிய சிவா...*

பலர் : *வாழ்க!...*

ஒருவர் : *சிதம்பரம் பிள்ளை...*

பலர் : *வாழ்க!...*

ஒருவர் : *சுப்பிரமணிய சிவா!...*

பலர் : *வாழ்க!...*

*[வ. உ. சிதம்பரனுரையும், சுப்பிரமணிய சிவாவையும் உள்ளூர்த் தலைவர் மேடைக்கு அழைத்து வருகிருர். அவர்கள் மேடையில் உட்காரும் வரை, வாழ்த்தொலிகள் முழங்கிக் கொண்டிருக்கின்றன. உள்ளூர்த் தலைவர் முன்வந்து]*

உள்ளூர்த் தலைவர் : *மதிப்பிற்குரிய தலைவர்களே, பொது மக்களே, உங்களனைவரையும் திருநெல்வேலி தேசாபிமான சங்கத்தின் சார்பில் நல்வரவு கூறி வரவேற்கிறோம். இந்த மாபெரும் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வேண்டிய தகுதி படைத்தவர் நமது வழக்கறிஞர், கப்பலோட்டிய தமிழர், திருவாளர் வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள்தாம்.*

*[மக்கள் கைதட்டுகிருர்கள்]*

*அவர்கள் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி, இங்கு விஜயம் செய்து சிறப்பித்தமைக்கு நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். தலைவர் வ. உ. சி. அவர்களையும், தீரர் சுப்பிரமணிய சிவா அவர்களையும் நெல்லைப் பொதுமக்கள் சார்பில் மீண்டும் வரவேற்பதோடு, தலைவர் வ. உ. சி. அவர்களை இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.*

[வ. உ. சி.க்கு மாலே சூட்டுகிருர். மக்கள் கை தட்டு கிருர்கள்]

வ. உ. சி : அன்பார்ந்த பெருமக்கள் அனேவருக்கும் என் வணக்கம். தீரர் சுப்பிரமணிய சிவா அவர்கள் பேசும் இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமைக்குப் பெருமைப் படுகிறேன். சுதேசிப் பிரச்சாரத்தை நாடெங்கும் முழக்கி வரும் நமது தீரர் சுப்பிரமணிய சிவா அவர் களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

[உள்ளூர்த் தலைவர் சிவாவுக்கு மாலே அணிவிக்க, பொதுமக்கள் கையொலி செய்கிருர்கள்]

சிவா : வந்தேமாதரம்......!

[கூட்டத்தில் அமைதி நிலவுகிறது]

சொல்லுங்கள்...வந்தே மாதரம்......

[மேடையில் அமர்ந்திருப்பவர்கள் மட்டும் வந்தே மாதரம் என்று சொல்லுகிருர்கள்]

தமிழ்ப் பெருமக்களே, ஏன் தயங்குகிறீர்கள்? அதிகாரிகளின் அடக்கு முறைக்கு அஞ்சுகிறீர்களா? எங்கள் மாநிலத் தாயை வணங்குவோம் என்று சொல்லுவதற்கு நாம் வெட்கப்படுவதா? எங்கே சொல்லுங்கள்;...வந்தேமாதரம்...!

[பொது மக்கள் வந்தேமாதரம் என்று கோஷ மிடுகிருர்கள் சிவா பாடுகிருர்.]

**கொட்டடா! கொட்டடா !!**
**ஜெயபேரிகை கொட்டடா !!!**

**பயம்எனும் பேய்தனே அடித்தோம் !—பொய்மைப்**
**பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம் ;**
**வியனுல கனைத்தையும் அமுதெனை நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம் ! (கொட்டடா)**

காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்
கடலும், மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை.
நோக்க நோக்கக் களியாட்டம்! (கொட்டட)
—பாரதி

சகோதரர்களே! இந்திய தேசம் அன்னியர் பிடியி யிருந்து விடுதலையடைய வேண்டுமென்று நான் நாடு முழுவதும் சுதேசிப் பிரச்சாரம் செய்து வருகிறேன். என் இளமையிலேயே மனைவியைப் பிரிந்தேன். குடும்பத்தை மறந்தேன். ஆனால், வீட்டை வெறுத்த நான் என் தாய் நாட்டைத் துறக்கத் துணியவில்லை. ஊர் ஊராகச் சுற்றி வருகிறேன்.

இன்று கன்னித்தமிழ் நாட்டிற்கு, வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த உங்கள் தென்பாண்டி நாட்டிற்கு, நமது கப்பலோட்டிய தமிழர் சீரும், சிறப்புமாக வாழுகின்ற நெல்லை மாவட்டத்திற்கு வந்து உங்கள் எல்லோரையும் சந்திக்கும் நல்வாய்ப்புப் பெற்றிருக்கிறேன்.

சகோதரர்களே! சுதேசித் தொழில்களையே நாம் ஆதரிக்க வேண்டும். அன்னிய நாட்டுப் பொருள்களை அறவே அகற்ற வேண்டும்! ஆம், அப்பொழுதுதான் வெள்ளைக்காரன் இந்த நாட்டி லிருந்து மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறி ஓடுவான். சகோதரர்களே! வயிறு பிழைக்க வந்த வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டுக்கே அதிகாரி ளாகிவிட்டதை நாம் இன்னும் பொறுத்துக் கொண்டிருப்பதா?

பொதுமக்கள் : கூடாது!...கூடாது!!...

சிவா : ஆம், அப்படிச் சொல்லுங்கள்! இந்திய நாட்டு இளைஞர் சமுதாயமே! உங்களை அன்போடும் ஆர்வத் தோடும் அழைக்கிறேன். இனியும் நாம் ஏமாந்து விடக் கூடாது. மக்கள் உள்ளங்களில் சுதந்திர உணர்ச்சி பொங்கிக் கொண்டிருக்கிறது. இந்த தேசத்தின் உரிமையைப் பெற; இந்திய தேசீய

காங்கிரஸ் மகாசபை பொறுப்பேற்று விட்டது. 'வந்தேமாதரம்' என்ற புரட்சிக் குரலை முழக்குங்கள்! வடக்கே நமது தலைவர் லோகமான்ய பால கங்காதர திலகர் போர் முகாம் அமைத்துவிட்டார். அவருடைய சீரிய தலைமையின் கீழ் நாம் எல்லோரும் அணிவகுத்து நிற்க வேண்டும். அதுவே நமது கடமையாகும்.

அன்னிய ஆடைகளை ஒழித்துக் கட்டுங்கள்! சொந்த நாடு உயர்வடைய சுதேசி ஆடைகளையே அணியுங்கள். இதுதான் நீங்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய முதற்கடமையாகும்.

இறுதியாக ஒரு வேண்டுகோள்! ஏற்கெனவே பொதுநலத் தொண்டில் ஈடுபட்டு மக்களுக்குச் சேவை செய்துவரும், நமது செந்தமிழ்ச் செல்வர்; இந்திய நாட்டில் முதன் முதலாகத் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்ட மாவீரர்; சுதேசிக் கப்பலோட்டிய வீரத் தமிழர் சிதம்பரனரை, தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கத்தைக் கட்டி வளர்க்கும் பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு தேசப்பணி புரியுமாறு உங்கள் சார்பாக ஆர்வத்தோடு அழைக்கிறேன்.

[பொதுமக்கள் கைதட்டுகிருர்கள்.]

திலகர் பெருமானிடம் மாருத அன்பு கொண்டுள்ள வீரச் சிதம்பரனர் என் வேண்டுகோளை மறுக்க மாட்டாரென உறுதியாக நம்புகிறேன். வந்தே மாதரம்!...

[பொதுமக்கள் வந்தே மாதரம் சொல்லப் பயப்படுகிருர்கள்]

**சிவா :** (ஆவேசத்தோடு) பயப்படாதீர்கள், வந்தே மாதரம் என்று முழக்குங்கள். வந்தேமாதரம்! வந்தேமாதரம்!...

[பொதுமக்கள் ஆரவாரத்தோடு 'வந்தே மாதரம்' என ஒலி எழுப்புகிருர்கள். சிவா மகிழ்ச்சியுடன் உட்காருகிருர். வ. உ. சி. எழுந்து பேசுகிருர்]

வ. உ. சி : தமிழ்ப் பெருமக்களே! சுதந்திரச் சங்க நாதம் முழங்கியது. சுத்த வீரர் சுப்பிரமணிய சிவா அவர்களின் சொற்பொழிவுகளை ஏட்டிலே கண்டு இதயம் பறிகொடுத்தவர்களில் நானும் ஒருவன். இன்று கண்ணெதிரே அவரைக் காணும் பேறு பெற்றோம். காது குளிர அவரது சொற்பொழி வைக் கேட்டோம். இன்பத்தின் எல்லைக்கோட்டில் நிற்கின்றோம். ஆம்!

> "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான், அவனை
> இகல்வெல்லல் யார்க்கும் அரிது"!...

என்ற திருவள்ளுவரின் பெருமைக்குரியவராகி விட்டார் நண்பர் சிவா. அவர்கள் விடுத்த அழைப்பை நான் மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன். அன்பர்களே! சிவாவின் சந்திப்பிலிருந்து உங்கள் சிதம்பரம் இன்று முதல், இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபையின் முழுநேர ஊழியன்; இனி, தென்னாட் டில் நான்தான் காங்கிரஸ்; காங்கிரஸ்தான் நான்.

[பலத்த கைதட்டல்]

அன்புடையீர், ஆதரவு தாருங்கள். அணி அணியாய் வந்து காங்கிரஸ் மகா சபையில் சேருங் கள் என்று உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

[கை தட்டுகிறார்கள்]

**சிவா :** தேசபக்தர் சிதம்பரனார்!...

**பொதுமக்கள் :** வாழ்க!...

**மாசிலா :** தென்னாட்டுத் திலகர்!......

**மக்கள் :** வாழ்க!......

**மாசிலா :** தியாக சீலர் சிவா!......

**மக்கள் :** வாழ்க!......

**மாசிலா :** வந்தே மாதரம்!......

**மக்கள் :** வந்தே மாதரம்!

[காட்சி முடிவு]

# காட்சி 18

இடம்:— கலெக்டர் விஞ்ச் மாளிகை.

உறுப்பினர்கள்:— கலெக்டர் விஞ்ச், ஆஷ்துரை, அரங்க சாமி அய்யங்கார்

(விஞ்ச் துரை கோபமாக உலவிக் கொண்டிருக்கிறார். மற்ற இருவரும் பயத்தோடு நின்றுகொண் டிருக்கிறார்கள்)

விஞ்ச்: வந்தேமாதரமாம்! தேசாபிமானமாம்! ரௌடி கும்பல், பயம்போய் விட்டது. சுயராஜ்ய ஆசை பெருகி விட்டது. ஆவேசப் பிரச்சாரம் அதிகமாக நடந்து வருகிறது! (ஆஷைப் பார்த்து) திருநெல் வேலி ஜில்லா கலெக்டர், நிர்வாகத்தைச் சரிவர கவனிக்கவில்லையென்று, மெட்ராஸ் கவர்னரும், வைஸ்ராயும் எனக்குக் கண்டனம் அனுப்பியுள் ளார்கள். மிஷ்டர் ஆஷ்...... தூத்துக்குடியில் தூங்கிக் கொண்டா இருக்கிறீர்? தகுந்த நடவடிக்கை எடுக் காமல் நிலைமையை முற்ற விட்டுவிட்டீரே?......

ஆஷ்: (பணிவுடன்) ஸார்! எனக்கு இருக்கும் அதிகாரங் களை மீறியும் நடவடிக்கை எடுத்துத்தான் வருகிறேன். வி. ஓ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிர மணிய சிவம் இவர்கள் செல்வாக்கை அடக்குவது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது ஸார்! மிஸ்டர் அரங்கசாமி அய்யங்காரைக் கேட்டால் நிலைமையைச் செல்வார்!......

விஞ்ச்: வாட் மிஸ்டர் அய்யங்கார்?...

அரங்க: அதை ஏன் கேக்கறேள்? நம்ம ஆஷ் துரைவாள், ரொம்ப சிரமம் எடுத்துண்டுதான் வரார்; ஆனா அவா அட்டகாசத்தை அடக்க முடியல்லே! வி. ஓ. சிதம் பரம் பிள்ளையும் சுப்பிரமணியசிவமும் பரம்பரை யாவே ரௌடிக் கூட்டமின்னா! அதனாலெதானே அந்தச் சிவத்தை திருவாங்கூர் ஸ்டேட்டிலே இருந்து கல்தா குடுத்து வெளியே தள்ளிட்டா!

விஞ்ச் : *(கோபமாக) சிதம்பரம் பிள்ளே! சுப்ரமணிய சிவம்!—துப்பாக்கியை நீட்டினல் துடித்தோடும் உதிரிகள். பார்த்துவிடுகிறேன்—மிஸ்டர் ஆஷ், தூத்துக்குடியில் பலத்த போலீஸ் படை இருக்கட்டும். அந்த இரண்டு ரௌடிகளுக்கும் சி. ஐ. டி. போடும். இன்னும் தேவையான எல்லா நடவடிக்கைகளேயும் எடுத்துக் கொள்ள உமக்கு உத்தரவு பிறப்பிக்கிறேன்.*

ஆஷ்: *உத்தரவு சார்!...*

விஞ்ச்: *அத்தோடு, பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி எந்த உதவி கோரினலும் தாராளமாகச் செய்யும். முதலில் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஒழித்துக் கட்டுவோம்; என்ன?......*

ஆஷ்: *எஸ் ஸார்! இனிமேல் என் நடவடிக்கைகளேப் பொறுத்திருந்து பாருங்கள் ஸார்!...*

அரங்க: *பேஷ்! பேஷ்! இனிமே அவா வாலாட்ட முடியாது!*

[காட்சி முடிவு]

## காட்சி: 19

இடம்: *சிதம்பரனர் வீடு*

**உறுப்பினர்கள்:** *மீனட்சி, ஆறுமுகம், உலகநாதன், வ. உ. சி., சிவா, மாசிலாமணி.*

*[மீனட்சி குழந்தை ஆறுமுகத்துடன் நின்று கொண்டிருக்க, வ. உ. சி, வருகிறர். தலேப்பாகை, கோட்டு முதலியவைகளேக் கழற்றி, மீனட்சியிடம் கொடுக்கிறர்.]*

வ. உ. சி. : *உலகநாதா! உலகநாதா!...எங்கே பெரிய பயலேக் காணும்?*

மீனட்சி : *நீங்க அவனேக் கூட்டத்துக்கு அழைச்சிட்டுப் போகலேயாம், தேம்பிச்சிக்கிட்டு இருக்கான்,*

வ. உ. சி. : (சிரித்து) ஓ!...அதற்காகவா அவனுக்குக் கோபம்? கூப்பிடு அவனை...

மீனுட்சி : (உள்ளே பார்த்து) தம்பீ, வாடா! உங்கப்பா கூப்பிடருங்க!

[உலகநாதன் செல்லமாகக் கோபித்துக் கொண்டு வருகிருன்]

வ. உ. சி : வாடா இங்கே...ஏன்? என் மேலே உனக்குக் கோபமா?

உலக: ஆமா......

வ. உ. சி. : (சிரித்து) கண்ணுல்லே, இங்கே வாடா ராஜா!......

உலக: நான் வரலே, நீங்கதான் என்னைக் கூட்டத்துக்கு அழைச்சிட்டுப் போகலேயே?......

[வ. உ. சி. யும், மீனுட்சியும் சிரித்து.]

வ. உ. சி. : கோவிச்சிக்காதே கண்ணு! இனிமே உன்னைக் கூட்டத்துக்கு அழைச்சிட்டுப் போறேன். (அணைத்து முத்தமிடுகிருர்) மீனுட்சி! பார்த்தாயா, இப்பவே இவனுக்கு வர்ற கோபத்தை...?

மீனுட்சி : அவன் உங்க பிள்ளைதானே! கோபம் வரத் தானே செய்யும்? (உலகநாதனைச் சுட்டிக்காட்டி) அதோ பாருங்க; அவன் கோவிச்சுக்கிட்டு இருக்கும் போது உங்க மாதிரியே போகுது வாயி!

[சிவா வந்துகொண்டிருக்கிருர்.]

உலக : இனிமே என்னைக் கூட்டத்துக்கு அழைச்சிட்டுப் போகலேன்னு உங்க கூடப் பேசவே மாட்டேன்.

சிவா : பலே! பலே! அப்படித்தான்.

வ. உ. சி. : வாருங்கள் சிவா. உட்காருங்கள்.

மீனுட்சி : வாங்க அண்ணு!

சிவா : பிள்ளைவாள் எப்படி? உங்க பய கெட்டிக்காரனு இருக்கானே! எல்லாப் பிள்ளைகளும் பட்சணம்,

மிட்டாய் இதுக்காகத்தான் கோவிச்சிக்கிடுவா. இவன் கூட்டத்துக்கு அழைச்சிட்டுப் போகலேன்னு கோவிச்சிக்கிருன் ! பேஷ் ! பேஷ் ! இதைத்தான் வள்ளுவர்,

"குழலினிது, யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

அப்படீன்னு அழகாச் சொல்லிட்டார் !

[எல்லோரும் சிரிக்க.]

இதற்கு எத்தனைபேர் ஏட்டிலே உரை எழுதிருங்க. இந்தப் பய இப்ப பிரத்யட்சமாகச் சொல்லி முடிச்ச உரைக்கு ஈடாகுமோ ? (உலகநாதனைப் பார்த்து) தம்பீ ! வாடாம்மா இங்கே. (அருகில் வருகிருன்) உன் பெயரென்ன ?

உலக : உலகநாதன் !

சிவா : பலே உலகத்திற்கே நாதன்தாண்டா நீ. (ஆறு முகத்தைப் பார்த்து) டேய் ! சுட்டிப்பயலே, இங்கே வாடா, உன் பெயரென்ன ?

ஆறுமுகம் : ஆறுமுகம் !...

சிவா : ஓ ! ஆறுமுகமா ? பேஷ் ! ஒரு முகந்தானேடா இருக்கு, பாக்கி அஞ்சு முகம் எங்கே ? பேஷ் ! பேஷ் கெட்டிக்காரன். உங்க அப்பா பெயர் தெரியுமா ?

ஆறுமுகம் : தெரியும், வ. உ. சிதம்பரம் பிள்ளை.

சிவா : (சிரித்து) அப்படிச் சொல்லு; (உலகநாதனிடம்) உங்க தாத்தா பெயர் தெரியுமாடா ?

உலக : என் பேருதான், எங்க தாத்தா பேரு !

சிவா : பலே ! பலே ! உன் பேரைத்தான் உங்க தாத்தா வுக்கு வச்சிருக்காளா ?

உலக : இல்லே மாமா. தாத்தா பேரைத்தான் எனக்கு வச்சிருக்காங்க!

சிவா : (உலகநாதனைத் தூக்கி அணைத்துக்கொண்டு) அடாடா...பேஷ் ! பேஷ் ! பிள்ளைவாள், பய மகா

புத்திசாலியா இருப்பான் போலிருக்கே! இவன் தான் உங்க பெயரையே நிலைநாட்டப் போருன்.

**மீனுட்சி :** சரி, வாங்கம்மா உள்ளே போகலாம்.

[குழந்தைகளை அழைத்துக்கொண்டு உள்ளே போகிருள். சிவா, வ. உ. சி. அணிந்துள்ள தூய சுதேசி ஆடைகளைக் கண்டு வியப்புடன்.]

**சிவா :** சிதம்பரம் பிள்ளைவாள், என்ன! உங்கள் ஆடைகள் எல்லாம் தூய சுதேசி மயமாக மாறியிருக்கின்றனவே! ஆஹா! செந்நாப் புலவரல்லவா! நேற்றுச் சொன்னீர், இன்று அதைச் செய்தே காட்டிவிட்டீர்! பிள்ளைவாள்! இதய பூர்வமாகச் சொல்லுகிறேன். தமிழ்நாட்டுக்குத் தகுந்த தலைவர் தாங்கள் தான்! தென்னுட்டுத் திலகர் நீங்களேதான்!

**வ. உ. சி. :** சிவா! என் குடும்பத்தார் அனைவரும் இனி சுதேசித் துணிகளையே அணிவதென்று தீர்மானித்து விட்டோம். சொந்த நாட்டின் பருத்தி ஆடைகளை அணிந்த ஞாபகார்த்தமாக அன்னிய ஆடைகள் அத்தனையையும் தீயிட்டுக் கொளுத்திவிட்டேன்.

**சிவா :** (உணர்ச்சியோடு) பிள்ளைவாள்! உங்கள் உறுதியைக் கண்டு 'பாரத மாதா' ஆனந்தக் கண்ணீர் சொரிகிருள்.

**வ. உ. சி. :** சிவம், அன்னிய ஆடைகள், அலங்காரப் பொருட்கள், இவற்றை இந்திய நாட்டில் அனுமதிக்கவே கூடாது! சுதேசியத்துக்கு ஆதரவு தராதவர்களை நாம் துரோகிகளாகவே மதிக்கவேண்டும்.

**சிவா :** ஆம்! இந்தப் புனிதமான சேவைக்கு என் ஆத்ம சுத்தியோடு ஒத்துழைக்கச் சித்தமாக இருக்கிறேன்.

**வ. உ. சி. :** மிக்க மகிழ்ச்சி! சிவா, வங்க வளநாட்டை இந்து வங்கம், முஸ்லீம் வங்கம் என்று மதப் பிரிவினை செய்துவிட்ட ஏகாதிபத்யக் கொடுமையைக் கண்டு என் உள்ளம் குமுறுகிறது.

**சிவா** : *பிரித்தாளும் சூழ்ச்சி பிள்ளைவாள்! இது பிரித்தாளும் சூழ்ச்சி! இதைக் கண்டித்துப் பலமான பிரச்சாரம் செய்து வந்ததின் காரணமாகவே, இப்பொழுது நான் திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறேன்.*

**வ. உ. சி.** : *(ஆத்திரத்தோடு) அப்படியா? பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் நிழல் போன்று இருந்துவரும் திருவாங்கூர் சமஸ்தானம் உங்களை வெளியேற்றி விட்டதா?*

**சிவா** : *என்னை வெளியேற்றியது மட்டுமன்று. நான் நடத்தி வந்த தர்ம பரிபாலன சமாஜத்தையும் ஒழித்து விட்டார்கள்.*

*[மாசிலாமணி கையில் 'இந்தியா' பத்திரிகையோடு விரைந்து வருகிறார்]*

**மாசிலா** : *அண்ணாச்சி...*

**வ. உ. சி.** : *என்ன; மாசிலாமணி, இத்தனை வேகமாக வருகிறாய்?*

**சிவா** : *ஏதாவது விசேஷமோ தம்பீ?*

**மாசிலா** : *ஆம்! இந்தப் பத்திரிகையைப் பாருங்கள்!...*

*[வ. உ. சி. யும், சிவாவும், பத்திரிகையை ஆவலோடு வாங்கிப் பார்க்கிறார்கள்.]*

*வங்காளத்தில் நடந்த வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாக, அறிஞர் விபினசந்திர பாலரும், அண்ணல் அரவிந்த கோஷும் கைது செய்யப்பட்டார்களாம்!...*

**வ. உ. சி.** : *என்ன கொடுங்கோன்மை இது!*

**சிவா** : *அக்ரமம்! இதை முழு மூச்சுடன் எதிர்த்தே தீரவேண்டும்.*

வ. உ. சி. : சிவா ! சிதம்பரம் இன்றுமுதல் வழக்கறிஞன் அல்லன் ; வாளேந்தும் தொண்டன். வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் விடுதலை வீரன். இனி நாட்களைக் கடத்தவேண்டாம். தென்னுட்டில் நாளையே துவக்கப் படவேண்டும். ஏகாதிபத்ய எதிர்ப்பின் இரண்டாம் முனையை...!...சுற்றுப் பயணத் திட்டமிடுங்கள் ; சூருவளியாகப் புறப்படுவோம் நாடு முழுதும் !...

[காட்சி முடிவு]

## காட்சி : 20

இடம் : வீதி.

உறுப்பினர்கள் : வ. உ. சி., சிவா, ஏட் சுப்பிரமணியம், சி. ஐ. டி.

[வ. உ. சி. யும், சிவாவும் பேசிக்கொண்டு வருகிருர்கள். அவர்கள் பின்னே, சி. ஐ. டி. டைரி எழுதிக்கொண்டே வருகிருர். ஏட் சுப்பிரமணிய பிள்ளை சாதாரண உடையில் எதிரே வருகிருர்.]

ஏட் சுப்பிரமணியம் : வணக்கம் அண்ணுச்சி !...(சிவாவைப் பார்த்து) ஐயா, வணக்கம் !...

வ. உ. சி. : ஓ !...சுப்பிரமணிய பிள்ளையா ? வணக்கம் ! வணக்கம் !

[இருவரும் வணங்கிக் கொள்கிருர்கள்.]

சிவா : (வ. உ. சி. யைப் பார்த்து) பிள்ளைவாள், இவர்கள் யார் ?

வ. உ. சி. : எனக்கு முக்கிய நண்பர். 'ஹெட்கான்ஸ்டபிளாக' இருந்தவர். என்னேடு தொடர்பு கொண்டவர் என்ற காரணத்திற்காக, காருண்ய அரசாங்கம் இவர்மீது கொலைவழக்கு சுமத்திவிட்டது சிவா !

**சிவா :** அப்படியா ?...

**ஏட் சுப்பிர :** அதோட விட்டாளா? அந்தக் கொலையிலே வ. உ. சி. அண்ணைச்சிக்கும், எனக்கும் ரகசியத் தொடர்பு இருக்கறதாக மெமோ தாக்கல் பண்ணி எனக்காக அண்ணைச்சி ஆஜராகாமே இருக்கறதுக் காக எவ்வளவோ சூழ்ச்சி செய்தாங்க ! இதுக்கெல் லாமா அண்ணைச்சி மசியறவங்க ? கடைசி வரைக்கும் விடாமே வாதாடி வழக்கை தள்ளுபடி பண்ண வைச் சுட்டுத்தான் மறுகாரியம் பார்த்தாங்க !...

**சிவா :** ஓ ! அப்படிச் சொல்லுங்க...இப்ப வேலையை விட்டுட்டேளா ?

**ஏட் சுப்பிர :** ஆமா...நான் அண்ணைச்சியோட ரகசிய ஆளாம் ! எக்ஸ்பிளனேஷன் கேட்டுக்கிட்டே தொல்லை கொடுத்து வந்தாங்க. கால் கடுதாசியை எடுத்தேன், எழுதினேன், பிடிங்கடா ராஜினமா வைன்னு தலை முழுகிட்டேன்!

**சிவா .** பேஷ் ! பேஷ் ! நீரும் என் அண்ணந்தான்னு சொல்லும் ! (வ. உ. சி. யிடம்) பிள்ளைவாள், என் கதையும் இப்படித்தான் ! ஆரம்பத்திலே நானும் ஹெட் கான்ஸ்டபிளாகத்தான் உத்தியோகம் பார்த்தேன். ஆனு, நம்ம வழி வேருக இருக்கும் பொழுது உத்யோகம் நிலைக்குமா ? இவர்களைப் போலவே போடான்னு வந்துட்டேன்!

**வ. உ. சி. :** சிவா ! எனக்கும் பழைய நினைவுகள் வருகின்றன. நான் கல்லூரி நடுநிலைக் கல்வியை முடித்தவுடன் சட்டம் படிக்கச் செல்லவில்லை. திருச்சிராப்பள்ளியிலிருந்த என் உறவினர் நெல்லை யப்ப பிள்ளை என்னைத் தாலுக்கா கச்சேரி குமாஸ்தா வாகச் சேர்த்துவிட்டார். சில காலம் வேலை பார்த்து விட்டுப் பிறகு தான் சட்டம் படிக்கச் சென்றேன்.

**சிவா :** பலே ! பலே ! அப்படிச் சொல்லும்...

[சுப்பிரமணிய பிள்ளை, சி. ஐ. டி. யைப் பார்த்து விட்டு வ. உ. சி. யிடம்.]

ஏட் சுப்பிர : அண்ணுச்சி! அந்தா எழுதிக்கிட்டே நிற்கிருரே; அவர் பத்திரிகை நிருபரா ?

வ. உ. சி : (புன்னகையுடன்) இல்லே தம்பீ, நானும் சிவாவும் ராஜ நிந்தனைக்காரர்களாம். எங்கள் நடவடிக்கைகளைக் கண்காணிக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த சி. ஐ. டி. போட்டிருக்கிறது.

ஏட் சுப்பிர : அப்படியா ? அதான் காரியத்திலேயே கண்ணு இருக்காரு !

சிவா.: அதெல்லாமில்லே தம்பீ! எங்களுக்கு டைரி எழுத நேரமில்லே. இந்த சர்க்கார் தத்துப் பிள்ளேகளாவது எழுதட்டுமே ! நாங்க எத்தனே தடவை மூச்சு விடருேங்கறதைக்கூட விடாமே எழுதிக்கொண்டு போய் காட்டட்டும்!

ஏட் சுப்பிர: (சிரித்து) நல்லாச் சொன்னீங்க !

வ. உ. சி. : சிவா, இவர்களே நொந்து கொள்வதில் என்ன பயன் ? நம்மைப்போல் இவர்களும் மனிதர்கள். குடும்பங்கள் உண்டு, ஆசாபாசங்கள் உண்டு. என்ன செய்வார்கள், வயிற்றுப் பிழைப்புக் காக இட்ட வேலேகளேச் செய்து வருகிருர்கள்.

[சி. ஐ. டி. எழுதுகிருர்.]

சிவா : பாவம், இவர்களும் தமிழர்கள்தான் ! பரிதாபத் துக்குரியவர்கள் !

வ. உ. சி. : சிவா ! புறப்படுவோம்.

ஏட் சுப்பிர : அப்ப நான் போயிட்டு வாரேன் அண்ணுச்சி.

[வணங்கிவிட்டுப் போகிருர். சி. ஐ. டி., வ. உ. சி. யையும், சிவாவையும் பின் தொடருகிருர்.]

[காட்சி முடிவு]

## காட்சி : 21

**இடம் :** பொன்னம்மாள் வீடு.

**உறுப்பினர்கள் :** பொன்னம்மாள், வாஞ்சி.

[பள்ளியறை அலங்கரிக்கப்பெற்றிருக்கிறது. உள்ளே நாதசுர இன்னிசை முழங்குகிறது! கட்டிலில் வாஞ்சி உட்கார்ந்திருக்கிறன். ஒருபுறம் பொன்னம்மாள் வெட்கத்தோடு நிற்கிறுள். மேஜையில், பால் பழங்கள் இருக்கின்றன. வாஞ்சி அருகில் நெருங்குகிறுன்.]

**வாஞ்சி :** பொன்னு ! இப்படியா வெட்கப்படுவது ? என்னிடமா வெட்கம் ? நேற்றுவரை உன்னேடு நெருங்கிப் பழகிக்கொண்டிருந்த உன் அத்தான் தானே நான் ?

[பொன்னம்மாள் முகத்தை மூடிக்கொள்கிறுள். வாஞ்சி சிரிக்கிறுன்.]

ஏன் பொன்னு முகத்தை மூடிக்கொண்டாய் ? என்ன ?... பேச்சுக்கூட வரவில்லையா ?...

**பொன்ன :** போங்கள்...!......என்னென்னவோ சொல்லு கிறீர்கள் ?

**வாஞ்சி:** என்னென்னவோ சொல்லுகிறேனு? பார்த்தாயா, இப்படி நின்றுகொண்டேயிருந்தால் ? இப்படி வந்து உட்கார் கண்ணே !...

[வாஞ்சி, பொன்னம்மாளே இழுத்து உட்கார வைக்கிறுன். பொன்னம்மாள் தலையைத் திருப்பிக்கொண்டு உட்காருகிறுள்.]

பொன்னு !...

**பொன்ன :** என்ன ?

**வாஞ்சி :** ஒன்றுமில்லே கண்ணே !

**பொன்ன :** பார்த்தீர்களா ? எதையோ ஒளிக்கிறீர்கள். சொல்லுங்கள்...

[வாஞ்சி சிரிக்கிறுன்.]

அதோ களங்கமில்லாத அந்த வெண்ணிலவைப் பாருங்கள். காதல் உள்ளங்களே, களிப்பிலே கனிய வைத்து, கற்பனையிலே திளைக்க வைத்து நம்மை இன்ப லோகத்திற்கு அழைப்பது போலில்லை ?...

**வாஞ்சி :** (நிலவை உற்றுப் பார்த்து) களங்கமில்லாத வெண்ணிலவா ? இல்லை ! இல்லை ! நிலவு களங்கத் தோடு கூடியது. அதோ பார் ! அழகு நிலவிலே தூய்ய களங்கம் ! அதேபோன்று நம் அழகிய பாரதத் திலே அன்னிய ஏகாதிபத்தியம் ஒரு களங்கம் !... இந்த நிலவின் களங்கம் மாற்ற முடியாதது. நம் தேசத்திலே ஏற்பட்டுள்ள களங்கம் மாற்றக்கூடியது. அதற்கு மானமுள்ள வீரர்கள் வேண்டும். ஆண்மை யுள்ள தியாகிகள் வேண்டும்.

**பொன்ன் :** இந்த இன்ப மயமான நேரத்திலுமா தேசத்தைப் பற்றிய சிந்தனை உங்களுக்கு ?

**வாஞ்சி :** அதோ பார் பொன்னு ! அந்த நட்சத்திரங்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன. 'இன்பத்தில் ஆழ்ந்து கிடக்கின்றவனே ! உனது தேசத்தை எப்போது மீட்கப் போகிறாய் ?' என்று ஏளனம் செய்கின்றன.

**பொன்ன :** அத்தான், பட்டாடை உடுத்து, பள்ளியறை நுழைந்திருக்கும் பாவையை, இன்பக் கனவுகளால் இகலோகத்தையே மறந்து நிற்கும் இந்தப் பூவையை, உங்கள் அன்புப் பொன்னம்மாளை நன்றாகப் பாருங்கள்.

**வாஞ்சி :** கண்ணே ! அழகுச் சிலையாக நீ நிற்கிறாய். ஆனால், ஆனந்தம்தான் இல்லை எனக்கு! நீ நிலவைக் காட்டியவுடன் என் எண்ணங்கள் எங்கெங்கோ அலைமோதி நிற்கின்றன.

**பொன்ன :** நப்பின்னைப் பிராட்டியைக் கண்ணபிரான் சோதித்தது போலல்லவா நீங்கள் என்னைச் சோதிக் கிறீர்கள்.

**வாஞ்சி :** *இல்லை கண்ணே ! நிலவைப் பார் ; இந்த நிலவு தேய்ந்து தேய்ந்து மறையும். மீண்டும் வளர்ந்து வளர்ந்து முழு நிலவாகும். எத்தனையோ கற்பகோடி காலமாக நடைபெற்று வரும் அற்புத நிகழ்ச்சியிது. இந்த இன்ப நிலவொளியிலே நம்மைப்போல் எத்தனையோ காதலர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள். அவர்களெல்லாம் இன்று எங்கே ? கால வெள்ளம் அவர்களையெல்லாம் அடித்துக்கொண்டு போய் விட்டது. ஆனால், அவர்களை மகிழ்வித்த இந்த நிலவு மட்டும் மாய்வதில்லை, அழிவதில்லை. இன்றும் நமக்கு மகிழ்வூட்டிக்கொண்டிருக்கிறது. மாயும் மனிதன் லட்சியத்தோடு மாயவேண்டும். அழியும் ஜீவன் லட்சியத்துக்காக அழியவேண்டும். அவன் இந்த முழு நிலவுபோல் என்றும் ஒளி பரப்பிக்கொண் டிருப்பான். இந்த உண்மையைத்தான் ஒளி நிலவு எனக்கு உணர்த்துகிறது.*

**பொன்ன :** *சந்திர லோகத்தைப் பார்த்தது போதும் ; கொஞ்சம் இந்த உலகத்துக்கு வாருங்கள்....நான் பாடட்டுமா ?*

**வாஞ்சி :** *பாடு பொன்னு, பாடு. இசைக்கு மனத்தை ஒருநிலைப்படுத்தும் சக்தி உண்டு, பாடு...*

*[பொன்னம்மாள் பாடுகிறாள்.]*

**பொன்ன :** *(பாடுகிறாள்)*

**குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்**
**மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி**
**கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல்**
**வைத்துக் கிடந்த மலர் மார்பா ! வாய்திறவாய் !**

*—ஆண்டாள் திருப்பாவை*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 22

இடம் :—சிதம்பரனூர் வீடு.

உறுப்பினர்கள் :—உலகநாதன், ஆறுமுகம், மாசிலாமணி, வ. உ. சி., சிவா, தந்திச் சேவகன், பாண்டித்துரைத் தேவர், பாரதி, மீனாட்சி.

*[உலகநாதனும், ஆறுமுகமும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]*

உலக : டேய் தம்பி ! உனக்கு அப்பா சொல்லிக் கொடுத்தாங்களே 'குறள்' பாடம் பண்ணினியா ?

ஆறு : ஓ !...

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு
கற்றதனு லாய பயனென்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்
மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

—திருக்குறள்.

*[மாசிலாமணி உள்ளே வந்துகொண்டே மகிழ்ச்சியோடு.]*

சிமாலா : ஆஹா ! அப்படித்தாண்டா கண்ணு !...

*[இரு குழந்தைகளும்]*

இருவரும் : மாமா, வந்துட்டாங்க, மாமா வந்துட்டாங்க !

மாசிலா : உலகநாதா ! அப்பா இருக்காங்களா ?

உலக : இருக்காங்க, மாமா வந்திருக்கிறதாகச் சொல்றேன்.

*[இருவரும் உள்ளே ஓடுகிறார்கள். வ. உ. சி. வந்து கொண்டே]*

வ. உ. சி. : வா மாசிலாமணி, என்ன ஏதாவது செய்தி இருக்கிறதா ?

**மாசிலா :** ஆம், அண்ணுச்சி ! நம்ம சுதேசிக் கப்பல் கம்பெனி நிர்வாகிகளுக்கும், உங்களுக்கும் ஏதோ மனத்தாங்கல் என்று பலர், பலவிதமாகப் பேசிக் கொள்ளுகிருர்களே ?

**வ. உ. சி. :** மெய்தான் !...நான் அரசியலில் தீவிரமாகப் பங்கு கொள்வதால் சுதேசிக் கப்பல் கம்பெனிக்குத் தொல்லைகள் ஏற்படுகிறதாம்.

**மாசிலா :** இது விஷயம் பாண்டித்துரைத் தேவர் அவர் களுக்குத் தெரியுமா ?

**வ. உ. சி. :** தெரியும். அவர்களும்கூட என் போக்கை விரும்பவில்லை என்று கேள்விப்படுகிறேன். ஆனுல், தேவர் வெளிப்படையாக என்னிடம் ஒன்றும் கேட்க வில்லை.

**மாசிலா :** அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தான் வந்தேன்.

[சிவா உணர்ச்சிப் பெருக்கோடு உள்ளே வந்து]

**சிவா :** சிதம்பரம் பிள்ளையவாள் ! கேட்டீரா ? விபின சந்திர பாலர் விடுதலையடைந்து விட்டாராமே ?

[‘இந்தியா’ பத்திரிகையைக் கொடுக்கிருர். வ. உ. சி. மகிழ்ச்சியுடன் பார்த்து]

**வ. உ. சி. :** என்ன ! வீர பாலர் விடுதலை செய்யப் பட்டாரா ?

[பத்திரிகையைப் படிக்கிருர்.]

**சிவா :** ஆம்! அந்த வெற்றி வீரரைக் கரங்கூப்பி வர வேற்றதாம் வங்க மாகாணம்.

[தந்திச் சேவகன் வருகிருன்.]

**த. சே. :** சார் ! தந்தி !

[வ.உ.சி. கையெழுத்திட, தந்திச் சேவகன் தந்தியைக் கொடுத்துப் போகிருன். வ. உ. சி. தந்தியைப் படிக்கிருர்.]

வ. உ. சி. : திலகர் பெருமான் தந்தி கொடுத்திருக்கிருர் சிவா !

சிவா : என்ன...?

வ. உ. சி. : மார்ச் ஒன்பதாம் தேதியை விபின சந்திர பாலர் விடுதலை விழாவாகக் கொண்டாட வேண்டுமாம்.

[தந்தியை வாங்கிப் பார்த்தவாறு]

சிவா : பூலே, கொண்டாடுவோம் வெற்றி விழாவை. திருநெல்வேலியில் ஒரு மாபெரும் ஊர்வலம் நடத்துவோம். விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவோம் !

வ. உ. சி. : அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள். வெற்றிகரமாகக் கொண்டாடுவோம்.

[பாண்டித்துரைத் தேவர் வருகிருர்.]

பாண்டி : கொண்டாடக் கூடாதென்று நான் சொல்ல வரவில்லை வ. உ. சி., ஆனுல், அதில் நீங்கள் கலந்துகொள்வது...!

[பாண்டித்துரை அமர்தல்]

வ. உ. சி. : என்ன சொல்கிறீர்கள் ?

பாண்டி : நான் சொல்லவில்லை. நமது நிர்வாகக் குழு நேற்றிரவு கூடி முடிவு செய்திருக்கிறது. தலைவர் செயலாளராக உள்ளவர்கள் நேரடி அரசியல் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாதென்று அவசரத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

வ. உ. சி : (வியப்புடன்) அவசரத் தீர்மானமா ?......

பாண்டி : ஆம், வ. உ. சி. ! ஏன் ? சுதேசி வளர்ச்சியிலே அக்கறை கொள்ளும் ஒன்றை மட்டும் நாம் செய்வது...? நேரடியான அரசியல் வேலைகளில் நமது சிவா போன்றவர்கள் ஈடுபடலாமே ! இதிலென்ன தவறு இருக்கிறது.

[சிவா ஏளனமாகச் சிரிக்கிருர்.]

வ. உ. சி. : சுதேசியம் என்பது வெறும் பொருள்களோடு நிற்பதல்லவே. வாணிபம், கல்வி, ஆட்சி இப்படி வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சுதேசிய மணம் கமழ வேண்டாமா ?

என்னைக் கேட்டால், நமக்குள் நேரும் வழக்குகளைக்கூட நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பேன். அன்னிய ஆட்சி அமைத்திருக்கும் மன்றங்களுக்குப் போகக்கூடாது. ஊருக்கு ஒரு நீதி மன்றம், தெருவுக்கு ஒரு பஞ்சாயத்து சபை இருக்க வேண்டும்.

ஜமீன்தார் அவர்களே ! சுதேசிக் கப்பல் கம்பெனிக்காகச் சிதம்பரம் பாடுபட்டது பொருளையும், புகழையும் தேடுவதற்கல்ல; நமது மானத்தைக் காப்பதற்காக.

பாண்டி : (யோசனையுடன் எழுந்தவாறு) நல்லது வ. உ. சி. இதைப்பற்றிப் பிறகு பேசுவோம். ஒரு அவசரக் காரியமாக நான் மதுரைக்குப் போக வேண்டியிருக்கிறது. மீண்டும் சந்திப்போம் ; வணக்கம்.

[எல்லோரும் பதில் வணக்கம் செய்ய, ஜமீன்தார் போகிருர்.]

சிவா : பிள்ளையவாள் ! ஜமீன்தார் அவர்களின் தோரணையைக் கவனித்தீர்களா ?

வ. உ. சி. : சிவா, தேச விடுதலைக்காக என்னுல் இயன்ற பங்கை நான் செய்வதென்று தீர்மானித்த பிறகு, பின்வாங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

சிவா : மனநிறைவோடு நான் கூறுகிறேன் பிள்ளையவாள்! பாரதமாதா உம்மைப் புகழ்சான்ற தலைவராக்கி, என்றென்றும் நீங்கள் தியாகச் சுடராக விளங்கிவர எல்லா அருளும் நல்குவாள் !

வ. உ. சி. : நண்பரே, நான் இதற்காக மக்களிடம் எதையும் கைமாருக எதிர்பார்க்கவில்லை. ''சுதந்திரம் எனது பிறப்புரிமை,'' ''தேசப்பணி என் கடமை,''

அதைத் தயங்காமல் செய்யத் தயாராக இருக்கிறேன். விடுதலை விழாவுக்கான சுற்றறிக்கையை விரைவில் தேசாபிமான சங்கங்களுக்கெல்லாம் அனுப்பி வையுங்கள். வெற்றி விழாவை விண்ணதிர நடத்தி வைப்போம்.

[பாரதி வருகிறார்]

**பாரதி :** வந்தேமாதரம் ! சிதம்பரம் பிள்ளையவாள்.

**வ. உ. சி. :** வந்தேமாதரம், பாரதி...வாருங்கள்.

**மீனாட்சி :** (உள்ளிருந்து வந்து) வாருங்கள் அண்ணா.

**சிவா :** வாருமய்யா பாரதியாரே...!

**பாரதி :** (சிவாவைக் கண்டு உரக்கச் சிரித்து) பலே, பலே, இரண்டு பேருமாச் சேர்ந்து திருநெல்வேலிச் சீமையிலே அமர்க்களம் செய்கிறீர்களாமே !... (சிவாவை, முழங்கையால் இடித்து) என்னய்யா, முறைத்துப் பார்க்கிறீர் ? உமக்கு எப்படித் தெரியும் என்று கேட்டுவிடாதீர். ரவி பார்க்காத இடத்தைக் கூட, இந்தக் கவி பார்த்து விடுவானய்யா.

[எல்லோரும் சிரிக்கிறார்கள். அருகிலிருந்த மாசிலாமணியைப் பளாரென அடித்து]

எப்படி தம்பீ ! வெட்டு ஒன்று ; துண்டு ரெண்டு, எதையும்வெளிப்படையாச் சொல்லணும்,இல்லையா?

**சிவா :** பாரதி, மார்ச் ஒன்பதாந் தேதி, விபின சந்திர பாலர் விடுதலையைப் பெரிய விழாவாகக் கொண்டாட நம்ம பிள்ளையவாள் பிரம்மாண்டமான திட்டம் போட்டிருக்காரய்யா !...

**பாரதி :** அப்படியா சேதி ! பலே பாண்டியா ! பராசக்தி பக்கமிருப்பாள் ; பயப்படாதே.

[உள்ளேயிருந்து, உலகநாதன், ஒலி கேட்கிறது]

**உலக :** சகோதரர்களே ! வந்தேமாதரம் என்று சொல்லுங்கள். அன்னிய ஆடைகளை அழியுங்கள் ;

சுதேசி ஆடைகளையே அணியுங்கள். தீவிர வாதம் வெல்ல வேண்டும். சுதந்திரம் கிடைக்க வேண்டும். பாரத மாதாவுக்கு,

ஆறு : ஜே !...

[எல்லோரும் திரும்பிப் பார்க்கிருர்கள்]

பாரதி : பலே, பலே, அது யாரு அது ?...

சிவா : வேறு யார் ? நம்ம குட்டிச் சிதம்பரம் பிள்ளை தான்.

மீனுட்சி : ஆமாண்ணு......அவங்கப்பா இப்படித்தான் மேடைப் பிரசங்கம் செய்யிருங்களாம்.

பாரதி : (சிரித்து) அப்படியா சங்கதி ? கூப்பிடம்மா அந்தக் குட்டிப் பாண்டியனை.

மீனுட்சி : டேய், சின்ன ராஜா......கண்ணு......இங்கே வாம்மா.

[உலகநாதனும், ஆறுமுகமும் உள்ளே இருந்து வருகிருர்கள்.]

பாரதி : டேய் சின்ன ராஜா...வாடா. எங்கே ? பேசு பார்க்கலாம், உங்க அப்பாவைப் போல.

[உலகநாதன் மேஜைமீது ஏறி நின்றுகொண்டு.]

உலக : வந்தேமாதரம். சகோதரர்களே, சுதந்திரம் நமது பிறப்புரிமை. அன்னிய ஆடைகளை அழியுங்கள். சுதேசி ஆடைகளையே அணியுங்கள். தீவிர வாதம் வெல்ல வேண்டும். சுதந்திரம் கிடைக்க வேண்டும். பாரத மாதாவுக்கு,

ஆறு : ஜே !...

[எல்லோரும் சிரிக்கிருர்கள்.]

பாரதி : சபாஷ் பாண்டியா, அப்படிப் பேசுடா ! பலே !! சிதம்பரம் பிள்ளையவாள், நீர் மகா அதிர்ஷ்டசாலிங் காணும். இவாதானய்யா இந்த நாட்டினுடைய செல்வங்கள் !

*[குழந்தைகள் இருவரையும், கட்டி அணைத்துத் தூக்கிக்கொண்டு, ''பிள்ளைக்கனியமுதே ' என்று பாடுகிறார்.]*

பலே, பலே இவா காலத்திலே எல்லாம் வெள்ளைக் காரன் இருக்கற இடம் தெரியாமே ஓடணும்.

*[எல்லோரும் சிரிக்கிறார்கள், உலகநாதனும், ஆறுமுகமும் கீழே இறங்கி ஓடுகிறார்கள்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 23

**இடம்:** வீதி.

**உறுப்பினர்கள்:** வ. உ. சி., சிவா, பாரதி, இன்ஸ்பெக்டர், போலீஸ் ஜவான்.

*[வ. உ. சி., சிவா, பாரதி மூவரும் ஒரு புறமாக வருகிறார்கள். சப் இன்ஸ்பெக்டரும், ஜவானும் எதிர்ப்புறம் வருகிறார்கள்.]*

**சப் இன்ஸ்பெக்டர் :** நமஸ்காரம் ஸார்...

*[ஒரு கடிதத்தை வ. உ. சி., யிடம் கொடுத்து, கையெழுத்துப் பெறுகிறார்.]*

கலெக்டர் உத்தரவு, நாங்க வர்றோம் ஸார்.

*[இருவரும் போகிறார்கள். வ. உ. சி. கடிதத்தைப் பிரித்துப் படித்துவிட்டு, ஆத்திரத்துடன்,]*

**வ. உ. சி. :** விபின சந்திர பாலர் விடுதலை விழாக் கொண்டாட்டத்தில், சிதம்பரமும், சிவாவும் கலந்து கொள்ளக் கூடாதாம். கலெக்டர் விஞ்ச் உத்தரவு அனுப்பியிருக்கிறான்.

**சிவா :** அட பரங்கிப் பயல்களா !

**வ. உ. சி. :** விழாவை யொட்டி ஊர்வலமோ, பொதுக் கூட்டங்களோ நடத்தக் கூடாதாம்.

**சிவா :** என்ன ஆணவம் பார்த்தீரா ?

வ. உ. சி. : சிவா ! விபின சந்திர பாலர் உருவப் படத்தைத் தியார் செய்யுங்கள். மிகப்பெரிய ஊர்வலத்தை நடத்தியே தீருவோம். சர்க்காரின் தடையை மீறுவோம்.

சிவா : விடக்கூடாது பிள்ளேயவாள் ; ஒருகை பார்த்து விடவேண்டும்.

பாரதி : செந்தலேப் பூச்சிகளின் இந்த உருட்டலுக்கும், மிரட்டலுக்கும் நம் சிதம்பரச் செம்மலா அஞ்சுபவர்? ஒருபோதுமில்லே சிவம், ஒருபோதுமில்லே. கருமமே கண்ணுக, தருமமே ஜெயமென்று காரிய சித்தியடைவதில், வீரிய சக்தி படைத்தவரல்லவா நம் சிதம்பரம் பிள்ளே ?

சிவா : நமது பலம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை. இந்த விழாவின் மூலம் வெள்ளேயர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் சிதம்பரம் பிள்ளேயின் துணிவை, அந்த விஞ்ச் உணரத்தான் போகிருன்.

*[போகிருர்கள்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 24

இடம் : ஆற்றங்கரைப் பாலம் நிழற் காட்சி.

உறுப்பினர்கள் : இன்ஸ்பெக்டர், சார்ஜெண்ட், ஆஷ் துரை, போலீஸ் ஜவான்கள், வ. உ. சி., சிவா, வாஞ்சி, பொதுமக்கள்.

*[உள்ளே ஊர்வலம் வரும் குரல் கேட்கிறது. மேடையின் முன்புறம் இன்ஸ்பெக்டர், சார்ஜெண்ட் போலீஸார் பரபரப்போடு நிற்கின்றனர்.]*

### ஊர்வலப் பாட்டு

வாழ்க திலகன் நாமம் வாழ்க ! வாழ்கவே !
வீழ்க கொடுங்கோன்மை வீழ்க ! வீழ்கவே !
நாலு திசையும் ஸ்வாதந்தரிய நாதம் எழுகவே
நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே
(வா)

அச்சமில்லை அச்சமில்லை
அச்ச மென்பதில்லையே !
இச்சகத்துளோ ரெலாம்
எதிர்த்து நின்ற போதினும் (அச்ச)
துச்சமாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும் (அச்ச)
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்று விட்ட போதினும் (அச்ச)
உச்சி மீது வானிடிந்து
வீழுகின்ற போதினும் (அச்ச)
—பாரதி

சார்ஜென்ட் : (ஓடிவந்து) ஸார், சப்கலெக்டர் ஆஷ் துரை பந்தோபஸ்து ஏற்பாட்டைப் பார்வையிட வருகிறார்.

[ஆஷ், வந்ததும் எல்லோரும் ஸல்யூட் செய்கிறார்கள்.]

ஆஷ் : எப்படி நிலைமை ?

இன்ஸ் : கூட்டம் கட்டுக் கடங்காமே இருக்குது ஸார் ! கோஷங்கள் பலமா இருக்குது !!

ஆஷ் : ரிஸர்வ் போலீஸ் போதுமா...?

இன்ஸ் : அதிகம் ஸார் ! துப்பாக்கியைக் குறிபார்த்து தயாரா இருக்காங்க. 'பயர்'னு ஒரு உத்தரவு குடுத்தாப் போதும் ; சுட்டுப் பொசுக்கிடுவாங்க.

ஆஷ் : இவ்வளவு பெரிய ஊர்வலத்தை ரொம்ப 'கேர்புலா' கமாண்ட் பண்றனே, சிதம்பரம்பிள்ளை.

[வாஞ்சி, கிருஷ்ணசாமி, நீலகண்டன் மூவரும் வருகிறார்கள்.]

ஆஷ் : ம் !...யாரங்கே ; போங்க, போங்க, நிக்கக் கூடாது ; போயிக்கிட்டே இருக்கணும்.

[வாஞ்சி நின்று பார்க்கிறான்.]

ஆஷ் : ஏய்...! என்ன மேன் மொறைக்கிறே? சொல்றது தெரியலே ?

வாஞ்சி : ம் !...தெரியுது.

ஆஷ் : பின்னே ஏ மேன் நிக்கறே ! ஓடு.

[ஆஷ் பிரம்பால் அடிக்கிறான் ; வாஞ்சி முறைத்த படி போகிறான்.]

ஆஷ் : எதற்கும் தயங்க வேண்டாம் ! கட்டு மீறினால், தடியடிப் பிரயோகம் நடக்கட்டும். நாய்கள் எழுந்திருக்கக் கூடாது ; இடுப்பை முறித்துத் தள்ளுங்கள். 'நான்சென்ஸ்' வந்தேமாதரமாம், வந்தேமாதரம்!

[உள்ளே வந்தேமாதர ஒலியும், கைதட்டலும் கேட்கின்றன. வ. உ. சி. பேசுகிறார்.]

ஒருவர் : வந்தேமாதரம்...!...

பலர் : வந்தேமாதரம்.

ஒரு : இந்து முஸ்லீம் ஒற்றுமை...

பல : ஓங்குக !

ஒரு : வளங் கொழிக்கும் வங்கத்தை...

பல : மதப் பிரிவினை செய்யாதே !...

ஒரு : பேரறிஞர் விபின சந்திர பாலர்...

பல : வாழ்க !

ஒரு : மகாராஷ்டிர வீரர் லோகமான்ய பால கங்காதரத் திலகர்.

பல : வாழ்க !

ஒரு : வந்தேமாதரம் பிள்ளை, வ. உ. சிதம்பரனார்...

பல : வாழ்க !

ஒரு : தியாக சீலர் சுப்பிரமணிய சிவா...

பல : வாழ்க !

வ. உ. சி. : தமிழ்ப் பெருமக்களே ! இன்று திருநெல்வேலி வீர உணர்ச்சியடைந்திருக்கிறது. இந்த தாமிரபரணி ஆற்றங்கரையில் எங்கு நோக்கினும், மக்கள் வெள்ளம் போல் திரண்டிருப்பது ஒன்றே நமது வெற்றிக்கு அறிகுறி. விபின சந்திர பாலர் வெற்றி விழாவை இவ்வளவு அமைதியாகவும், சிறப்பாகவும் நடத்திவைத்த உங்களனைவரையும் கரம் கூப்பி வணங்குகிறேன்.

ஒரு : தென்னாட்டுத் திலகர் வ. உ. சிதம்பரனர்...

பல : வாழ்க !

வ. உ. சி. : சகோதரர்களே ! அமைதி...நமது தியாக சீலர் சுப்பிரமணிய சிவா நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

சிவா : தென் பாண்டி நாட்டுத் தீரர்களே, தமிழ்ப்பெரு மக்களே ! தலை கொடுத்த தானபதி வம்சத்து, சிதம்பரம் பிள்ளை அவர்கள், அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் ; எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள் ஆணையை ஏற்று விபின சந்திர பாலர் விடுதலை விழாவை இவ்வளவு அமைதியாகவும், சிறப்பாகவும் நடத்திக் கொடுத்த உங்களனைவருக்கும் என் நன்றி.

*[பொதுமக்கள் கை தட்டுகிறார்கள்.]*

சிவா : (தொடர்ந்து) இந்த விழாவைத் தடுக்க போலீஸார் செய்த முயற்சிகள் அனைத்தையும் படு தோல்வி அடையச் செய்துவிட்டோம். அன்னிய ஏகாதிபத்யம் பாரத தேசத்தை விட்டு இனி ஓட்டமெடுக்க வேண்டும்! சொல்லுங்கள் : வந்தேமாதரம்...!

எல்லோரும் : வந்தேமாதரம் !

ஆஷ் : (கோபத்தோடு) வந்தேமாதரம் !... வ ந் தே மாதரம் ! பிளடி நான்சென்ஸ்...!

[காட்சி முடிவு]

## காட்சி : 25

இடம் :—வீதி.

உறுப்பினர்கள் :—வாஞ்சி, நீலகண்டன், கிருஷ்ணசாமி.

[மூவரும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.]

நீலகண்டன் : வாஞ்சி நீ இப்படி உணர்ச்சி வசப்பட்டிருக்கக் கூடாது. சப்கலெக்டர் ஆஷ் நம்மைச் சந்தேகித்திருந்தால்; நமது அபிநவ பாரத பயங்கர இயக்கத்தின் திட்டங்களெல்லாம் சீர் குலைந்திருக்குமே!

வாஞ்சி : ஆஷ்...ஆணவம் பிடித்த வெள்ளையன்!... ஒழித்துக் கட்ட வேண்டியவர்களில் ஒருவன்...இருக்கட்டும்...நீலகண்டா! சிதம்பரம் பிள்ளை சிவா முதலியோர் நடத்தும் இந்த ஊர்வலம், கூட்டம், கோஷம் இவைகளெல்லாம் சிறப்புக்குரியவைதான். ஆனால், இந்தக் கோஷங்களாலும் வெறும் வீராவேசப் பேச்சுக்களாலும் வெள்ளையர் ஆட்சியை ஒழிக்க ஒருபோதும் முடியாது. நம் குருநாதர் வ. வெ. சு. ஐயரின் பயங்கர இயக்கத் திட்டங்களால்தான் பிரிட்டிஷ் ஆட்சியைத் தீர்த்துக் கட்ட முடியும். நாம் முப்பது கோடி மக்கள் இந்தியாவில் வாழுகிறோம். மூன்று லட்சம் வெள்ளைப் பரங்கியர்கள் நம்மை ஆறுயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து அடக்கியாளுகிறார்கள். இதைவிட மானக்கேடு வேறு என்ன இருக்கிறது? நம் இயக்கத்தின் திட்டப்படி உயிரைத் துச்சமாக மதித்துச் செயலாற்றுவோமானால் வெகு சீக்கிரத்தில் இந்தப் பறங்கிக் கும்பலைத் தீர்த்துக் கட்டிவிடலாம்.

கிருஷ்ணா : வாஞ்சி, நம் திட்டங்கள் நிறைவேறும் வரை நீ எந்த இடத்திலும்உணர்ச்சி வசப்பட்டுவிடக்கூடாது. இன்று ஆஷ் உன்னைப் பிரம்பாலடித்தபோது நீ என்ன செய்வாயோ என்று எங்களுக்கு பயமாகவேயிருந்தது.

வாஞ்சி : இருக்கட்டும் ; வெள்ளையர்கள் சட்டத்தின் பேரால் செய்வதையெல்லாம் செய்யட்டும் ; நாம் சத்தியத்தின் பெயரால் போராட்டம் நடத்து கிறோம். ''வெற்றி நமதே'' என்ற உறுதியான நம்பிக்கையுடன் நாம் போராடுவோம்...சரி ; நாளை மாலை மீண்டும் சந்திப்போம். வந்தே மாதரம்...

இரு : வந்தே மாதரம் !

[காட்சி முடிவு]

## காட்சி : 26

இடம் :—பொன்னம்மாள் வீடு.

உறுப்பினர்கள் :—வாஞ்சி, பொன்னம்மாள், பெரியவர்.

[வாஞ்சி வெளியிலிருந்து கதவைத் தட்டிக்கொண்டு 'பொன்னு, பொன்னு' என்று அழைக்கிறான். பொன்னம்மாள் கதவைத் திறக்கிறாள். வாஞ்சி உள்ளே வந்து அமைதியற்ற நிலையில் உலவிக் கொண்டிருக்கிறான்.]

பொன்ன : அத்தான்! இவ்வளவு நேரமா நீங்கள் வர ? எங்கே போயிருந்தீர்கள் ?

வாஞ்சி : விபின சந்திர பாலர் விடுதலை விழாவுக்குப் போயிருந்தேன் பொன்னு !

பொன்ன : விழா, கூட்டம், சுதந்திரம், சுயராஜ்யம், வந்தே மாதரம் என்று இப்படியே நாளெல்லாம் சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள் ! என்னைப்பற்றிய நினைவே இல்லை உங்களுக்கு...கொஞ்ச நாளாவது இந்த வந்தே மாதரத்தை மறந்திருக்கக் கூடாதா?

வாஞ்சி : என்ன சொல்கிறாய் பொன்னு ?...வந்தேமாத ரத்தை மறப்பதா ? ஹூம், விபினசந்திர பாலர் விழா மூலம், உங்கள் திருநெல்வேலியைச் சரித்திர முக்கியத்வமாக்கியுள்ள என் உயிர்போன்ற வந்தே

மாதர் மந்திரத்தை மறக்க வேண்டுமா? ஹூம்... மறக்காவிட்டால்...?

**பொன்ன:** கல்யாணமாகியும் நீங்கள் பிரம்மச்சாரிபோல் அலைய வேண்டியதுதான்! உங்கள் பிரிவால் நான் கண் கலங்கியே சாக வேண்டியதுதான்.

**வாஞ்சி:** கண்ணே! பாரத தேசத்தை இப்பொழுது பிரம்மச்சாரிகளே காப்பாற்ற வேண்டும். மிக உயர்ந்திருந்த இந்த நாடு மிகவும் இழிந்து போய் விட்டது. மணம் தரும் மலர்கள் நிறைந்த அழகிய பூங்கா இருந்த இடத்தில், முட் செடிகளும், விஷப் பூச்சிகளும் நிறைந்த பாழும் காடு இருப்பதுபோல் தோன்றுகிறது. மூவேந்தர் செங்கோல் செலுத்தி வாழ்ந்த நாட்டில், கொடுங்கோலோச்சும் கொள் ளையர் கூட்டம் வாழ்வது போலிருக்கிறது. நீயே சொல்! மனித தர்மத்தில் காதலுக்கு மட்டும்தானு இடம்? கடமைக்கு உயர்வில்லையா? இடமில்லையா? சொல் பொன்னு...சொல்.

**பொன்ன:** அத்தான்! நீங்கள் என்னென்னவோ சொல்லு கிறீர்கள். என்னுல் இதையெல்லாம் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

**வாஞ்சி:** (உலவியவாறு) நித்ய பிரம்மச்சாரிகள் வேண்டும். ஆத்ம ஞானிகள் வேண்டும். தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும் இந்தத் தேசத்திற்கு. நமது தேசீயம் கேவலம் ஒரு லௌகீக காரியமல்ல; இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்ப வர்களுக்கு வீரம் மட்டும் போதாது; தளராத உறுதி, கர்ம யோகித்தன்மை இவைகள் வேண்டும்.

**பொன்ன:** அத்தான்! உங்கள் பேச்சின் போக்கைப் பார்த்தால், மென்மேலும் எனக்குப் பயமாக இருக்கிறது.

*[பெரியவர் உள்ளிருந்து வந்து.]*

**பெரியவர்:** டேய்! வாஞ்சி, என்னடா அர்த்த ராத்திரி யிலே வந்து பயமுறுத்தறே?

**பொன்ன :** நீங்க போய் படுத்துக் கொள்ளுங்களப்பா. சும்மா பேசிண்டிருந்தோம்.

**பெரியவர் :** சும்மா பேசிண்டிருந்த லட்சணமா இது ! ஆத்ம ஞானம், கர்மம், தர்மம் இதெல்லாம் இப்ப நம்ம ஆத்துக்கு ஏன் வந்தது ? (வாஞ்சியைப் பார்த்து) டேய், உனக்கு மூளை இருக்காடா ? திடீர், திடீர்னு ஓடிப் போயிடறயே, அவ சின்னப் பொண்ணு, புள்ளைத்தாச்சி, இந்த நெலமையிலே அவளை விட்டு விட்டுப் போய்ட்டா—? இதெல்லாம் உனக்கே நன்னயிருக்கா ?

**பொன்ன :** ஒண்ணுமில்லப்பா, விழாவுக்குப் போய்விட்டு வந்தார்; அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

**பெரியவர் :** அதுதான் ஊரெல்லாம் அமர்க்களப்படுதே. பயித்தியக்காரப் பசங்க, வங்காளத்துலே விபின சந்திர பாலரை விடுதலை பண்ணுறு இங்கே திருநெல்வேலியிலே இருக்கறவனுகளுக்கென்ன ? இவன் குதிக்கிறுன். எல்லாம் இந்தச் சிதம்பரம் பிள்ளை பண்ற வேலை. நாலு சோம்பேறிப் பசங்களைச் சேர்த்துண்டு...

**வாஞ்சி :** மாமா ! போதும். சிதம்பரம் பிள்ளையைப் பற்றி எதுவும் பேசவேண்டாம்.

**பெரியவர் :** ஏன் கோபம் பொத்துண்டு வர்றதோ ? உங்களுக்கெல்லாம் நாசமாப் போற காலண்டா. பார்த்துண்டே இருங்கோ, திடீர்னு ஒரு குண்டைப் போட்டு திருநெல்வேலியையே சுட்டுப் பொசுக்கிடப் போருன், பிரிட்டிஷ்காரன்!

**பொன்ன :** என்னப்பா இது ? அவர் இன்னும் சாப்பிடக் கூட இல்லே. நீங்கள் போங்களப்பா...

**பெரியவர் :** போறேன், போறேன். ஏங்காலம் போயிண்டேதான் இருக்கு...வாழப்போறவா நீங்கதான்; எனக்கென்ன ?...

*[புலம்பிக்கொண்டே போகிருர்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி: 27

இடம்: சிதம்பரனார் வீடு.

உறுப்பினர்கள்: வ. உ. சி, மீனாட்சி, சிவா, மாசிலாமணி.

[வ. உ. சி. யும், மாசிலாமணியும் பேசிக்கொண்டே வருகிறார்கள்.]

மாசிலா: விபினசந்திர பாலரிடம் மக்களுக்கு இவ்வளவு அபிமானம் இருக்குமென்று நான் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை அண்ணாச்சி.

வ. உ. சி.: விபின சந்திர பாலர் என்ன சாதாரண மானவரா? பேரறிஞரல்லவா! இந்து–முஸ்லீம் கலவரத்தை வங்கத்தில் உண்டாக்கப் பிரிட்டிஷ் ஆட்சி செய்த சூழ்ச்சியைத் துணிந்து எதிர்த்த முதல் வராயிற்றே. நம் திலகர் பெருமானின் மதிப்பிற்குரிய வரல்லவா அவர்?

மாசிலா: எப்படியோ, தென்னாட்டில் உங்கள் செய லாற்றலால் மக்கள் எழுச்சி கொண்டுவிட்டார்கள். அண்ணாச்சி, ஒரு முக்கியமான செய்தி; கேட்க மறந்துவிட்டேன். கப்பல் கம்பெனியிலிருந்து உங்கள் பதவியை ராஜினாமா செய்து விட்டீர் களாமே?

வ. உ. சி.: ஆம்! என் அரசியல் ஈடுபாடுகளைத் தடைப் படுத்தப் பார்த்தார்கள். அதனால்தான் ராஜினாமா செய்துவிட்டேன்.

மாசிலா: உங்கள் மேற்பார்வை யில்லாவிட்டால் கப்பல் கம்பெனி என்ன ஆகுமோ?

[ஒரு போலீஸ் ஜவான் வந்து, வணங்கிவிட்டு ஒரு கடிதத்தை வ. உ. சி. யிடம் கொடுத்துவிட்டுப் போகிறான்.]

வ. உ. சி: (கடிதத்தைப் படித்து, சிந்தித்தவாறு). உம்...

மாசிலா : என்ன அது...?

[சிவா, உள்ளே வந்துகொண்டே.]

சிவா : பிள்ளைவாள், செந்தலைப் பூச்சிகள் வந்து போகிருர்களே,' என்ன விஷயம் ?

வ. உ. சி. : நம் இருவரையும் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் விஞ்ச் துரை உடனே வந்து சந்திக்கும் படியாக உத்தரவு அனுப்பியிருக்கிருன்.

[மீனுட்சி வந்து கவலையோடு நிற்கிருள்.]

சிவா : 'பிள்ளைவாள், ஏதோ சூழ்ச்சிதான் இது. எதிர் பாராமல் ஏதாவது நிகழலாம், எச்சரிக்கையாகவே இருக்கவேண்டும்.

மாசிலா : ஆம்! அண்ணுச்சி சொல்வதில் அர்த்தமிருக் கிறது. எதையும் யோசித்துச் செய்யுங்கள்.

மீனு : ஆமாங்க, கொஞ்சம் நிதானமாக ஆலோசித்து முடிவு செய்யுங்கள்.

வ. உ. சி. : மீனுட்சி, நீ எதற்காக மனக்குழப்பம் அடை கிருய் ? விஞ்ச் என்னை என்ன செய்ய முடியும் ? சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை அடையும் பொருட்டு பல இன்னல்களை நாம் ஏற்றுத்தானே ஆகவேண்டும்.

மீனு : எதற்காக அழைத்திருக்கிருனே ?

வ. உ. சி. : அதிகார தோரணையில் மிரட்டிப் பார்க்க லாமென்று அழைத்திருப்பான். சிவா! நாம் போகாமல் இருப்பது சரியாகாது. அஞ்சுகிருே மென்று, விஞ்ச் நினைத்துவிடக் கூடும். என்னேடு புறப்படத் தயாராகுங்கள்.

சிவா : வந்தேமாதரம் பிள்ளை வாக்கை சிவா ஒருபோதும் தட்டி நடந்ததேயில்லை ; இதோ நான் தயார்.

[காட்சி முடிவு]

## காட்சி : 28

**இடம் :** கலெக்டர் விஞ்ச் மாளிகை.

**உறுப்பினர்கள்:** விஞ்ச், ஆஷ், இன்ஸ்பெக்டர், சார்ஜெண்ட், அரங்கசாமி, வ. உ. சி., சிவம், போலீஸார்.

[கலெக்டர் விஞ்ச் கோபத்தோடு உலவிக்கொண்டிருக்கிறான்.]

**விஞ்ச் :** பிரிட்டிஷ் கவர்ன்மென்ட் பிறப்பித்த தடை உத்தரவை மீறுகிற அளவுக்கு எதிர்ப்புப் போராட்டம், எங்கு பார்த்தாலும் சுதந்திரம் சுதந்திரம் என்பதே பேச்சு. வந்தேமாதரம் என்ற கோஷம்... மிஸ்டர் ஆஷ்...இனி நிலைமை கட்டுக்கடங்காது போலிருக்கிறதே.

**ஆஷ் :** ஆங்கிலேயர்களைக் கண்டால் அஞ்சியோடிய கூட்டம், இப்போது ஆணவத்தோடு நின்று பேச ஆரம்பித்துவிட்டது ஸார்! பலாத்காரத்திற்கும் தயாராகிவிட்டார்கள்.

**இன்ஸ் :** தாமிரபரணி ஆற்றங்கரையில் நடந்த கூட்டத்தையும், ஊர்வலத்தையும் சமாளிக்க எங்களுக்குக் கண்விழி பிதுங்கிவிட்டது ஸார்!

**அரங்க :** துரைவாள், நாங்களெல்லாம் ராஜவிஸ்வாசிகளாம், எங்களை பலவிதமா சமூக பகிஷ்காரம் செய்துண்டு வர்ரு! தூத்துக்குடி ஊருக்குள்ளே நடமாடறதே கஷ்டமா இருக்கு. இந்த பொலிடிகல் நியூஸன்ஸ் அடங்கினாத்தான் ஊர் க்ஷேமமடையும்.

**ஆஷ் :** தூத்துக்குடியில் வசிக்கும் வெள்ளைக்காரர் குடும்பங்களெல்லாம் பயப்படுது ஸார். ஹார்பரில் உள்ள கப்பலுக்குச் சென்று இரவைக் கழிக்கிறார்கள்.

**விஞ்ச் :** அப்படியா? அவ்வளவு தூரத்துக்கு அட்டூழியம் செய்யத் துணிந்து விட்டார்களா?

ஆஷ் : பொறுக்க முடியாத அவமானம் ஸார் !

[ஒரு போலீஸ் வந்து.]

போலீஸ் : வி. ஒ. சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவமும் பேட்டி காண வந்திருக்கிருர்கள்.

விஞ்ச் : வந்திருக்கிருர்களா ? வரவிடு இருவரையும்.

[போலீஸ் ஜவான் போகிருன், விஞ்ச் மற்றவர் களுக்குக் கண்ஜாடை செய்ய, எல்லோரும் போகிருர்கள். வ. உ. சி, சிவா உள்ளே வரு கின்றனர்.]

வ. உ. சி. : வணக்கம் விஞ்ச்துரை அவர்களே !

[வ. உ. சி-யும், சிவாவும் வணங்க, விஞ்ச் தலை வணங் காமல் இறுமாப்போடு நிற்கிருன். அதைக் கண்டு வ. உ. சி, சிவாவைப் பார்க்கிருர்.]

விஞ்ச் : (உட்கார்ந்தபடி) நீர்தான் வி. ஒ. சிதம்பரம் பிள்ளையோ...?

வ. உ. சி. : ஆம் ! (உட்காருகிருர்).

விஞ்ச் : இவர் உங்க ரைட் ஹேண்ட் சுப்ரமண்ய சவமா ?

சிவா : சவமல்ல சார்...சவமல்ல...சிவம்...! சிவம் !

விஞ்ச் : ஓ எஸ் ! சிவம்...சிவம்.

வ. உ. சி. : உட்காருங்கள் சிவா...

[சிவா உட்காருகிருர்.]

விஞ்ச் : என்ன மேன் உம்மைத்தானே ட்ராவங்கூர் கவர்ன்மென்ட் வெளியேற்றியிருக்கிறது ?

சிவா : ரொம்ப கரெக்ட் ; நானேதான் !

விஞ்ச் : மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை, தமிழ் நாட்டிலே நீர் பெரிய பொலிடிகல் லீடராமே, அப்படியா ?

வ. உ. சி. : அதைத் தெரிந்து கொண்டுதானே இங்கு அழைத்திருக்கிறீர் ?

விஞ்ச் : மிஸ்டர் பிள்ளை, நீங்கள் இருவரும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை எதிர்த்தும், அவமதித்தும் காரி யுங்கள் செய்து வருகிறீர்களாமே ? அப்படியா ?

வ. உ. சி. : ஆம்! அந்த உண்மையை பிரிட்டிஷ் பிரதிநிதியாகிய நீர் அறிந்து கொண்டிருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

விஞ்ச் : மிஸ்டர் பிள்ளை, ரொம்ப ஹெட் வெய்ட்டா பேசுகிறீர். தனிப்பட்ட முறையில் உம்ம பிரண்ட் நான்.

வ. உ. சி. : நாங்களும் உம்மை நண்பர்களாகத்தான் மதிக்கிறோம். எங்கள் எதிர்ப்பெல்லாம் இந்த நாட்டைச் சுரண்டும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் மேல் தான். விஞ்ச் துரையிடமல்ல.

விஞ்ச் : மிஸ்டர் பிள்ளை, கௌரவப் பட்டம் பெற்ற பெரிய சீமான்கள் கூட என்முன் நிற்க அஞ்சுகிறார்கள், தெரியுமா உமக்கு ?

வ. உ. சி. : நன்றாகத் தெரியும்! அவர்கள் அஞ்சவேண்டுமென்பதற்காகத்தானே நீங்கள் பட்டங்களைக் கொடுக்கிறீர்கள். பட்டம், பதவி பெற்றவர்களால் அப்படித்தான் செய்ய முடியும்.

விஞ்ச் : ஓஹோ ! நீங்கள் ?

வ. உ. சி. : நாங்கள் பட்டம் பதவிகளைத் துச்சமென மதிப்பவர்கள் ; கைமாறு கருதாதவர்கள். உண்மை உழைப்பின் மூலம் மக்களிடம் செல்வாக்குப் பெற்றவர்கள். சொந்த நாட்டில் மற்றவர்களுக்கு அடிமை செய்து வாழ எங்களால் முடியாது.

விஞ்ச் : (கோபமாக எழுந்து) மிஸ்டர் பிள்ளை, கவனமிருக்கட்டும், கலெக்டர் விஞ்ச் முன்னிலையில் பேசுகிறீர்.

சிவா : (அலட்சியமாக) நீரும் மறந்து விடாதீர் ; இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் தமிழ் நாட்டுத் தலைவரோடு பேசிக்கொண்டிருக்கிறீர் துரை அவர்களே, தமிழ்நாட்டுத் தலைவரோடு பேசிக் கொண்டிருக்கிறீர்.

விஞ்ச்: ஷட் அப்! தலைவன்!! ஆட்டு மந்தைகளாக அடை பட்டுக் கிடக்கும் அடிமைக் கும்பலுக்குத் தலைவன், அப்படித்தானே?

வ. உ. சி: (உணர்ச்சியோடு) இல்லை; அண்டிப் பிழைக்க வந்து, எங்களையே ஆளத் துணிந்து விட்டீர்கள் அல்லவா? அந்த உண்மையை உணர்ந்து எழுச்சி பெற்றுவிட்ட முப்பதுகோடி மக்களடங்கிய இந்திய சமுதாயத்திற்கு நான் ஒரு தலைவன்.

சிவா: பலே பிள்ளையவாள்! பல்லை உடைக்கிற மாதிரிச் சொன்னீர், அப்படிச் சொல்லும்.

விஞ்ச்: டோன்ட் டாக்! வீடு காக்கத் தெரியாதவர் களுக்கு சொந்த நாடாவேண்டும்? ஆளத் தெரியுமா உங்களுக்கு? ஆளமுடியுமா உங்களால்?

வ. உ. சி: நாங்கள் ஆண்ட பரம்பரை அப்பனே, ஆண்ட பரம்பரை! இன்றல்ல, நேற்றல்ல. நீங்கள் காட்டு மிராண்டிகளாகத் திரிந்த காலத்திலேயே நாங்கள் சீரும், சிறப்புமாய் ஆண்ட பரம்பரை.

சிவா: பாவம்! வரலாறு படிக்கவில்லை.

விஞ்ச்: பேசாதீர்.

சிவா: நீர்தானே பேச வைக்கிறீர்!

விஞ்ச்: பழைய பாட்டிக் கதைகள் வேண்டாம். எங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை உங்களில் எவனுல் எதிர்க்க முடிந்தது? விரல் விட்டுச் சொல்ல முடியுமா உங்களால்?

வ. உ. சி.: ஏன் சொல்ல முடியாது, சொல்லுகிறேன்: விரல்விட்டே எண்ணிக் கொள்ளும். காகம் பறவாத சீமையிலே, வெள்ளையரின் ரத்த தாகம் கொண்டு அலைந்தானே பாஞ்சைப் பதியின் சிங்கம்; இதே தென்பாண்டித் திருநாட்டில் உங்களை ஓட ஓட விரட்டியடித்தானே பரங்கியரின் காலன்…முதல் முழக்கம் செய்த மூத்தோன், வீரப்போரிட்டு விழுப்

புண்கண்ட வேந்தன் வீரபாண்டியக் கட்டபொம்மன், அவன் எங்கள் பாட்டன், எண்ணிக் கொள்ளும்.

சிவா : அவன் தம்பி ஊமைத்துரை யார்? ஒரே இரவில் கோட்டை கட்டிக் குடிபுகுந்து உங்கள் பரங்கிப் பாட்டன்மார்களின் குலையெல்லாம் நடுங்க வைத்த மறத்தமிழனல்லவா? இதையும் எண்ணிக் கொள்ளும்.

வ. உ. சி : சிவகங்கைச் சிங்கங்களான மருது சகோதரர் களின் மகத்தான காலத்தைப் புரட்டிப் பாரும் துரையே! வாளும், வேலும், சுருள்கத்தியும் தூங்கி வீரப்போரிட்ட அந்த மறத்தமிழர்களை 'கொரில்லாப் போரிட்டவர்கள்' என்று உங்கள் கர்னல் வெல்ஷ் துரையே வர்ணித்திருக்கிறாரே, படித்துப் பாரும். எண்ணிக் கொள்ளும் இதையும்! ஆங்கில ஆட்சியை அச்சமற்றுத் துச்சமெனக்கருதி எதிர்த்துப் போராடி, இறுதியில் தன் தலையைத்தானே வெட்டிக்கொண்டு மாய்ந்த 'தளவாய் வேலுத்தம்பியின்' சரித்திரம் உமக்குத் தெரியுமா ?...... அவ்வளவெதற்கு ? மங்கையர் குல திலகமான பெண்ணொருத்தி உங்கள் பிரிட்டிஷ் கர்னல்களுடைய தலைகளையெல்லாம் பனங்காய் சீவுவதுபோல் சீவியெறிந்தாளே, அந்த ஜான்சி ராணியின் வரலாற்றைக் கேட்டதில்லையா?

விஞ்ச் : (கோபத்தோடு) தலைக்குத் தலை பேச வேண்டாம்.

சிவா : ஏன்? தலை தூக்க முடியவில்லையோ?

விஞ்ச் : உங்கள் சண்ட மாருதப் பிரசங்கம் கேட்க நான் தயாராகயில்லை. நீங்கள் இருவரும் சட்டத்துக்கு விரோதிகள்.

வ. உ. சி. : சட்டம், எங்கிருந்தோ வந்தவர்கள் ஏற் படுத்திய சட்டம், அது எங்களைக் கட்டுப்படுத்தாது.

விஞ்ச் : உங்களிடமிருந்து நான் சம்மதம் கோரவில்லை. நீங்கள் இருவரும் குற்றவாளிகள்,

வ. உ. சி : குற்றவாளிகள்!…காரணம்?

விஞ்ச் : பிரிட்டிஷ் கப்பலுக்கு எதிராக நீர் போட்டிக் கப்பல் ஓட்டவில்லையா?

வ. உ. சி : ஆம்! ஓட்டினேம் கப்பல்! எங்கள் நாட்டுச் செல்வத்தை நீங்கள் சுரண்டிச் செல்வதைத் தடுக்க ஓட்டினேம் கப்பல்.

சிவா: (ஆவேசமாக முன்வந்து) ஏன்? வயிறு எரிகிறதா? உங்களை வியாபாரம் செய்ய விட்டுவிட்டுத்தானே இந்தத் தேசத்தையே கொள்ளையடித்து விட்டீர்கள் மகா பாவிகளா!

விஞ்ச் : (கோபமாக) ஷட்டப்! ஆளும் ஜாதியாரான ஆங்கிலேயரைத் தூஷித்தது…அன்னியப் பொருள் களை அகற்றும்படி பிரச்சாரம் செய்தது… தடையுத் தரவை மீறி ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்தி அரச நிந்தனையாகப் பேசியது…ஊர்மக்களை ஒன்று கூட்டி வந்தே மாதரமென்று வாய் கிழியக் கூச்சலிட்டது, இவையாவும் குற்றம்! குற்றம்!!

வ. உ. சி. : ஊர்மக்கள் முன்பென்ன? உன் முன்னல் கூட முழக்கமிடுவோம்!

*[வ. உ. சி.யும், சிவாவும் வந்தேமாதரமென்று முழக்குகிருர்கள். வ. உ. சி. பாட்டினல் முழக்கம் செய்கிருர்.]*

வந்தேமாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்! முடி தாழ்த்துவோம்!
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ? அவமானமோ?

—பாரதி

விஞ்ச் : சட்டத்தை மதிக்காத துரோகிகள்! நான் நினைத் தால் உங்கள் இருவரையும் இங்கேயே சுட்டுப் பொசுக்கிவிடுவேன், சிறைக்குள்ளே தள்ளுவேன்! சித்ரவதை செய்வேன்!

*[வ. உ. சி மீண்டும் பாடுகிருர்.]*

சதையைத் துண்டு துண்டாக்கினும், உன் எண்ணம்
சாயுமோ ? ஜீவன் ஓயுமோ ?
இதயத் துள்ளே இலங்கு மகா பக்தி
ஏகுமோ ? நெஞ்சம் வேகுமோ ?

—பாரதி

விஞ்ச் : அரஸ்ட்! கைது செய்யுங்கள் இருவரையும்!

[ஆஷ், சார்ஜெண்ட் முதலியோர் வந்து இருவருக்கும் விலங்கு பூட்டுகிறார்கள். வ. உ. சி.யும், சிவாவும் வந்தே மாதரமென்று கோஷமிடுகிறார்கள்.]

[காட்சி முடிவு]

## காட்சி: 29

இடம்:—போலீஸ் ஸ்டேஷன்.

உறுப்பினர்கள்:—வாஞ்சி, கிருஷ்ணசாமி, நீலகண்டன், இன்ஸ்பெக்டர், சார்ஜண்ட், போலீஸார், பொது மக்கள்.

[பொதுமக்களின் கோஷங்கள் முழங்குகின்றன.

ஒரு : வந்தேமாதரம்...

பலர் : வந்தேமாதரம்!

ஒரு : தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையை...

பலர் : விடுதலை செய்!

ஒரு ; வீரத் தியாகி சுப்பிரமணிய சிவாவை...

பலர் : விடுதலை செய்!

ஒரு : கலெக்டர் விஞ்சு...

பலர் : ஒழிக!

[ஒரே ஆர்ப்பாட்டக் குரலொலி ]

ஒருகுரல் : விடாதீர்கள், அடித்து நொறுக்குங்கள்!

குரல் 2 : கலெக்டர் ஆபீஸை உடைத்தெறியுங்கள்.

குரல் 3 : முனிசிபல் மண்ணெண்ணெய்க் கிடங்கிற்குத் தீ வையுங்கள்.

குரல் 4 : போலீஸ் ஸ்டேஷனைத் தகர்த்தெறியுங்கள்...!

[துப்பாக்கிகள் வெடிக்கும் சத்தம் கேட்கின்றன, பொது மக்களின் கலவரம் அதிகரிக்கிறது, போலீஸ் ஸ்டேஷனில், ஆஷ்துரை கையில் ரிவால்வருடன் உலவிக்கொண்டிருக்கிருன்.]

இன்ஸ் : (ஓடிவந்து)என்ன ஸார் பண்றது. ஊரே ஒண்ணு திரண்டு போச்சு ஸார்.

சார்ஜண்ட் : (ஓடிவந்து) கலகம் பெரிசா இருக்கு ஸார்! மண்ணெண்ணெய் கிடங்கு தீ பற்றி எரியுது ஸார்!

ஆஷ் : பயப்படாதீங்க, கைக்கு கிடைக்கிறவனுங்களைச் சுட்டுத் தள்ளுங்கள்.

[இருவரும் ஓடுகிருர்கள், உள்ளே கலவர ஒலி கேட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு போலீஸ் ஓடி வந்து.]

போலீஸ் 1 : ஸார் ! கலெக்டர் ஆபீசிலே கலகக் கூட்டம் ஸார்.

ஆஷ் : சுட்டுத் தள்ளுங்கள் நாய்களை.

[மற்ருெரு போலீஸ் ஓடிவந்து]

போலீஸ் 2 : ஸார் ! ஒரு பெரிய கூட்டம் போலீஸ் ஸ்டேஷன் பக்கம் வருது ஸார் !

ஆஷ் : பந்தோபஸ்து செய்யுங்கள், கல்லெறிபவர்களைச் சுட்டுத் தள்ளுங்கள்.

[ரிவால்வரை முன்னே நீட்டிக்கொண்டே ஓடுகிருன். கலவர ஒலி கேட்டுக்கொண்டே இருக்கிறது. வெடி சப்தத்தில் சிலர் ஐயோ என்று அலறும் கூக்குரல் கேட்கிறது.]

ஒரு குரல் : அதோ ஆஷ் துரையும், இன்ஸ்பெக்டரும் ஓடருனுக...விடாதே.

ஒரு குரல்: *அநியாயம்! ரொட்டிக்கடைப் பையனைச் சுட்டுட்டு ஆஷ் ஓடறான்! விடாதீங்க அவனை.*

**நகரில்—மற்றொருபுறம்**

*[மீண்டும் துப்பாக்கி வெடி, வாஞ்சி ரொட்டிக்கடை பையனை தோளில் தூக்கியவாறு, விரைந்து வருகிறான். நீலகண்டன், கிருஷ்ணசாமி எதிரில் வருகிறார்கள். கலவர ஒலிகேட்டுக் கொண்டே இருக்கிறது.]*

**நீலகண்டன் :** *வாஞ்சி!*

**வாஞ்சி :** *ஆஷ் அநியாயமாகச் சுட்டுவிட்டான், பாவம் ரொட்டிக்கடைப் பையன்.*

**நீலகண்டன் :** ஆஷ் இன்று மிருக வெறி பிடித்தலைகிறான்!

**கிருஷ்ணசாமி :** படுபாவி, பல உயிர்களைச் சூறையாடி விட்டான் இன்று......

**வாஞ்சி :** இந்தப் படுகொலைக்குப் பழி வாங்கியே தீர வேண்டும். வாருங்கள்.

*[வாஞ்சியோடு, இருவரும் விரைந்து ஓடுகிறார்கள்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 30

**இடம் :** *வ. உ. சி. வீடு.*

**உறுப்பினர்கள் :** *பாண்டித்துரை, உலகநாத பிள்ளை, மாசிலா மணி, மீனாட்சி, குழந்தைகள்.*

*[மீனாட்சி குழந்தைகளை அணைத்தபடி அழுது கொண்டு நிற்கிறாள். பாண்டித்துரைத் தேவரும் மாசிலாமணியும் ஆறுதல் சொல்லுகிறார்கள்.]*

**பாண்டி :** *கவலைப்படாதீர்கள் அம்மா. சிதம்பரம் பிள்ளைக்கு மக்கள் ஆதரவு எவ்வளவு தூரம் இருக்கிற தென்பதை சர்க்கார் உணர்ந்துவிட்டது. அவர் சீக்கிரம் விடுதலை அடைவார்.*

உலக : படுபாவி, விஞ்ச்துரை சிதம்பரத்தை ஜாமீனில் விட மறுத்ததையும், பயங்கரமான செக்ஷனைப் போட்டு வழக்குத் தொடுத்திருப்பதையும் நினைத்தால்தான் பயமாக இருக்கிறது.

மாசிலா : அண்ணுச்சியையும், சுப்பிரமணிய சிவத்தையும் எப்படியாவது ஜாமீனில் கொண்டு வரணும் என்று சாது கணபதி பந்துலுவும், சடகோபாச்சாரி அவர்களும் சென்னைவரைக்கும் போய்ப் பார்த்தார்கள்; முடியவில்லை.

உலக : வழக்கை செஷன்ஸுக்குக் கமிட் செய்திருக்கிறதைப் பார்த்தால், ஜட்ஜ்மெண்ட் நமக்குச் சாதகமா இருக்குமென்று நம்ப முடியவில்லை.

மாசிலா : இரண்டு பேரையும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கொண்டுவர போலீஸார் பட்டபாடு கொஞ்சமல்ல.

உலக : அப்படியா ?

பாண்டி : மறுபடியும் கலகம் ஏதாவது நடந்ததா ?

மாசிலா : இல்லை. கலகத்தை எதிர்பார்த்துத்தான் எச்சரிக்கையாகவே கொண்டுவந்தாங்க. வ. உ. சி. யையும், சிவத்தையும் ரெட்டைக் குதிரை பூட்டிய சாரட்டிலே கொண்டு வரும்போது, வழி நெடுக மக்கள் நின்று வணக்கம் செலுத்தி வரவேற்ற காட்சியை வர்ணிக்க முடியாது. பக்கத்துக்குப் பன்னிரெண்டு பேர் ரிஸர்வ் போலீஸ்காரர்கள், ஆறு சப் இன்ஸ்பெக்டர்கள், முன்னுலே டிப்டி, அதற்கு முன்னுலே பீரங்கி வண்டி, அந்தக் காட்சியைத் திருநெல்வேலி என்றும் மறக்கவே முடியாது.

உலக : என்னமோ, என் பிள்ளை நல்ல காரியத்துக்குத் தன்னை அர்ப்பணம் செய்துகொண்டு விட்டான். இறைவன்தான் துணை செய்யவேண்டும்.

பாண்டி : (மீனுட்சி அழுவதைக்கண்டு) நீங்கள் கலங்காதீர்கள் அம்மா ! நாங்களெல்லாம் இருக்கிருேம், விட்டுவிடமாட்டோம்.

மீனுட்சி : ஜாமீனில் விடவே மறுத்துவிட்டார்களே, அவர்களுக்குத் தண்டனை கிடைத்துவிட்டால் நான் என்ன செய்வேன் ?

மாசிலா : வருத்தப்படாதீங்க அண்ணி! எல்லாம் நன்மையாகவே முடியும். (உலகநாத பிள்ளையிடம்) ஐயா, நாங்கள் வக்கீல் வீடுவரை போய் வருகிருேம்......

[காட்சி முடிவு]

## காட்சி : 31

இடம் : நீதி மன்றம்.

உறுப்பினர்கள் : சிவா, வ. உ. சி., ரிச்மெண்ட், சடகோபாச்சாரி, நீதிபதி பின்ஹே, பாரதி, பாண்டித்துரை, குமாஸ்தா, இன்ஸ்பெக்டர், கலெக்டர், ஆஷ், ஜூரிகள், போலீசார், டபேதார் முதலியோர்.

[நீதிபதி பின்ஹே ஆசனத்தில் அமர்ந்திருக்கிருர். குற்றவாளிக்கூண்டில் வ. உ. சி., சிவா நிற்க, எல்லோரும் அவரவரிடத்தில் அமர்ந்திருக்கிருர்கள். நீதி மன்றம் ஆரம்பிக்கிறது.]

குமாஸ்தா : சுப்பிரமணிய பாரதி...

டபேதார் : சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய பாரதி!

[பாரதி வந்து சாட்சிக் கூண்டில் நிற்கிருர். உள்ளே மக்கள் கூக்குரல் ஒலிக்கிறது.]

பல குரல்கள் : தலைவர்களை விடுதலை செய்...

ஒரு குரல் : வ. உ. சிதம்பரம்பிள்ளை...

பலர் : வாழ்க !

குரல் : சுப்பிரமணிய சிவா...

பலர் : வாழ்க !

குரல் : வந்தேமாதரம்...

பலர் : வந்தேமாதரம் !

குரல் : பிரிட்டிஷ் ஆட்சி...

பலர் : ஒழிக !

பின்ஹே : பொது ஜனங்கள் கோர்ட் நடவடிக்கைகளை குந்தகப்படுத்துகிருர்கள். கோர்ட்டுக் கட்டிடத்தி லிருந்து ஐம்பது கஜ தூரத்திற்கு வெளியே அவர்களை அப்புறப்படுத்த உத்திரவிடுகிறேன்.

[உத்தரவிட்டதும், இன்ஸ்பெக்டர் வெளியே போகிருர். போலீஸார் அப்புறப்படுத்தும் குரலும், மக்கள் ஒலியும், ஒலித்து அடங்கிய வுடன், சடகோபாச்சாரி விசாரணையைத் தொடங்குகிருர்.]

குமாஸ்தா : சத்தியமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லுங்கள்.

பாரதி : சத்தியமாகவே சொல்வேன்.

சடகோ : உங்கள் பெயர் ?

பாரதி : சுப்பிரமணிய பாரதி...

சடகோ : தொழில் ?

பாரதி : நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்.

சடகோ : வ. உ. சிதம்பரம் பிள்ளையை உமக்குத் தெரியுமா ?

பாரதி : பிள்ளைவாளைத் தெரியாதவர்கள் யார் ? நன்ருகத் தெரியும். நாங்கள் இருவரும் நெருங்கிப் பழகுபவர்கள்.

சடகோ : தூத்துக்குடியில் உள்ள அவர் வீட்டுக்கு நீர் அடிக்கடி போய் வருவதுண்டா ?

பாரதி : (சிரித்து) புலவன், புரவலன் வீட்டுக்குப் போவான், வருவான். பாரதியும் தூத்துக்குடி

போகும்போதெல்லாம் வ. உ. சி. இல்லம் போகாமல் இருக்கமாட்டான்.

சடகோ : நீர், சென்ற மார்ச் மாதம் ஒன்பதாம் தேதி சிதம்பரம் பிள்ளை வீட்டுக்குப் போயிருந்தீரா ?

பாரதி : ஆமாம்...

சடகோ : அன்று சிதம்பரம் பிள்ளையும், சிவமும் விபின சந்திர பாலர் விடுதலை விழா நடத்த ஏற்பாடு செய்து வந்ததை நீர் அறிவீரா ?

பாரதி : அதென்ன ஓய் ! அப்படிக் கேட்கிறீர் ? நாட்டுப் பணியே நம் பணி என்றிருக்கும் நானு அறியாமல் இருப்பேன் ; நன்ருக அறிவேன் !

சடகோ : அப்பொழுது போலீஸார் அதற்குத் தடை உத்தரவு கொண்டு வந்ததாகக் கூறுகிருர்கள். உண்மையா ?

பாரதி : சுத்தப் பொய், சுத்தப் பொய் ! அதற்குப் பெயர் தடையுத்தரவா ? வெறும் கெஞ்சல் கடிதம் என்று சொல்லுங்காணும்.......

பின்ஹே : ஆர்டர், ஆர்டர்...

பாரதி : பிள்ளைவாள் தலை கொடுத்த தாணுபதி வம்சத்தைச் சேர்ந்தவராயிற்றே, அவருக்குத் தடை விதிக்க யாருக்குத் தைரியம் வரும். கூட்டம் நடத்தி எங்களுக்குத் தொந்தரவு தரவேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

[சடகோபாச்சாரி உட்கார ரிச்மென்ட் எழுந்து]

ரிச்மென்ட் : நீர் 'சுதேசமித்திரன்' துணை ஆசிரியர் பதவியிலிருந்து விலக்கப்பட்டீரா ?

பாரதி : என்னை விலக்க யாருக்குமே துணிவு கிடையாதுங் காணும் ; நானே விலகிவிட்டேன்.

ரிச்மென்ட் : பிரிட்டிஷ் அரசாங்கத்தை நிந்தனை செய்து கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதி வந்ததற்காக உம்மை விலக்கிஞர்கள் என்று நான் சொல்லுகிறேன்.

பாரதி : சொல்லிக்கொள்ளுமே.

ரிச் : மிஸ்டர் பாரதியார், நீர் என் கேள்விகளுக்கு உண்டு, இல்லை என்று பதில் சொல்லவேண்டும் ?

பாரதி : இல்லை...நானும் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பவன்தான் ! ஆனால், அந்தக் காரணத்திற்காக 'சுதேசமித்திரன்' காரியாலயத்திலிருந்து நான் விலக்கப்பட்டதாக, நீர் கூறுவது சுத்தப் பொய்.

ரிச் : நீர் தற்சமயம் 'இந்தியா' என்ற பத்திரிகையை நடத்தி வருகிறீர் அல்லவா ?

பாரதி : ஆம் !

ரிச் : அதில் தூத்துக்குடி நேஷனல் ஸ்டீம் நாவிகேஷன் கப்பல் ஓட்டியதை பிரமாதப்படுத்தி விசேஷ அனுபந்தம் வெளியிட்டீர் அல்லவா ?

பாரதி : ஆஹா ! வந்தே மாதரம் என்ற மந்திரச் சொல் பொறித்த கொடியுடன் கப்பல் செல்லுவது போல, முகப்பில் கார்ட்டூன் படம்கூட வெளியிட்டிருந்தேனே, பார்த்திருப்பீர்களே அதை ?...

வ. உ. சி. : கனம் கோர்ட்டார் அவர்களே, சாட்சியை விசாரணை செய்யும் முறையை நான் ஆட்சேபிக்கிறேன். வழக்குக்குச் சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்கிறார், பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மெண்ட்.

பின்ஹே : மிஸ்டர் ரிச்மென்ட் ! அவசியமில்லாத கேள்விகளைக் கேட்காதீர்.

ரிச் : எஸ் யுவர் ஹானர் ! விபினசந்திர பாலர் விழாவைக் கொண்டாடப் போலீஸ் தடை விதிக்கவில்லை என்கிறீரா ?

பாரதி : ஆம்...!

ரிச் : அப்படியானால், அன்று வி. ஓ. சிதம்பரம் பிள்ளையிடம் போலீஸார் கொடுத்த கடிதம் ?

பாரதி : அது உத்தரவல்ல, வெறும் வேண்டுகோள்.

*[ரிச்மென்ட் உட்காருகிறார், வ. உ. சி, பாரதியிடம்.]*

வ. உ. சி. : வந்தேமாதரம் என்ற பாடலை, வங்காளியி லிருந்து நீங்கள் மொழி பெயர்த்திருக்கிறீர்கள் அல்லவா ?

பாரதி : ஆமாம் !

வ. உ. சி. : அந்தப் பாடல் சட்ட விரோதமானதென்று இதுவரை தடுக்கப் பட்டுள்ளதா ?

பாரதி : இல்லை...

வ. உ. சி. : சரி...

[பாரதி போகிருர்.]

பின்ஹோ : நெக்ஸ்ட்.

குமாஸ்தா : பாண்டித்துரைத் தேவர்.

டபேதார் : பாண்டித்துரைத் தேவர், பாண்டித்துரைத் தேவர், பாண்டித்துரைத் தேவர்.

[பாண்டித்துரை வந்து, கூண்டில் நிற்கிருர்.]

குமாஸ்தா : சத்தியமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லுங்கள்.

பாண்டி : சத்தியமாகச் சொல்லுகிறேன்.

சடகோ : தங்கள் பெயர் ?

பாண்டி : பாண்டித்துரைத் தேவர்.

சடகோ : வ. உ. சிதம்பரம் பிள்ளையை அறிவீர்களா ?

பாண்டி : நன்ருக அறிவேன், என் நண்பர் அவர்.

சடகோ : தாங்கள் இருவரும் சேர்ந்து சுதேசிக் கப்பல் கம்பெனியை அமைத்தீர்களா ?

பாண்டி : ஆம் ! கம்பெனிக்கு நான் தலைவராகவும், அவர் செயலாளராகவும் இருந்துதான் அமைத்தோம்.

சடகோ : இப்பொழுதும் வ. உ. சிதம்பரம் பிள்ளை உங்கள் கம்பெனியில் பதவி வகிக்கிருரா ?

பாண்டி : இல்லை ; ராஜினுமா செய்துவிட்டார். ஆனுலும் அவரது பங்குகள் இருந்து வருகின்றன.

சட்கோ : சரி, சுதேசிக் கப்பல் கம்பெனியை நீங்கள் எந்த நோக்கத்துடன், எந்தச் சட்டப்படி அமைத்தீர்கள் என்று சொல்ல முடியுமா ?

பாண்டி : சுதேசியம் வளரவும், வாணிபம் செழிக்கவும் எண்ணி, இந்தியக் கம்பெனிகளின் சட்டப்படியே அமைத்தோம்.

[சடகோபாச்சாரி அமர, ரிச்மெண்ட் எழுந்து.]

ரிச் : சுதேசிக் கப்பல் கம்பெனிக்குச் சட்ட ஆலோசகர்கள் உண்டா ?

பாண்டி : உண்டு. சேலம் திரு. விஜயராகவாச்சாரி அவர்களும், திரு. எம். கிருஷ்ணன் நாயர் அவர்களும் இருந்து வருகிருர்கள்.

ரிச் : பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்குப் போட்டியாகவும், அவர்கள் வாணிபம் செழித்து வருவது கண்டு பொருமைப்பட்டும், நீங்கள் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்ததாக நான் கூறுகிறேன்.

பாண்டி : இல்லே, நாங்கள் மானமே பெரிதென மதிப்பவர்கள். உள்ளும், புறமும் வஞ்சகம் கலவாமல் எதையும் துணிந்து செயலாற்றும் திறமை படைத்தவர்கள். பிறரைப் பற்றிப் பொருமைப் பட வேண்டிய நிலைமை எங்களுக்கில்லே.

ரிச் : நீர் பிரிட்டிஷ் சர்க்காரின் மதிப்பிற்குரிய பாலவநத்தம் ஜமீன்தார் அல்லவா ?

பாண்டி : இருக்கலாம்...

ரிச் : மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை சர்க்காருக்கு விரோதமாக செல்வதைக் காரணமாக வைத்துத்தான் காரியதரிசி பதவியிலிருந்து அவரை நீக்கினீர்கள். நான் சொல்வது சரிதானே ?

பாண்டி : இல்லே, தவருன கேள்வி. எங்கள் நிர்வாகக் குழுவுக்கு வ. உ. சி. யிடம் உயர்ந்த மதிப்புண்டு. அவர்கள் தமிழ் நாட்டின் பெரும் அரசியல் தலைவர்,

முழுநேர அரசியல் தொண்டாற்றும் காரணமாக அவராகவே ராஜினுமா செய்துவிட்டார்.

[ரிச்மென்ட் உட்கார வ. உ. சி. தேவரிடம்.]

வ. உ. சி : கப்பலோட்டும் தொழில் இந்தியருக்குப் புதியதா ?

பாண்டி : இல்லே, ஆயிரமாயிரம் ஆண்டுகளாகவே நடந்து வந்திருக்கிறது. தமிழர்கள் கப்பல் தொழில் நடத்தியதற்கு தமிழ் இலக்கியங்களில் எத்தனேயோ சான்றுகள் இருக்கின்றனவே.

வ. உ. சி. : தமிழ் இலக்கியங்களில் உமக்கு ஈடுபாடு உண்டு என்பதற்குச் சான்று ?

பாண்டி : மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலேவராக இருந்து வருகிறேன் நான். நான்காவது தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவனே நான்தான். தமிழ் இலக்கியம் வளர்ந்து, தமிழ் மொழி உயரவேண்டும் என்பதற்காகவே இத்திருப்பணியைச் செய்தேன். ரோமாபுரி, எகிப்து, சீனு போன்ற நாடுகளி லெல்லாம் தமிழர்கள் கப்பல் போக்கு வரத்து நடத்திய வரலாற்றை ஆங்கிலேயர்களும்கூட எழுதி யிருக்கிறுர்களே.

வ. உ. சி. : மிக்க நன்றி...

[பாண்டித்துரை போகிறுர்.]

பின்ஹே : மிஸ்டர் வி. ஒ. சிதம்பரம் பிள்ளே, இனி உங்கள் மீதும், மிஸ்டர் சுப்பிரமணிய சிவம் மீதும் சர்க்கார் தரப்பில் சாட்டப்பட்டிருக்கும் குற்றங் களுக்கு நீங்கள் வாக்குமூலம் தரலாம்.

வ. உ. சி. : கனம் நீதிபதி அவர்களே ! எங்கள் மீது பிரிட்டிஷ் ஆட்சி தொடுத்துள்ள வழக்கு 123 ஏ பிரிவின்படி நாங்கள் இருவரும் அபாயகரமான மனி தர்கள் என்பது. 124 ஏ பிரிவின்படி சுப்பிரமணிய சிவாவுக்கு, நான் உணவும், இடமும் அளித்தது மூன்ருவது குற்றம். இல்லேயா ?

பின்ஹே : (தலையசைத்து) எஸ்...!

வ. உ. சி. : பிரிட்டிஷ் ஆட்சி இந்தியர்களாகிய எங்களுக்கு ஜாதி, மதம், இனம் ஆகிய பண்பாடுகளைக் காத்துக்கொள்ளப் பரிபூரண உரிமை வழங்கியிருக்கிறது. இந்த இன உரிமை அடிப்படையின்படி பார்த்தால், நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பது சட்டப்படியும், நீதியின் படியும் உறுதிப்படுகிறது. மேலும் நான் தொழிலாளர் தலைவனுக ஆற்றிய தொண்டு முதலாக, இன்றைய நாள்வரை செய்து வந்த பணிகளையெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சி குற்றங்களாகவே கருதி வந்திருக்கிறது. ஆம்! எதைக் குற்றமென்று அரசினர் எங்கள்மீது வழக்குத் தொடுத்துள்ளார்களோ அதுதான் எங்கள் உயிர் போன்ற கொள்கை.

நான் இறுதியாகச் சொல்ல விரும்புவது ஒன்று தான். நாங்கள் குற்றவாளிகள் அல்ல, இதை பிரிட்டிஷ் ஆட்சி மிகத் தெளிவாக உணரவேண்டும்.

பின்ஹே : மிஸ்டர் சுப்பிரமணிய சிவம்...நீங்கள் வாக்கு மூலம் தரலாம்.

சிவா : கனம் கோர்ட்டார் அவர்களே! விடுதலை ஆர்வம் கொண்ட இந்தியன் என்ற முறையில் நான் பிரிட்டிஷ் ஆட்சியை அடியோடு வெறுக்கிறேன். பொழுதெல்லாம் எங்கள் செல்வங்களைச் சுரண்டிச் செல்லும் கொடுமையை நாங்கள் எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? எங்கள் திருக்குறளிலே, "வேலொடு நின்ருன் இடு என்றதுபோலும், கோலொடு நின்ருன் இரவு" என்ற ஒரு குறள் உண்டு. அதாவது வழிப்பறி செய்யும் கள்வர்கள் கையில் வேலாயுதத்தை வைத்துக்கொண்டு, நடந்து செல்வோரை, 'உன் கையிலுள்ளதைக் கொடு! இல்லையேல் குத்திக் கொன்று விடுவேன்' என்று பயமுறுத்திப் பணம் பறிப்பது போல், இந்தக் கொடுங்கோல் ஆட்சியானது மக்களைப் பயமுறுத்தி வரிப்பணத்தைக் கொள்ளையடிக்கிறது என்பது

இந்தக் குறளின் பொருள். இதை எதிர்த்த குற்ற வாளி நான் என்ருல் அதற்காக மிகமிகப் பெருமைப் படுகிறேன். மற்றப்படி சட்டப்படி எங்கள் கட்சியி லுள்ள நேர்மையையும், சத்தியத்தையும், தர்மத் தையும், பிள்ளையவர்கள் விளக்கமாகச் சொல்லி விட்டார்கள். நான் தனியே எதையும் கூற வேண்டிய அவசியம் இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை.

பின்ஹே : *(சடகோபாச்சாரியைப் பார்த்து)* சரி, இனி உங்கள் வாதத்தைத் தொடங்கலாம்.

சடகோ : யுவர் ஹானர். ஜென்டில் மென் ஆப் தி ஜூரி. இந்த வழக்கில் இரு தரப்பு சாட்சியங்களையும் கேட் டீர்கள். எதிரிகளாகிய வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீது சர்க்காரால் சாட்டப் பெற்ற குற்றங்கள் அனைத்தும், நியாய மற்றவை என்று நன்ருக விளங்குகிறது. பிரிட்டிஷார் இந்தியர்களுக்கு வழங்கியுள்ள விசேஷ உரிமைகளை ஆராய்ந்து பார்த்தால் இது நன்ருக விளங்கும். தொழில் போட்டிகளும், சில தவருன எண்ணங் களுமே எதிரிகளைக் குற்றவாளிகள் என்று சர்க்கார் கருத இடமளித்துள்ளது. ஆகவே கனம் நீதிபதி அவர்கள் நன்கு சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்க வேண்டும். எதிரிகள் இருவரும் உயர்ந்த குடும் பத்தில் பிறந்தவர்கள். படித்துப் பட்டம் பெற்ற சட்ட நிபுணர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. நேர்மையும் ஒழுக்கமும் உடைய சிறந்த தியாக சீலர் சுப்பிரமணிய சிவா. இவர்களை விடுதலை செய்வதன் மூலம் கருணையும், நீதியும், தர்மமும் நிலைக்குமாறு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

*[சடகோபாச்சாரி அமர, ரிச்மென்ட் எழுந்து ]*

ரிச் : யுவர் ஹானர், ஜென்டில் மென் ஆப் தி ஜூரி. எதிர்தரப்பில் நியாயம் இருப்பதாக என் நண்பர் மிகையாக எடுத்துரைத்தார். முதல் எதிரி, வி. ஓ. சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணியசிவமும் அளித்த

பணிவற்ற வாக்குமூலத்தின் உட்கருத்தைக் கனம் நீதிபதி அவர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். சர்க்காரின் அன்றாட நிர்வாகங்களில் எதிரிகள் கொடுத்து வந்த தொல்லைகள் வர்ணிக்க முடியாது. அப்படியில்லையென்றால் போலீஸ் அதிகாரிகளும், ஜில்லா கலெக்டரும் இவர்களைக் கைது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்குமா?

உதாரணமாக இந்தக் கோர்ட் நடவடிக்கைகளைத் தடைப்படுத்தப் பொது ஜனங்கள் துணிந்ததற்குக் காரணமே எதிரிகள்தான். ஆகவே எதிரிகள் இருவரும் பச்சை ராஜத்துரோகிகள் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஆகவே கனம் நீதிபதி அவர்கள் எதிரிகளுக்குத் தக்க தண்டனை வழங்கி, நீதியைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*[ரிச்மெண்ட் உட்காருகிறுர்.]*

**பின்ஹே :** எஸ்...ஜுலை மாதம், ஏழாந்தேதி யன்று ஜட்ஜ்மெண்ட் சொல்லப்படும்.

*[பின்ஹே இடத்தைவிட்டு எழுந்திருக்கிறுர். இருள் சூழ்கிறது. உள்ளே...''1908-ம் ஆண்டு ஜுலை மாதம், 7-ம் தேதி'' என்ற ஒலிக்குப்பின், ஒளி தோன்றுகிறது. மீண்டும் நீதிமன்றம் அதே நிலையில் துவங்குகிறது. நீதிபதி பின்ஹே தீர்ப்பைப் படிக்கிறுர்.]*

**டபேதார் :** சைலன்ஸ்... சைலன்ஸ்.

**பின்ஹே :** முதல் எதிரி வ. உ. சிதம்பரம்பிள்ளை கைத்தொழில் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொண்டு சுதந்திரம் பெறுவதற்கான மார்க்கங்களை மக்களுக்குப் போதித்திருக்கிறுர். தூத்துக்குடி வேலை நிறுத்தப் போராட்டத்தின் முழுப் பொறுப்பும் இவரையே சாரும்.

மேலும் இந்திய மக்கள் அரசியல் விஷயமாகப் பேசச் சட்டரீதியான சந்தர்ப்பமே இல்லை. ஏன்? பிரிட்டிஷாருக்கு இருக்கும் வாக்குரிமை இந்தியர்

களுக்குக் கிடையாது. சர்க்கார் ஒரு சட்டத்தை இயற்றினால் அதை மாற்றவோ, திருத்தவோ நேரடி நடவடிக்கைகளில் இறங்கவோ சட்டம் அனுமதிக்க வில்லை. வேண்டுமானால் இந்தியர்கள் தனியாகக் கூடி யோசித்து சர்க்காருக்கு மகஜர் அனுப்பலாம். சட்டத்திலுள்ள இந்தச் சிறு உரிமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வ. உ. சிதம் பரம் பிள்ளையும், சுப்ரமணிய சிவமும், பிரிட்டிஷ் ஆட்சியாளரை எதிர்த்திருக்கின்றனர். இதன் மூலம் 123-ஏ, 124-ஏ, 153-ஏ பிரிவுகளின்படி இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடாதென்றும், வெள்ளைக்காரர்களைப் பயமுறுத்தியும், பேசியும் காரியங்கள் செய்தும் அபாயகரமான குற்றங்களைச் செய்திருக்கிறார்கள்.

ஆகவே, இதிலிருந்து இந்திய-ஆங்கிலேயஜாதிப் பகையை எதிரிகள் வளர்த்துவிட்டார்கள் என்பதை மறைப்பதற்கில்லை. வ. உ. சிதம்பரம் பிள்ளை பெரிய ராஜத் துரோகி. அவரது எலும்புக் கூடுகூட ராஜ விஸ்வாஸத்திற்கு விரோதமானது.

இரண்டாம் எதிரி சுப்ரமணிய சிவம் முதல் எதிரியின் கையில் அகப்பட்ட ஒரு கோல். திருநெல் வேலிக் குழப்பத்திற்கும் இவர்களே காரணம். ஆகவே எதிரிகளுக்குக் கீழ்க்கண்ட தண்டனையை விதிக்கிறேன் :

முதல் எதிரி வ. உ. சிதம்பரம் பிள்ளை அரச நிந்தனைக் குற்றம் புரிந்ததற்காக இருபது ஆண்டுகள் தீவாந்தர தண்டனையும், சிவாவுக்கு உடந்தையாக இருந்ததற்காக இருபது ஆண்டுகள் தீவாந்தர தண்டனையும் விதித்துள்ளேன். இரண்டு தண்டனை களையும் ஒன்றன்பின் ஒன்றாக நாற்பது ஆண்டுகள் அவர் தொடர்ந்து அனுபவிக்கவேண்டும்.

இரண்டாம் எதிரி சுப்ரமணிய சிவாவுக்கு ராஜ நிந்தனைக் குற்றம் புரிந்ததற்காகப் பத்து ஆண்டுகள் தீவாந்தர தண்டனை விதித்திருக்கிறேன்.

[இருள் சூழ்கிறது]

*["வேளாளன் சிறைபுகுந்தான்" என்ற பாட்டொலி யும்மக்களின் துயரக் குரலும் ஒலிக்கின்றன.]*

**பின்னணிப் பாடல்**

**வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்**
**மன்னனென மீண்டான் என்றே**
**கேளாத கதை விரைவிற் கேட்பாய் நீ**
**வருந்தலை என் கேண்மைக் கோவே!**

**தாளாண்மை சிறிது கொலோ யாம் புரிவேம்**
**நீ இறைக்குத் தவங்கள் ஆற்றி**
**வாளாண்மை நின் துணைவர் பெறுகெனவே**
**வாழ்த்துதி நீ வாழ்தி!! வாழ்தி!!**

**—பாரதி**

**[காட்சி முடிவு]**

## காட்சி : 32

**இடம்** :—*வீதி.*

**உறுப்பினர்கள்** :—*பெரியவர், இளைஞன், நீலகண்டன், கிருஷ்ணசாமி.*

*[பெரியவரும், இளைஞனும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.]*

பெரியவர் : *அநியாயம்! அக்ரமம்! தலைவர் சிதம்பரம் பிள்ளைக்கு நாற்பது வருஷ தீவாந்தர தண்டனையா? அட பாவிகளா, இதை யாரும் கேட்பாரே கிடையாதா?*

இளைஞன் : *தைரியமா இனிமே யாரும் முன்வரக் கூடா துங்கறதுக்காகத்தானே இந்தக் கொடுந் தண்டனை?*

பெரி : *நீதிபதி பின்ஹேறவைப் போல, இதுவரைக்கும் வேறே யாருமே இப்படி துணிஞ்சு தீர்ப்புக் குடுத்ததா வரலாறே கிடையாதப்பா!*

இளைஞன் : சட்டத்துலெ எவ்வளவு எடம் இருக்கோ அவ்வளவையும் வைச்சி தீட்டிட்டான் அயோக்கியப் பய! அந்த சுப்ரமணிய சிவத்துக்கும் பத்து வருஷ மாமே! பாவம்.

பெரி : அது சரி தம்பி! சிதம்பரம் பிள்ளை ஏதாவது அப்பீல் பண்ணுவாரு?

இளைஞன் : ஆஹா! செய்யாமையா? நம்ம வள்ளல் பாண்டித்துரைத் தேவரும் மாசிலாமணிப் பிள்ளையும் சென்னைக்குப் புறப்பட்டுட்டாங்களே!

பெரி : அப்படியா! ரொம்ப சந்தோஷம். அவுங்க கொழந்தை குட்டிங்க க்ஷேமத்துக்காகவாவது, ஆண்டவன் புண்ணியத்திலே ஜெயங் கெடைச்சே தீரணும்.

இளைஞன் : அதோ நம்ம கிருஷ்ணசாமியும், நீலகண்ட டனும் வாருங்க, எல்லா விஷயத்தையும் விவரமா தெரிஞ்சுக்குவோம்.

[நீலகண்டனும் கிருஷ்ணசாமியும் வருகிறார்கள்.]

பெரி : வாங்க தம்பீ வாங்க, ஏதாவது புதுசா சேதி உண்டுமா? சொல்லுங்க தம்பீ.

கிருஷ்ண : நீங்க பத்திரிகை பார்க்கலேயா?

பெரி : என்ன?

கிருஷ்ண : இங்கே வ. உ. சி., சிவா தண்டனை அடைஞ் சாங்க. இதே சமயத்திலே வடக்கே திலகருக்கும் ஆறுவருஷ தண்டனை! பத்தாயிர ரூபாய் அபராதம்.

பெரி : அடடே! காரணம்?

கிருஷ்ண : காரணமா இல்லாமெப் போயிடும். திலகர் நடத்தி வருகிற கேசரீ பத்திரிகையிலே சர்க்காரை எதிர்த்துக் கட்டுரை எழுதினாராம்.

பெரி : அநியாயம்! நாசமாப் போக, குருவும், சிஷ்யர் களும், ஒரே சமயத்திலே தண்டிக்கப்பட்டாங்க, பாத்தியா தம்பீ?

நீல : ஆனுலும் குருவைவிட சீடர் சிதம்பரம் பிள்ளைக்குத் தான் அதிகமாக தண்டனை விதிச்சுப் பழி வாங்கிட் டாங்க.

இளைஞன் : இதைப் பற்றி யாருமே கண்டிக்கலையா ?

கிருஷ்ண : கண்டிக்காமலா? வ. உ. சி.க்குக் கொடுத்த தண்டனையைக் கண்டித்து, கல்கத்தாவிலிருந்துவரும் 'ஸ்டேட்ஸ்மென்' என்ற வெள்ளையர் பத்திரிகையும், 'சென்னை ஸ்டாண்டர்ட்' என்ற சர்க்கார் பத்திரி கையும் தலையங்கமே எழுதியிருக்கு.

பெரி : அதானே கேட்டேன்! மனித உள்ளம் படைச்ச எவனுமே இதைக் கண்டிச்சாகணுமே.

கிருஷ்ண : நமது இந்தியப் பத்திரிகைகளான 'சுதேசமித் திரன், அமிர்த பஜார், வங்காளி' போன்ற பிரபல பத்திரிகைகள் பின்ஹேறவின் கொடுமையைக் கண்டிச்சு எழுதியிருக்கிறது.

பெரி : எப்படியோ, இதெல்லாம் இந்தியா மந்திரிக்குத் தெரியாமையா போகும்?

நீல : அவன்மட்டும் என்ன யோக்யனே? எல்லாம் அவனுக்கும் தெரிஞ்சுதான் நடக்குது. அதெல்லாம் ஒண்ணும் பிரயோஜனப் படாதுங்க. நமது சுப்ர மணிய பாரதியார் நடத்தி வந்த 'இந்தியா' பத்திரி கையும் தடை செய்துட்டாங்களே, தெரியுமோ?

பெரி : தெரியாதே! எப்போ?

நீல : அதை வெளியிட்டு வந்த சீனிவாச அய்யங் காரையும் ஆறுமாசம் தண்டிச்சிட்டாங்க.

பெரி : அட கஷ்டமே! சுப்ரமணிய பாரதிக்கும் தொல்லை குடுக்கருங்களா? இத்தனை பத்திரிகையும் எழுதா ததைப் பாரதி புதுசா என்ன எழுதிட்டாரு?

இளைஞன் : பாவம், இனிமே பாரதி என்னங்க செய்வாரு?

கிருஷ்ணன் : பாரதியா சும்மா இருப்பார். இந்தியா பத்திரிகைக் காரியாலயத்தை பிரஞ்ச் ஆட்சியிலுள்ள புதுச்சேரிக்கில்லா மாற்றிக் கொண்டு விட்டார்!

பெரி : பலே! ரொம்பத் துணிச்சலான விஷயம் தம்பீ!

[இரண்டு போலீஸார் வந்து.]

போலீஸ் 1 : ரோட்டுலே நின்னு பேசப்படாது தெரியுமில்லா? யாரய்யா நீங்களெல்லாம்? போங்கய்யா, போங்க.

[பெரியவரும், இளைஞனும் அசட்டுச் சிரிப்புடன் போகிறார்கள்]

போலீஸ் 2 : யோவ், உங்க ரெண்டுபேருக்கு மட்டும் தனியாச் சொல்லணுமா ? போங்க, போங்க.

[போலீஸார் போனவுடன்]

நீல : கிருஷ்ணசாமி, இன்றிரவு நாம் புதுச்சேரிக்குப் புறப்படவேண்டும். வாஞ்சி அங்கே நமக்காகக் காத்துக் கொண்டிருப்பான்.

[கிருஷ்ணசாமியின் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்லுகிறான்]

கிருஷ்ண : ஆமாம்! புறப்படுவோம்.

[இருவரும் போகிறார்கள்]

[காட்சி முடிவு]

## காட்சி: 33

இடம்:—சிறைச்சாலை.

உறுப்பினர்கள்:—வ. உ. சி., சிறைக் காவலர்கள்.

[வ. உ. சி. கைதிக் கோலத்துடன் செக்கிழுத்துக் கொண்டிருக்கிறார். சிறைக்காவலன் நின்று கொண்டிருக்கிறான். பின்னணிப் பாட்டு ஒலிக்கிறது.]

### பின்னணிப் பாடல்

அறம் வளர்க்கும் திருக்கையே! உரிமை காக்க
அயராது பாடுபடும் அருமைக் கையே!
செறிவான அறிவுரைகள் தீட்டும் கையே—நீ
செக்கிழுக்க நேர்ந்ததுவும் கொடுமை அந்தோ !

* "மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்துகிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ!
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ?
எண்ணமெல்லாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கு இது மடியத் திருவுளமோ?" (தண்ணீர்)

நீதியின் பாதை எங்கே ?
நேர்மையின் வெற்றி எங்கே ?
நீதிநெறி ஆட்சி எங்கே ?
செங்கோலும் எங்கே ?
எங்கே ? எங்கே ? எங்கே ?

—புத்தனேரி சுப்பிரமணியம்

---

* இக்குறியிட்டிருப்பது பாரதி வாக்கு.

## காட்சி : 34

**இடம்:**—அபிநவ பாரத சங்கம்

**உறுப்பினர்கள்:**—வாஞ்சி, கிருஷ்ணசாமி, நீலகண்டன்.

[வாஞ்சி ஆவேசத்தோடு உலவிக் கொண்டிருக்கிருன். கிருஷ்ணசாமி,நீலகண்டன் நிற்கின்றனர்]

**வாஞ்சி :** பாரதத் தலைவர்களையெல்லாம் பழிவாங்கும் படலம் துவங்கிவிட்டது. உயிரோடு வதைக்கப் படுகிருர்கள், எங்கள் உத்தமத் தலைவர்கள். ஆம்! நாற்பது ஆண்டுகள் தண்டனை, தலைவர் வ. உ. சிதம்பரனுருக்கு. செக்கிழுக்கிருராம் எங்கள் செந்தமிழ்ச் செம்மல் ! கேழ்வரகுக் கூழ் குடிக்கிருராம் சுப்ரமணிய சிவா! வடக்கே திலகர் பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டாராம். சித்ரவதைப் படுகிருர்கள் எங்கள் தேசத் தலைவர்கள்! கொடுமை, கொடுமை! கிருஷ்ணசாமி...!

**கிருஷ்ணா :** வாஞ்சி.........

**வாஞ்சி :** பாரீஸ் நகரத்தில் நமது தலைவர்களான வீர சவர்க்காரும், வ. வே. சு. அய்யரும் துவக்கிய இந்த அபிநவ பாரத பயங்கர இயக்கத்திற்கு நம் ரத்தத்தால் கையெழுத்திட்டிருக்கிருேம்.

**கிருஷ்ணா :** ஆம் ! அந்த சபதம் நிறைவேறும் சந்தர்ப்பம் வந்துவிட்டது.

**வாஞ்சி :** பழிக்குப்பழி ; ரத்தத்திற்கு ரத்தம்! என் தடந்தோட்கள் துடிக்கின்றன. நெல்லை மக்களைச் சுட்டு நீருக்கிய கொடுங்கோலன் ஆஷ் இனி உயிருடன் உலவக் கூடாது.

**நீல :** வாஞ்சி! கலெக்டர் ஆஷ், திருநெல்வேலியிலிருந்து கோடைக்கானலுக்கு ரயிலில் பிரயாணம் செய்யப் போகிருனும்!

**வாஞ்சி :** சபாஷ் ! நல்ல சந்தர்ப்பம், நீங்கள் இருவரும் இப்பொழுதே புறப்படுங்கள். ஆஷ் பிரயாணத்

திட்டத்தின் முழு விபரங்களையும் சேகரித்து வாருங்கள்.

நீல : உடனே தகவல் அனுப்புகிறோம்.

[ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு விடை பெற்றுச் செல்கிறார்கள். வாஞ்சி சிந்தனையுடன் உலவியவாறு]

வாஞ்சி : (தனக்குள்) பொன்னம்மா, உன்னை நினைக்காமல் என்னுல் இருக்க முடியவில்லை. இனி என்ன செய்யப் போகிறாய்? கர்ப்பிணியான உன்னைத் தனியே விட்டுச் செல்லுகிறேன். கடமை என்னை அழைக்கிறது. கொடியவனைச் சாய்க்கக் கொலைக் கருவி எடுத்துவிட்டேன் பொன்னு. இனி என்னை மறந்துவிடு! மன்னித்துவிடு பொன்னு! மன்னித்து விடு. எனக்குத் தேச சேவைதான் பெரிது. தர்ம சேவைதான் பெரிது. கடைசி முறையாக உன்னைப் பார்த்துவிடுகிறேன். ஒரு முறை உன்னைக் கண்டு விட்டால் என் உள்ளம் அமைதியடைந்து விடும் பொன்னு! அமைதியடைந்துவிடும்.........!
[போகிறான்]

[காட்சி முடிவு]

## காட்சி : 35

இடம் :—சிறைச்சாலை

உறுப்பினர்கள் :—சிறை அதிகாரி, மீனாட்சி, உலகநாதன், ஆறுமுகம்.

[சிறை அதிகாரி உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார். மீனாட்சி வந்து ஒரு மனுவைக் கொடுக்கிறாள்.]

அதிகாரி : யாரம்மா நீங்க? என்ன இது?

[மனுவைப் படிக்கிறார்]

சிதம்பரம் பிள்ளையைப் பார்க்க யாரையும் அனுமதிக்கக் கூடாதே அம்மா! இது துரை அவர்களின் கண்டிப்பான உத்தரவு!

மீனு : தயவு செய்யுங்கள் ஐயா! எப்படியாவது அவரைக் காணவேண்டும். தாங்க முடியாத மனவேதனையோடு வந்திருக்கிறேன். இந்த பச்சிளங் குழந்தைகள் தந்தையாரைக் காணத் தவிக்கிறார்கள்.

அதி : நான் என்னம்மா செய்வது? மனப்பூர்வமாக அனுதாபம் காட்டலாம். அதைத் தவிர எதையும் செய்ய எனக்கு அதிகாரம் கிடையாதே!

மீனு : என்ன? என் கணவரைப் பார்ப்பதற்கு எனக்கு அனுமதியில்லையா? கண்ணீரோடு வந்திருக்கும் ஒரு பெண்ணைப் பார்த்தா கதி கலங்கிவிட்டது இந்த அரசாங்கம்? ஐயா, கையிலே வாளும், கருத்திலே விஷமும் கொண்டு வரவில்லை நான். கண்ணியத்தோடு வந்திருக்கிறேன், கருணை காட்டுங்கள் ஐயா!

அதி: இது முடியாத காரியமம்மா, உங்கள் முயற்சி பயன் படாது. அதற்காக அரசாங்கத்தைக் குறை கூற வேண்டாம். நீங்கள் போகலாம்.

மீனு : ஐயா, கவலைதோய்ந்த முகத்தோடு வந்து நிற்கும் ஒரு பெண்ணுக்குக் கருணை காட்டுவது கூடவா குற்றம்? பாரதத்தை ஆளும் பரங்கியாட்சி இந்தப் பசும் குதலைகளின் பரிதாப முகங்களைக் கூடவா பார்க்க அஞ்சுகிறது?

அதி : எனக்கு அதிகாரமில்லையென்று சொல்லுகிறேன். ஏனம்மா அர்த்தமில்லாமல்.........

மீனு : என்ன? என் வேண்டுகோளா அர்த்தமற்றது? நெஞ்சிரக்கமற்ற வஞ்சக ஆட்சியின் வாரிசே, தமிழ் நாட்டுப் பெண்களைக் கோழைகள் என்று எண்ணிவிட வேண்டாம். கற்புக்கரசிகள் பிறந்த நாடு இது. கவனமிருக்கட்டும்! என் கணவரைக் காணும்வரையில் இந்தக் காராக்கிரகத்தை விட்டு

நகரவே மாட்டேன்; இங்கேயே உயிர் விடுவேன். துணிவிருந்தால் என்னையும், என் குழந்தைகளையும் அரசாங்கம் கைது செய்யட்டும். என் கணவரோடு கொண்டு சேர்க்கட்டும்.

*[மீனுட்சி குழந்தைகளைக் கட்டி அணைத்துக் கொண்டு அங்கேயே உட்கார்ந்து விடுகிருள். அதிகாரி ஒன்றும் செய்யத் தோன்ருது உள்ளே போகிருர்.]*

ஆறு : *(தாயிடம்) அம்மா, அப்பாவை இப்பக் கூட பார்க்க விட மாட்டாங்களாம்மா!*

உலக : அம்மா, எனக்கு அப்பா மேலேயே நெனைவா இருக்கம்மா.

*[மீனுட்சி குழந்தைகளை அணைத்துக்கொண்டு]*

மீனு : *கவலைப்படாதீர்கள் கண்மணிகாள்! அப்பாவைப் பார்த்துவிட்டே போகலாம்......*

*[அதிகாரி மீண்டும் உள்ளே வந்து]*

அதி : வாங்கம்மா. உங்கள் கணவரை நீங்கள் பார்க்கலாம். துரை அவர்கள் உத்தரவளித்து விட்டார்கள்.

மீனு : *(பரபரப்போடு) என் கணவரை நான் காண லாமா? அனுமதி கிடைத்துவிட்டதா? இது உண்மை தானு ஐயா?*

அதி : *ஆமம்மா! குழந்தைகளை அழைத்துக்கொண்டு என்னுடன் வாங்க......*

மீனு : *(ஆனந்தக் கண்ணீரோடு) கருணை பிறந்ததடா கண்மணிகளே! காணப்போகிருேம் உங்கள் அப்பாவை! வாங்க, வாங்க...*

*[குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு அதிகாரியைப் பின்பற்றிச் செல்கிருள்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி : 36

இடம் : சிறைச்சாலை உட்புறம்.

உறுப்பினர்கள் : வ. உ. சி., மீனாட்சி, குழந்தைகள், அதிகாரி, கைதிகள்.

[மீனாட்சி, குழந்தைகள், அதிகாரி வருகிறார்கள். மற்றொருபுறம் வ.உ சி கைதிகளுடன் கூடையில் மண் சுமந்து வருகிறார். மீனாட்சியைப் பார்த்த வாறு மனங் குமுறுகிறார்.]

வ. உ. சி. : மீனாட்சி !

மீனுட்சி : ஐயோ...சுவாமீ !...

வ. உ. சி. : மீனாட்சி !

[மீனாட்சி தேம்பி அழுகிறாள். குழந்தைகள் 'அப்பா என்று ஓடிக் கட்டிக்கொள்ளுதல். வ. உ. சி. குழந்தைகளை அணைத்துக்கொண்டு தூக்கி முத்த மிடுகிறார் ]

வ. உ. சி. : என்னருமைச் செல்வங்களே, எத்தனை காலமாகி விட்டதடா கண்மணிகளே உங்களைப் பிரிந்து ? (மீனாட்சியிடம்) மீனாட்சி, கலங்காதே ! எதற்காகக் கலங்க வேண்டும் ? நீயே இப்படி வருந்தினால், குழந்தைகள் மனம் தளர்ந்துவிட மாட்டார்களா ? அழாதே மீனாட்சி அழாதே !

மீனுட்சி : ஐயோ ! இந்தக் கோலத்திலா உங்களைக் காண வேண்டும்? என் இதயமெல்லாம் பற்றி எரிகிறதே சுவாமி.

வ. உ. சி. : மீனாட்சி, துன்பம் வரும்பொழுது அதைக் கண்டு சிரிக்கவேண்டும். இதுதான் நம் தமிழ் மறையின் அறிவுரை. மறந்துவிட்டாயா அதை ? வீர மரபு பெற்றெடுத்த வீராங்கனையின் கண்கள் நீர்த் துளிகளையா சிந்துவது?

மீனுட்சி : அரச வாழ்வு வாழ்ந்து வந்த உங்கள் அழகுத் திருமேனி இந்த இருட் சிறையில் அனாதைபோல்

கிடந்து துன்புறுவதைக் கண்டு என் உள்ளம் குமுறுகிறதே சுவாமீ! உங்களுக்கா இந்த கதி? வந்தவருக்கெல்லாம் இல்லையென்னுது வாரி வளித்த உங்களுக்கா இந்த நிலை? அகதிகளுக் கெல்லாம் அன்னச் சத்திரம்போல் வீட்டைத் திறந்து வைத்து உணவளித்த உங்களுக்கா இந்தத் துன்பம்? வந்த கலிஞர்களுக்கும், வறியவர்களுக்கும் வாரி வாரிப் பொருள் வழங்கிய இந்தக் கைகளால் செக்கிழுத்தீர்களாமே சுவாமீ!

வ. உ. சி. : மீனுட்சி! நான் செக்கிழுத்தேனென்று நினைக்கிருய்? இல்லை; இல்லை. சுதந்திர தேவி அமர்ந்திருக்கும் திருக்கோயிலை அல்லவா சுற்றிப் பவனி வந்தேன்......என் இன்பமே, எதையும் தாங்கும் இதயம் படைத்தவன் அல்லவா இறுதி லட்சியத்தை அடைவான்? அறுசுவையோடு அமு தூட்டினுய் உன் அன்புக் கரங்களால்; அது ஒரு காலம்!

மீனுட்சி : (கதறி அழுதவாறு) இன்று கேழ்வரகுக் கூழ் குடிக்கிறீர்களாமே சுவாமீ......! பஞ்சு மெத்தையில் படுத்துறங்கிய நீங்கள் படுக்கப் பாயுமின்றிக் கட்டாந் தரையில் கிடக்கிறீர்களாமே சுவாமீ!

வ. உ. சி. : ஆம்! சுரண்டிப் பிழைக்க வந்த சூதுக்காரர் களின் குகையிலே இன்று அல்லற்படுகிறேன். இது ஒரு காலம். மீனுட்சி, வீர சுதந்திரக் கொடி உயரத்தானே எனக்கு இந்த வெஞ்சிறை வாழ்வு?

மீனுட்சி : குழந்தைகளின் ஏக்கத்தைப் பாருங்கள். அப்பா, அப்பா என்று அலறித் துடிக்கும் அவர்களின் கள்ளங் கபடமற்ற முகங்களைப் பாருங்கள் சுவாமீ!

[அதிகாரி நெருங்கியவாறு]

அதிகாரி : வாங்கம்மா நேரமாகுது......

வ. உ. சி. : மன உறுதியோடு போய்வா மீனுட்சி. உயர் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது. விரைவில்

விடுதலை பெற்று வந்து விடுவேன். போய்வா. எல்லோரையும் கேட்டதாகச் சொல் !

மீனுட்சி : ஐயோ சுவாமீ ! உங்களைவிட்டு எப்படிப் பிரிவேன் ?

அதிகாரி : வாங்கம்மா, தொரை வந்தால் எங்கள் பேரில் கோபம் கொள்வார்.

வ. உ. சி. : போய் வாருங்களடா கண்மணிகளே! சீக்கிரமே நான் விடுதலை பெற்று வந்துவிடுவேன். போய் வா மீனுட்சி.

மீனுட்சி : சுவாமீ ! போய் வருகிறேன்.

[குழந்தைகள் 'அப்பா, அப்பா' என்று அழுகிருர்கள். அவர்களை அழைத்துக்கொண்டு வ. உ. சி. யைத் திரும்பிப் பார்த்தவாறு அதிகாரியைப் பின் தொடருகிருள் மீனுட்சி.]

[காட்சி முடிவு]

## காட்சி : 37

இடம் : பொன்னம்மாள் வீடு.

உறுப்பினர்கள் : பொன்னம்மாள், வாஞ்சி.

[பொன்னம்மாள் எதிரே, வாஞ்சி வருகிருன்.]

பொன்ன : அத்தான் !

வாஞ்சி : பொன்னம்மா !

பொன்ன : ஏது வழக்கத்திற்கு மாருக இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்கள் ?

வாஞ்சி : ஆம், கண்ணே ! உன்னிடம் விடை பெற்றுப் போகவே வந்தேன்.

பொன்ன : ஏன் ? எங்காவது நெடுந்தூரப் பயணமோ ?

வாஞ்சி : ஆம் ! நெடுந்தூரப் பயணந்தான். இன்றுதான் என் கடைசிப் பயணம்.

பொன்ன : (திடுக்கிட்டு) என்ன......?

வாஞ்சி : இதன் பிறகு நான் எங்குமே போகமாட்டேன். இதில் வெற்றி பெறுவேனானால் என் வேலையும் முடிந்துவிடும்.

பொன்ன : என்ன அத்தான் சொல்லுகிறீர்கள் ? இனி என்னை விட்டு எங்குமே போகமாட்டீர்களே ?

*[அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறான்]*

ஏன் அத்தான் சிரிக்கிறீர்கள் ?

வாஞ்சி : இங்கே காதல் மனைவி ; அங்கே கடமை வெறி ! இடையே தத்தளிக்கும் என் மன நிலையைப் பயித்தியக்காரன் நிலைக்கே ஒப்பிடலாம்.

*[பொன்னம்மாள் கள்ளங்கபடமற்ற சிரிப்புடன் நிற்கிறாள்]*

கண்ணே ! நம் அன்புச் சின்னத்தை மணி வயிற்றிலே சுமந்து அழகொழுக நிற்கும் வதனத்தைப் பார்க்கப் பார்க்க எத்தனையோ எண்ணங்கள் அலைமோதுகின்றன.

பொன்ன : ஏன் பேசமாட்டீர்கள் ? வசந்த காலம்! நிலாப் பொழுது ! இரவு நேரம்! எங்கிருந்தோ வீசும் குளிர்ந்த காற்று ஜில்லென்று உள்ளே வருகிறது! ஊரெல்லாம் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறது. விழித்திருக்கும் ஜீவன்கள் இரண்டு. ஒன்று நான், மற்றொன்று நீங்கள். அதனால்தானே ?

வாஞ்சி : (அவளை அணைத்து) பொன்னம்மா !

பொன்ன : அத்தான் !

*[வாஞ்சி இமை கொட்டாமல் அவள் முகத்தையே பார்த்து நிற்கிறான்]*

என்ன அத்தான் இது? மௌனச் சாமியாராக நிற்கிறீர்கள்? விழித்த கண் இமைக்காமல் என்னை ஏன் இப்படி விழுங்குவதுபோல் பார்க்கிறீர்கள்?

**வாஞ்சி :** உன்னைப் பார்க்கிறேன். பார்த்துக்கொண்டே இருக்கிறேன். பார்க்கப் பார்க்கத் திகட்டாத பொலிவுள்ள உன் முகத்தை ...பொன்னுருந்த மேனியை இன்றெல்லாம் கண் குளிரப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன். என் ஐம்புலன்களாலும் ரசித்து ரசித்துத் தீர்த்துவிடுகிறேன். என் விழித்த கண் இமைக்காமல் போகலாம்! ஆனால், பொன்னு! என் அன்பே! பரிபூரண ஆத்ம நிறைவாவது ஏற்படு மல்லவா?

**பொன்ன :** அத்தான், நீங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே?

**வாஞ்சி :** கண்ணே! நீ கள்ளங்கபடமறியாத பெண்.

**பொன்ன :** (வெட்கமாக) போங்கள் அத்தான்!

**வாஞ்சி :** பொன்னு! இரண்டு எரிமலைகள் ஒன்றை யொன்று எதிர்த்துப் போர் செய்துகொண்டிருக் கின்றன. இவற்றில் ஒன்றுதான் உன் அன்பு.

**பொன்ன :** மற்றொன்று......?

**வாஞ்சி :** பின்பு தெரிவிப்பேன்...இல்லை கண்ணே, பின்பு நீயே தெரிந்துகொள்வாய்.

**பொன்ன :** (சிரித்து) ஏதோ மறை பொருளாக அல்லவா, வேதாந்தியைப் போலப் பேசுகிறீர்கள்? ராமகிருஷ்ணர், விவேகானந்தர் என்ற நினைப்புப் போலிருக்கிறது.

**வாஞ்சி :** ஆம், கண்ணே! அவர்கள் மனத்தை வென்று விட்டார்கள். நான் மனத்தைக் கொன்றுவிட்டேன் பொன்னு, மனத்தைக் கொன்றுவிட்டேன்!

பொன்ன : *போங்கள் அத்தான். நாமும் காதலில் வென்றவர்கள்தானே ? சொல்லத் தெரியாத இந்த இன்பம் நம் வாழ்வில் என்றென்றும் நிலைபெற வேண்டும் என்பதுதான் நான் பராசக்தியைப் பிரார்த்திப்பதெல்லாம். (வாஞ்சி கண் கலங்குவதைப் பார்த்து) ஏன் அத்தான், உங்கள் கண்கள் கலங்குகின்றன ?*

*[வாஞ்சி சமாளித்து கண்களைத் துடைத்துக்கொள் கிறான்.]*

வாஞ்சி : *உன்னையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேனல்லவா? அதனால்தான். பொன்னு, நம் அன்புக்கு எவராலும் எல்லை நிர்ணயிக்கவே முடியாது. சொர்க்கம், சொர்க்கம் என்கிறார்களே, அது உண்மையாக இருக்குமானால், அங்குதான் நம் காதலும் அமரத்வம் அடையப் போகிறது. பொன்னம்மா, என் கண்ணல்ல; எங்கே நான் சொல்லுவது போல் செய்யவேண்டும் !*

பொன்ன : *செய்கிறேன். சொல்லுங்களத்தான்!*

வாஞ்சி : *கண்ணே, உன் மஞ்சள் பூசிய முகமும், மலரணிந்த கூந்தலும் இயற்கையாக வீசும் நறு மணமும், எனக்கு மங்களகரமான வழியைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. எங்கே...உன் எழிற் கரத்தால் என் நெற்றியில் வீரத் திலகமிட்டு வழியனுப்பு.*

பொன்ன : *போங்களத்தான் ! நல்ல பயித்தியம் நீங்கள் ?*

*[உள்ளே போய் ஒரு குங்குமச் செப்பு எடுத்து வந்து, வாஞ்சியின் நெற்றியில் பொட்டிடுகிறாள் ]*

வாஞ்சி : *ஆஹா ! இந்த ஆனந்தத்தை எப்படி வர்ணிப்பது கண்ணே !*

பொன்ன : *அத்தான் !*

வாஞ்சி : *போகிறேன்......*

பொன்ன : மீண்டும் எப்பொழுது வருவீர்கள் அத்தான் ?

வாஞ்சி : மீண்டும்......மீண்டும்?...போகிறேன் கண்ணே, போகிறேன்.

*[போகிருன்]*

பொன்ன : போய் வருகிறேன் என்று சொல்லுங்கள் அத்தான் !

[காட்சி முடிவு]

## காட்சி : 38

**இடம் :** மணியாச்சி ஜங்ஷன்.

**உறுப்பினர்கள் :** வாஞ்சி, ஆஷ்துரை, போலீஸ்.

*[மணியாச்சி ஜங்ஷனில் ரயில் நின்றுகொண்டிருக் கிறது. கலெக்டர் ஆஷ்துரை 'இந்து' பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிருர். வாஞ்சி, ஆஷ் துரையை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு, கக்கூஸுக்குள் சென்று தானும் வாய் வழியாகச் சுட்டுத் தற்கொலை செய்து கொள் கிருன். போலீஸார் வந்து பார்த்துவிட்டு ஓடுகிருர்கள்.]*

[காட்சி முடிவு]

## காட்சி : 39

**இடம் :** வீதி.

**உறுப்பினர்கள் :** இன்ஸ்பெக்டர், சார்ஜெண்ட், போலீஸார்.

*[பலருடைய கூக்குரல் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு போலீஸ் ஜவான் ஓடி வருகிருர். மற்ருெரு போலீஸ் எதிர்புறமாக வருகிருர்.]*

போலீஸ் 1 : ஆஷ் துரையைச் சுட்டுட்டாங்க ஸார் !

போலீஸ் 2 : எங்கே? சுட்டவன் யாரு? அவனைப் பிடிச்சுட்டாங்களா ?

போலீஸ் 1 : நம்ம மணியாச்சி ஜங்ஷன்லே ஸார். முதல் வகுப்புலே போன தொரையை, எவனே பாத்ருமிலெ ஒளிஞ்சிருந்து சுட்டிருக்கான் ஸார் !

போலீஸ் 2 : என்ன துணிச்சல், பயங்கரப் படுகொலை! பழிக்குப் பழி தீர்த்துட்டாங்க புரட்சிக்காரங்க! சுட்டவனைப் பிடிச்சாச்சா ?

போலீஸ் 1 : இல்லே சார் ! அவனும் ரிவால்வராலே தன் வாய் வழியாச் சுட்டுக்கிட்டான் ஸார், தலை சுக்கல் சுக்கலா நொறுங்கிப் போச்சு. ஆளு அடையாளமே தெரியலே.

போலீஸ் 2 : ஆ ! அப்படியா !

(இன்ஸ்பெக்டரும், சார்ஜெண்டும் வருகிருர்கள்)

இன்ஸ் : என்ன மேன் நின்னுகிட்டு இருக்கறே. உங்க ரெண்டு பேருக்கும் மணியாச்சி ஜங்ஷனிலே டூட்டி போட்டிருக்கு போங்க !

(போலீஸார் வணங்கிவிட்டுப் போகிருர்கள்)

சார்ஜெண்ட் : சுட்டவனை அடையாளம் கண்டுபிடிச்சீங்களா ஸார் ?

இன்ஸ் : யாரோ செங்கோட்டையைச் சேர்ந்தவனும். பெயர் வாஞ்சிநாதனும் ! அதுவும் இன்னும் உறுதிப் படலே......விசாரணையிலேதான் தெரியும். சரி. நீங்க ஸ்டேஷனுக்குப் போங்க. நான் இதோ வர்றேன்...

(சார்ஜெண்ட் ஒருபுறமாகவும், இன்ஸ்பெக்டர் ஒருபுறமாகவும் போகிருர்கள்.)

[காட்சி முடிவு]

## காட்சி : 40

இடம் : சிறைச்சாலை.

உறுப்பினர்கள் : வ. உ. சி., மாசிலாமணி, அதிகாரி.

[அதிகாரி உட்கார்ந்துகொண்டிருக்கிறார். மாசிலா மணி சிறைக் கம்பிகளுக்கு வெளியேயும் வ.உ.சி. உள்ளேயும், நின்றுகொண்டிருக்கின்றனர்.

மாசிலா : அண்ணாச்சி!

வ. உ. சி.: (கைகளைப் பிடித்துக்கொண்டு) மாசிலாமணி.

மாசிலா : நான் கனவிலும் கற்பனை செய்யாத துன்பக் காட்சியைக் காண்கிறேன். துடிக்கிறது உள்ளம்!

வ. உ. சி. : மனநோயை மாற்றிக்கொள் தம்பீ. ''சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை. சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை'' இதை மறந்து விட்டாயா ? இதனாலெல்லாம் சிதம்பரம் சோர்ந்து விடமாட்டான்.

'' என்மனமும், என்னுடலும், என்சுகமும், என் அறமும்
என்மனையும், என்மகவும், என்பொருளும்—என்வளமும்,
குன்றிடினும் யான்குன்றேன் கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து.''

மாசிலா : போதும் அண்ணாச்சி, போதும். பொன்னுடலை எல்லாம் புண்ணுடலாக்கிக்கொண்டு இந்தப் புழுதி யிலே அல்லற்படும் பொது வாழ்வு போதும் உங்க ளுக்கு...ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி. அதைச் சொல்லவே வந்தேன். நீங்கள் விரைவில் விடுதலை பெறுவீர்கள்.

வ. உ. சி. : உயர் நீதிமன்றத்தில் என் தண்டனையைக் குறைத்துத் தீர்ப்பாகியுள்ளதா ?

மாசிலா : ஹைகோர்ட், பிரீவி கவுன்சில் இரு நீதி மன்றங்களிலும் போராடி நாற்பது ஆண்டுகளை ஆறு ஆண்டுகளாகக் குறைப்பதற்குள் அரும்பாடு பட்டோம்.

வ. உ. சி. : அப்படியா ? நன்றி.

மாசிலா : அதோடு இன்னொரு விசேஷம் !

வ. உ. சி. : என்ன அது ?

மாசிலா : இந்தியா மந்திரி லார்டு மார்லி, கொடுமைக்காரர்களான கலெக்டர் விஞ்சையும், நீதிபதி பின்ஹேவையும் இந்த மாகாணத்தை விட்டே மாற்றிவிட்டார்.

வ. உ. சி. : மிக்க மகிழ்ச்சி. சேலம் விஜயராகவாச்சாரியார் எனக்கு எழுதிய கடிதத்தில், சுதேசிக் கப்பல் கம்பெனி உடைபட்டுவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தாரே ? உண்மைதானு ?

மாசிலா : உண்மைதான். நீங்கள் சிறைப்பட்டபின் கப்பல் கம்பெனி தீர்ந்துபோய்விட்டது.

வ. உ. சி. : என்ன செய்வது ? நாம் அதற்காகப் பாடுபட்டதெல்லாம் பலன் இல்லாமலே போய்விட்டது. மாசிலாமணி, ஆஷ் துரை கொலை செய்யப்பட்டாராமே ?

மாசிலா : ஆம் ! வாஞ்சி என்ற இளைஞர் ஆஷ் துரையை ரயிலில் சுட்டுவிட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டாராம். பாபம், கர்ப்பிணியான இளம் மனைவியை அனுதையாக விட்டு இறந்துவிட்டார் அந்த இளைஞர்.

வ. உ. சி. : தம்பீ ! அறஞ் செழிக்கும் பாரத நாட்டில் இத்தகைய பலாத்காரச் செயல்கள் நடைபெறுவதை நான் அடியோடு வெறுக்கிறேன். ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்வதால் அன்னிய ஆட்சி ஒழிந்து விடாது. கொடியவர்களாயினும் அவர்கள் உயிருக்கும் தீங்கு செய்யக் கூடாதென்பதே எனது கோட்பாடு. பாவம் ! உணர்ச்சி வசப்பட்ட அந்த

இளைஞரின் ஆத்மா சாந்தியடையட்டும். கர்ப்பிணியான அவருடைய மனைவிக்கு என்னுடைய ஆறுதலைத் தெரிவி. அவளுக்கு உதவி புரிய ஏதாவது ஏற்பாடு செய் தம்பீ!

மாசிலா : அண்ணாச்சி, நம் குடும்ப நிலை மிகவும் சீர்கெட்டு விட்டது: வழக்காடுவதற்குக் கைப்பொருள் அனைத்தையும் அண்ணியார் செலவிட்டுவிட்டார்கள்.

வ. உ. சி. : மீனாட்சிக்கு ஆறுதல் கூறு தம்பீ. பொருள் இன்றைக்குப் போகும், நாளைக்கு வரும். இதற்காகவா வருந்துவது? மாசிலாமணி, நமது சுப்பிரமணிய சிவா விடுதலையடைந்து விட்டாரா? எப்படியிருக்கிறார்?

மாசிலா : சில நாட்களுக்கு முன்புதான் விடுதலையடைந்தாராம். ஏதோ கொடிய வியாதியாம். எங்கிருக்கிறார் என்று தகவல் இல்லை.

வ. உ. சி. : மிக உயர்ந்த பண்புடையவர். தியாக உள்ளம் படைத்தவர். தமிழ்நாட்டின் தவப் புதல்வர்.

[சோகமாகப் பெருமூச்சு விடுகிறார்]

மாசிலா : நான் வருகிறேன் அண்ணாச்சி.

வ. உ. சி. : போய்வா. மீனாட்சிக்கும், குழந்தைகளுக்கும் ஆறுதல் கூறு. பாரதியாரைக் கண்டால் எனக்குக் கடிதம் எழுதுமாறு கூறு. இன்னொரு முக்கிய விஷயம். தம்பி பரலி சு. நெல்லையப்பன் நேற்று என்னைப் பார்க்க வந்திருந்தான். திருக்குறளுக்குப் புது உரை எழுதிக்கொண்டிருக்கிறேன். அதற்குப் பயன்படத்தக்க சில தமிழ் நூல்களை விரைவில் அனுப்பச் சொன்னேன். அதை மீண்டும் அவனுக்கு நினைவுபடுத்து மாசிலாமணி.

மாசிலா : ஆகட்டும் அண்ணாச்சி நான் வருகிறேன்.

வ. உ. சி. : போய் வா......

[காட்சி முடிவு]

## காட்சி : 41

இடம் : வீதி.

*['டேப்' அடித்தவண்ணம் ஒருவன் பாடிக்கொண்டு போகிறான்.]*

வரலாற்றுத் தொடர்புப் பாட்டு

சிறையை விட்டு வெளியே வந்தார் சிதம்பரனார்—எங்கள்
தென்னாட்டுத் திலகரான பெருமகனார்

மாசில் லாத தேசத் தொண்டை
மறந்திட வில்லை—புலவர்
வறுமையுந்தான் அவரை விட்டுப்
பிரிந்திட வில்லை!

சிதம்பரம் பிள்ளை—அவர்
தியாகத்தின் எல்லை.

சென்னையிலே தரும சங்க
நெசவுச் சாலையும்
தேசியப் பண்டக நற்
சாலையுங் கண்டார்;
அன்ன தான வள்ளல் என்ற
பெருமையுங் கொண்டார்—அவர்
அனைவருக்கும் பயன் கொடுக்கும்
கனிமர மானார்

சிதம்பரம் பிள்ளை—அவர்
தியாகத்தின் எல்லை.

காந்தி மகான் அஹிம்சையிலே
நம்பிக்கை யில்லை;—எனக்
காங்கிரசை நீங்கிடவே
கலங்கிட வில்லை!

சேர்ந்திட லானார்—அரசியல்
துறவி போலானார்!

அறிவும் அன்பும் பண்பும் சேர்ந்த
நிறைகுட மானுர்—அவர்
அழகுதமிழ்ப் புலமையதன்
உறைவிட மானுர்.

சிதம்பரம் பிள்ளை—அவர்
தியாகத்தின் எல்லை.

செழுந்தமிழில் புதிய நூல்கள்
தீட்டி மகிழ்ந்தார்
ஜேம்ஸ் ஆலன் நூல்களினைத்
தமிழிலே தந்தார்!
அருங்குறளின் மணக்குடவர்
உரையைப் போற்றினுர்—குறள்
அறத்துப் பாவின் விருத்தியுரை
அரங்கில் ஏற்றினுர்.

சிதம்பரம் பிள்ளை—அவர்
தியாகத்தின் எல்லை.

தலைவ ரென்ற ஆரவாரம்
சிறிதுமே இல்லை—ஒரு
தமிழ் முனிவர் போலிருந்தார்
சிதம்பரம் பிள்ளை!
சாந்த மான வாழ்க்கையிலே
நிம்மதி கொண்டார்—காலச்
சக்கரமும் வேகமாகச்
சுழன்றிடக் கண்டார்!

சிதம்பரம் பிள்ளை—அவர்
தியாகத்தின் எல்லை.

—புத்தனேரி சுப்பிரமணியம்

[காட்சி முடிவு]

## காட்சி : 42

இடம் : கடற்கரை.

உறுப்பினர்கள் : சிவா, வ. உ. சி.

[தொழுநோய் பிடித்த தோற்றத்துடன் "அம்மா தாயே" என்ற பாடலைப் பாடிக்கொண்டு சிவா தள்ளாடியவாறு வருகிறார்.]

சிவா :

அம்மா தாயே! அருள்புரிவாயே!

அல்லும் பகலும் அறுபது நாழியும்—இந்தக்
கொல்லும் வியாதி என்னைக் குத்திக் குடையுதே!

பிச்சைக் காரனெனப் பிறர் பல சொல்லவோ?—இச்
சொச்சை வார்த்தை நான் சுகமெனக் கொள்ளவோ!

குற்றமெது செய்தாலும் குணமுடையோய்—நீதான்
பெற்ற தாயல்லையோ பிழைபொறுக்க வேண்டாமோ?

நம்பினேன் நம்பினேன் நம்பினேன் நம்பினேன்
அம்பிகையே உனையே தான் அபயமென நம்பி
விட்டேன்! (அம்மா)

—சுப்பிரமணிய சிவா

[வ. உ. சி. எதிர்ப்புறமாக வந்து]

வ. உ. சி. : எங்கோ கேட்ட குரல்போல் இருக்கிறதே !

[சிவா பாட்டை நிறுத்திவிட்டு வ. உ. சி. யை உற்றுப் பார்க்கிறார்.]

வ. உ. சி. : ஏன் இப்படிப் பார்க்கின்றீர் ? உமக்கு என்ன வேண்டும் ?

சிவா : (உணர்ச்சியோடு) யார் ? சிதம்பரம்! அப்பா சிதம்பரம், வந்தாயா அப்பா ?

வ. உ. சி. : யார் நீங்கள் ?

சிவா : நான்தான் நண்பரே, தெரியவில்லையா என்னை ? உங்கள் நிழலாகத் திரிந்தவன், உங்கள் நெஞ்சிலே என்றும் குடியிருப்பவன், வாழ்வின் அந்தியக் காலத்

திலே சாவோடு போராடிக் கொண்டிருக்கும் நடைப் பிணம் நான். என்னைத் தெரியவில்லையா ?

வ. உ. சி. : (உணர்ச்சிப் பெருக்கோடு) சிவா! சிவா! சுப்ரமண்ய சிவா! என்னருமைச் சிவா! உங்களுக்கா இந்தக் கதி ?

[வ. உ. சி. அவரை அணைத்துக்கொள்ள நெருங்குகிறார்.]

சிவா : தொட வேண்டாம் நண்பரே. என்னைத் தொடவே வேண்டாம்!

வ. உ. சி. : ஐயோ, சிவா! உங்களுக்கா இந்தக் கதி ? இந்த நிலையிலா உங்களை நான் காணவேண்டும்?

சிவா : பிள்ளைவாள், பாசத்தோடு பழகிய பழைய நண்பர்கள் கூடக் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு மாறிப் போய்விட்டேன்! சிறையிலே நான் பட்ட சித்ரவதைகளை வாயால் வர்ணிக்க முடியாது. தூய உடலோடு சிறைபுகுந்த என்னை நோய்க்கெல்லாம் சிகரமான தொழுநோய் கொடுத்து வெளியேற்றினார்கள், பிள்ளைவாள், எனக்குத் தொழுநோய் கொடுத்து வெளியேற்றினார்கள்.

வ. உ. சி. : ஐயோ, சிவா! உத்தம நண்பரே!

[அணைத்துக்கொள்ளப் போகிறார்.]

சிவா : வேண்டாம், பிள்ளைவாள் வேண்டாம். உங்கள் தூய கரங்களால் தொழுநோய் பற்றி உளுத்துப் போன இந்த உடலைத் தொடவேண்டாம்.

வ. உ. சி. : ஐயோ! சிவா, ஆருயிர் நண்பரே! உடைத்து விட்டீர்களே என் உள்ளத்தை! சிதம்பரம் செய்நன்றி கொல்பவனா? நீர் வற்றிய குளத்திலிருந்து நீங்கிவிடும் பறவை இனமா? ஒருபோதுமில்லை சிவா, ஒரு போதுமில்லை! கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் போல ஒட்டி உறவாடும் உத்தமப் பரம்பரை நண்பரே, நான் உத்தமப் பரம்பரை! தியாகத் தீயில் புடமிட்டு எடுத்த, இந்தப் புனிதமான திரு

மேனியைப் பற்றியிருக்கும் தொழுநோய், சிதம்பரத்தையும் பற்றிக்கொள்ளட்டும் கவலையில்லை.

**சிவா :** *பிள்ளைவாள் !*

**வ. உ. சி. :** *சிவா !*

*[இருவரும் தழுவிக் கொள்ளுகிறார்கள்.]*

**சிவா :** *செக்கிழுத்த சிதம்பரச் செம்மலே, உணர்ச்சி என்னைப் பேச விடவில்லை. கடைசியாக உங்களைக் காண வேண்டுமென்று ஆசைப்பட்டேன். கண்டு கொண்டேன் !*

**வ. உ. சி. :** சிவா ! தியாகசீலரே, இப்போது தாங்கள் எங்கே இருக்கிறீர்கள் ?

**சிவா :** சேலம் ஜில்லா தர்மபுரி அருகிலுள்ள பாப்பாரப் பட்டியில் இருந்து வருகிறேன். அங்கு பாரதமாதாவுக்கு ஒரு கோயில் எழுப்பும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறேன்.

**வ. உ. சி. :** ஆஹா ! தொழுநோய் பற்றித் துன்புறும் இந்த நிலையிலுமா பாரதமாதாவுக்குத் தொண்டு ?

**சிவா :** நான் யாரை நொந்து கொள்வேன் பிள்ளைவாள், யாரை நொந்து கொள்வேன் ? என்னைப் பிறப்பித்தாளே, அந்த அம்பிகையை நினைத்துத் தான் உருகிக் கொண்டிருக்கிறேன்.

**வ. உ. சி. :** சிவா !...

**சிவா :** *பிள்ளைவாள்...!*

*[மீண்டும் தழுவிக் கொள்ளுகிறார்கள்.]*

**[காட்சி முடிவு]**

## காட்சி: 43

இடம் :—வீதி.

உறுப்பினர்கள் :—பெரியவர், இளைஞர்.

[ஒரு பெரியவரும், ஓர் இளைஞரும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.]

இளைஞர் : வணக்கம் பெரியவரே, ரொம்பக் கவலையோடு வாறேளே?

பெரிய : அதை ஏன் தம்பீ கேக்கறே? இந்த 1936-வது ஆண்டிலே நமக்கெல்லாம் ஒரு பெரிய துக்கத்தை உண்டாக்கிவிடுவார் போலிருக்கே, தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை!

இளைஞர் : இப்ப வ. உ. சி. வீட்டுக்குத்தான் போயிட்டு வாறேளா?

பெரி : ஆமா தம்பீ! அந்த உத்தமர் மரணப் படுக்கையிலே கெடக்கறதும், ஊரே திரண்டுபோய் அவரைப் பார்த்து வ்ரதும் பெரிய வேதனைக் காட்சியா இருக்கப்பா!

இளைஞர் : என்ன செய்யலாங்க? உங்களுக்குச் சமாச்சாரம் தெரியுமா?

பெரி : என்ன?

இளைஞர் : நேற்று காங்கிரஸ் மகாசபைத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத், நம்ம வ.உ. சி. வீட்டுக்கு வந்து வெகு நாழியா பேசிக்கிட்டு இருந்தாராமே?

பெரி : கேள்விப்பட்டேன் தம்பீ! வ. உ. சி. கண்டு வந்த கனவு நிறைவேறுமே, சாகப் போகிறாரேங்கிறதை நெனைக்கிற போது நமக்கு வேதனை தாங்கலே. காலமெல்லாம் 'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்று சொல்லி வந்த அவங்க உள்ளம் என்ன பாடுபடுமோ?

அவர் பட்ட கஷ்ட நஷ்டங்களை நேரிலே பார்த்த அனுபவத்துலே சொல்றேன் தம்பீ! என் உடம்பு புல்லரிக்குது. தமிழனுப் பிறந்த ஒவ்வொருத்தனும் இந்தச் சம்பவத்தை மறந்து போறதுர்ப்பாக்கியமே வரக்கூடாது. சுதந்திரம் சுதந்திரம் வ. உ. சி யாலேதான் தமிழ் நாட்டுக்கே இந்த உரிமை உணர்ச்சி உண்டாச்சு! இன்று அவர் மனைவியாரும், குழந்தைகளும் அவருக்கு ஏதாவது ஏற்பட்டா எப்படித் தாங்கப் போருங்களோ! அவங்க குடும்ப நிலை அவ்வளவு சீரழிஞ்சு போச்சு தம்பீ! நட்புக்கு உதாரணம் சொல்லணும்னு, வ. உ. சி.யைத்தான் தம்பீ சொல்லணும்.

அவருக்கு உயிருக்கு உயிராய் இருந்த சுப்ர மண்ய பாரதியார், சுப்ரமண்ய சிவா, கோவை வக்கீல் சி. கே. சுப்ரமண்ய முதலியார் இவர்கள் ஞாபகார்த்தமாகத் தன்னுடைய மகனுக்கு சுப்ர மண்யம் என்று பெயர் வைத்த நன்றியுள்ள பெரியா ரப்பா அவர்.

இளைஞர் : நான் இப்பொழுதே சென்று பார்த்துவிட்டு வருகிறேன்.

பெரிய : போய் வா தம்பீ!

[காட்சி முடிவு]

## காட்சி: 44

இடம் :—சிதம்பரனார் வீடு.

உறுப்பினர் :—வ. உ. சி., மீனாட்சி, குமாரர்கள், மாசிலாமணி, இன்னும் சில தேசபக்தர்கள்.

[வ. உ. சி. மரணப்படுக்கையில் இருக்கிறார். மீனாட்சி அவரது பாதத்தடியில் அமர்ந்திருக்கிறார். குமாரர்கள் நிற்கிறார்கள். ஏனையோர் சூழ்ந்திருக்கின்றனர்.]

**வ.உ.சி :** தம்பி மாசிலாமணி, 'பஞ்சமும், நோயும் நின் மெய்யடியார்க்கோ' என்று இறைவனை நோக்கி முறையிட்டார் என் அருமை நண்பர் பாரதியார். உண்மைதான், பாரத நாட்டின் மீது பற்றுக் கொண்ட நான் வறுமையையும், பிணியையும்தானே பரிசாகப் பெற்றிருக்கிறேன்.

**மாசிலா :** உங்கள் உடல் வலிமை குன்றியுள்ள இந்த நேரத்தில் மனங்கலங்காதிர்கள் அண்ணாச்சி.

**மீனாட்சி :** நீங்கள் இப்பொழுது அமைதியாக உறங்க வேண்டுமென்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.

**வ. உ. சி :** தேசபக்தனுக்கு அமைதியேது? உறக்கம் ஏது? மாசிலாமணி, கூடிய விரைவில் ஏற்படப்போகும் உலகயுத்தத்தின் மூலம், நம் பாரதநாடு சுதந்திரம் அடைந்தே தீரும். இது உறுதி.

**மீனாட்சி :** சுவாமீ, அமைதியாக இருங்கள்.

**வ. உ. சி:** மீனாட்சி, நம் தேசவிடுதலைக்காகச் சிறையிலே செக்கிழுத்தேன் மண் சுமந்தேன் கல்லுடைத்தேன், கைப் பொருள்களையெல்லாம் கரைத்தேன். கடைசிக் காலத்தில் மக்களோடு உன்னைக் கண்ணீர் உதிர்க்கும் நிலையிலும் வைத்துவிட்டேன். இவைகளெல்லாம் எனக்குக் கவலையளிக்கவில்லை. சொல்லொணாத் இந்தத் துன்பங்களையெல்லாம் அநுபவித்த

நான் சுதந்திரத்தைக் காணக் கொடுத்து வைக்காமல் போகிறேனே என்றுதான் கவலைப்படுகிறேன். அடிமை நாட்டிலா என் ஆருயிர் போகவேண்டும்? மீனுட்சி, என் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவாயா?

மீனுட்சி : சொல்லுங்கள் சுவாமி! சொல்லுங்கள்.

வ. உ. சி: என்னருமை நண்பர் பாரதியாரின் 'என்று தணியு மிந்தச் சுதந்திர தாகம்' என்ற பாடலை ஒரு முறை பாடு. நெஞ்சை அடைக்கிறது மீனுட்சி.

மீனுட்சி : பாடுகிறேன் சுவாமி, பாடுகிறேன்.

**என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?**
**என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்?**
**என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?**
**என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?**

**பஞ்சமும் நோயும் நின் மெய்யடி யார்க்கோ?**
**பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?**
**தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?**
**தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?**

**—பாரதி**

[மீனுட்சி இந்தப் பாடலை உருக்கமாகப் பாட, எல்லோரும் கண்ணீர் வடிக்கின்றனர். குத்து விளக்கு அணைகிறது. எல்லோரும் கதறிப் புலம்புகின்றனர்.]

* * *

குரல் : பாரத நாட்டின் பண்பு படைத்த தலைவரை, கப்பலோட்டிய தமிழரை 1936-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் நாள், இந்த மண் மாதா அழைத்துக் கொண்டாள். ஆனுல், வ. உ. சி. கண்ட சுதந்திரக் கனவு அவர் மறைந்த 11-ஆம் ஆண்டு நனவாகி நிலை பெற்றது.

ஆம்! 1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் நம் பாரத நாடு சுதந்திரமடைந்தது.

தமிழ்ப் பெருமக்களே, கப்பலோட்டிய தமிழனை அவருக்கு உறுதுணையாக இருந்த உத்தமத் தியாகிகளைச் சுதந்திர இந்தியா என்றும் மறவாது அஞ்சலி செய்யுமாக! வாழ்க வ. உ. சி. திருநாமம்!

(நாடகம் முற்றிற்று)

வழங்கும் பகுதி